ஸ்ரீ:

ஸகல காரியஸித்தி தரும்

ஸ்ரீ ஸௌந்தர்யலஹரீ

(மூலமும் உரையும்)



தி லிட்டில் ப்ளவர் கம்பெனி
சென்னை - 600 017

|| ஸ்ரீ: ||

ஸர்வஸித்தி நல்கும்

ஸ்ரீ ஸௌந்தர்ய லஹரீ

(श्री सौन्दर्यलहरी)

ஸ்ரீமத் ஆதி சங்கர பகவத்பாதர்

அருளியது

★

தொகுப்பும் கருத்துரையும் :

வித்யாவிசாரத, ந்யாயரத்ந

கீழாத்தூர் ஸ்ரீநிவாஸாச்சாரியர், P.O.L.

சிரோமணி & ஹிந்தீவிசாரத்

பதிப்பகத்தார் :

தி லிட்டில் ப்ளவர் கம்பெனி

தியாகராயநகர் ★ தெப்பக்குளம்

சென்னை-600017 திருச்சி-620002

விலை ரூ.12

முதற் பதிப்பு : 1975
மறு அச்சு : 1978, 1981, 1983, 1985, 1987, 1990, 1991, 1993, 1995, 1996, 1998, 2000, 2003 2004

ISBN - 81- 87130-41-5
அச்சிட்டோர் : சங்கர் பிரிண்டர்ஸ் (பி) லிட். சென்னை 42

3/4

|| ஸ்ரீ: ||



ஸ்ரீ சங்கரபகவத்பாதர்

॥ ஸ்ரீ: ॥

பொருளடக்கம்

3/4

|| ஸ்ரீ: ||

ஸ்ரீ ஸௌந்தர்ய லஹரீ

முன்னுரை

'ஸ்ரீ ஸௌந்தர்ய லஹரி' என்னும் இந்த ஸ்தோத்ரம் ஸ்ரீமத் ஆதிசங்கர பகவத்பாதரால் இயற்றப்பட்டது. இதில் 100 சுலோகங்கள் உள்ளன. பொதுவாக, 'ஸௌந்தர்ய லஹரி' என்று அழைக்கப்படினும் இந்த ஸ்தோத்ரம் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. 1 முதல் 41-வது சுலோகம் வரை, 'ஆனந்த லஹரி' என்றும், 42 முதல் 100 வரையிலான சுலோகங்கள் 'ஸௌந்தர்ய லஹரி' என்றும் கருதப் பட்டு வருகின்றது. 'லஹரீ' என்னும் சொல் 'அலை' என்னும் பொருள் கொண்டது. எனவே, இவ்விரண்டு பகுதிகளையும் முறையே 'ஆனந்த அலை' என்றும், 'அழகின் அலை' என்றும் தமிழில் பெயர்க்கலாம்.

முதற்பகுதியில், மூலாதாரம் முதல் ஸஹஸ்ராரம் வரையிலான சக்ரங்களில் அமர்ந்துள்ள தேவியை உபாஸிப்பவர்களுக்கு அலைபோல் தொடர்ந்து ஆனந்தம் வருவதால் 'ஆனந்த லஹரி' யென்றும், இரண்டாம் பகுதியில் தேவியின் கேசம் முதல் திருவடிவரையிலான திருமேனியழகை வருணிப்பதால் ' ஸௌந்தர்ய லஹரி ' என்றும் பெயர்கள் பொருந்தும்.

பராசக்தியின் பெருமை

'பரமசிவன் பராசக்தியின் உதவியில்லாவிட்டால் அசையவும் முடியாது' என்று பராசக்தியின் பெருமையைக் குறிக்கும் சுலோகத்துடன் ஆரம்பமாகிறது இந்த ஸ்தோத்ரம்.

அந்த பராசக்தி என்பவள் யார்? பார்வதியா? லக்ஷ்மியா? ஸரஸ்வதியா? துர்கையா? அல்லது மற்ற யாராவது ஸ்த்ரீ தேவதையா? என்று கேள்வி எழுவது இயற்கை.

இந்த ஸ்தோத்ரத்தில் கூறப்படும் பராசக்தி மேலே கூறிய எந்த தேவதையும் அல்ல. இவர்களையெல்லாம் படைத்த — இவர்கள் உருவில் காட்சி தருகின்ற — இவர்களுக்கெல்லாம் மூலகாரணமாக உள்ள — தெய்வஸ்வரூபமே பராசக்தி.

இந்த பராசக்தியைப் 'பரப்ரஹ்ம குடும்பினி' (பரப்ரம்மத்தின் பத்தினி) என்கிறார் பகவத்பாதர். அதாவது, ப்ரஹ்ம-விஷ்ணு-ருத்ரர்களாகிய மூவர்க்கும் மேலாகப் பரப்பிரம்மம் என்பது யாதொன்றுண்டோ அந்த பரப்பிரம்மத்தின் பத்தினியே பராசக்திதேவி என்பதாயிற்று.

மற்றும், சுலோகம் 24-ல் ப்ரஹ்ம - விஷ்ணு - ருத்ரர்களுக்கும் மேற்பட்டவன் 'ஈசுவரன்' என்றும், அவனுக்கும் மேலானவன் 'ஸதாசிவன்' என்றும், அவனே பராசக்தியின் அன்பினுலான ஆணைக்குக் கட்டுப்பட்ட கணவனென்றும் கூறப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது.

இதைக்கொண்டு, ஈசுவரதத்வத்தை ப்ரஹ்மமென்றும், ஸ்தாசிவனை அதற்கும் மேலான பரப்ரஹ்மமென்றும் கருத வேண்டியிருக்கிறது.

எனவே, இந்த ஸ்தோத்ரத்தில் குறிப்பிடும் பராசக்தி தத்துவம் — பரப்ரஹ்மத்திற்கு இணையான — ஆனுல் அதையும் தன் அன்பினுல் அடக்கியாளுகின்ற உயர் தத்துவமே என மனத்தில் கொள்ள வேண்டும்.

இந்த பராசக்தி தத்துவமே பார்வதியாகவும், லக்ஷ்மியாகவும், ஸரஸ்வதியாகவும், துர்கையாகவும் மற்றும் பற்பல ஸ்த்ரீ தேவதைகளாகவும் இந்த ஸ்தோத்ரத்தில் பேசப்பட்டிருக்கின்றது.

இந்த பராசக்திக்கு முழுமுதற்கடவுளான பரப்பிரம்மமே அடங்கியதாக இருக்க, ப்ரும்ம-விஷ்ணு-ருத்ரர்களென்னும் (த்ரிமூர்த்திகள்) மூவரும் ஏனைய தேவர்களும் தேவியின் ஆணைக்குட்பட்ட சாதாரண தேவர்களாகவே இங்கு பேசப்பட்டுள்ளனர்.

தேவியின் பல நாமங்கள்

இந்த ஸ்தோத்ரத்திலடங்கிய சுலோகங்களில் தேவியை விளிக்கும்போது, ஸ்ரீ சங்கரபகவத்பாதர், சிவசக்தி, ஹிமகிரிஸுதா, ஹரமஹிஷி, சிவயுவதி, அபர்ணு, பார்வதி, சண்டி, ஸதீ, அம்பா முதலிய திருநாமங்களால் அழைக்கிருர். இவைகளில் பல பார்வதி தேவியைக் குறிப்பனவாக இருப்பினும், பார்வதிக்கும் மூலகாரணமான பராசக்தியே இந்தப் பெயர்களால் அழைக்கப்பட்டதாகக் கருதல் வேண்டும். மற்றும், எல்லா நாமங்களும் தேவியின் நாமமாக இருக்க. இந்நாமங்களால் அவள் அழைக்கப்படுதலும் பொருந்தும்.

இது மந்த்ரசாஸ்திரம்

ஸ்ரீவித்யோபாஸனைக்குரிய பல மந்த்ர-தந்த்ர-யந்த்ரங்கள் அடங்கியது இந்த ஸ்தோத்ரம். ஸ்ரீ வித்யோபாஸகர்கள் யந்த்ரங்களைப் பொன், வெள்ளி, செப்பு, பூர்ஜபத்ரம் முதலியவைகளில் அமைத்து அவைகளில் குறிப்பிட்ட மந்த்ரங்களை அமைத்து—அந்த யந்த்ரங்களுக்குப் ப்ராணப்ரதிஷ்டாதிகள் செய்துத் தரித்து, லௌகிக-பாரமார்த்திக ஸௌகரியங்களை

அடையவேண்டிய முறை பல சுலோகங்களில் வெளிப்படையாகவும் சூசகமாகவும் கூறப்பட்டுள்ளது. அவைகளை ஸ்ரீ வித்யோபாஸகர்களான பெரியோர்களை வணங்கி வழிபட்டுக் கற்கவேண்டும். ஆனால், இந்த ஸ்தோத்ரத்தைப் பாராயணம் செய்தாலே அவரவர் கோரிய பலனை அளிக்கக்கூடிய மஹிமை இந்த ஸ்தோத்ரத்திற்கு உண்டு.

பாராயணமும் ஜபமும்

ஸௌந்தரிய லஹரி சுலோகங்கள் அனைத்தையும்—எந்த பலனையும் எதிர்பாராமல் தேவியின் ப்ரீதிக்காகவே பாராயணம் செய்யலாம்.

அல்லது, அவரவர் விரும்பும் பலனுக்காக ஸங்கல்பம் செய்துகொண்டு, இந்த ஸ்தோத்ரம் முழுவதையும் பாராயணம் செய்யலாம். அல்லது, ஏதாவது ஒரு குறிப்பிட்ட சுலோகத்தை அதன் அடியில் குறிப்பிட்ட எண்ணிக்கையில் ஜபிக்கலாம்.

இதில் ஒவ்வொரு சுலோகத்திற்கும் கீழே, அந்த அந்த சுலோகத்தை, எந்த பலனுக்காக, எத்தனை நாட்கள், தினந்தோறும் எத்தனை தரம், என்ன நியமத்துடன், என்ன நிவேதனத்துடன் ஜபம் செய்யவேண்டுமென்னும் குறிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை வழிகாட்டியாக வைத்துக்கொண்டு, அந்த முறையில் பாராயணம் அல்லது ஜபம் செய்தால் பலன் நிச்சயமாகச் சித்திக்கும்.

சில சுலோகங்களுக்கு ஒரேவிதமான பலன் குறிக்கப்பட்டிருக்கலாம். அவைகளில் தமக்குச் சௌகரியமான ஏதாவதொரு சுலோகத்தை ஜபம் செய்தாலே கோரிய பலனைப் பெறலாம். எனவே, ஆஸ்திக அன்பர்கள் அடுத்த பக்கங்களில் உள்ள வகையில் ஸங்க்ரஹமாக தேவிக்குப் பூஜை செய்தபின் இந்த ஸ்தோத்ரத்தை, அல்லது குறிப்பிட்ட சுலோகத்தை அதற்குரிய நிவேதனம் செய்தபின் பாராயணம் அல்லது ஜபம் செய்தால் தாம் கோரிய பலன்களை விரைவில் பெறலாம்.

பெண்மணிகள், பகல் வேளைகளில் ஒரு பொது இடத்தில் சேர்ந்து இந்த சுலோகங்களைக் கூட்டுப் பிரார்த்தனையாகப் பாராயணம் செய்தால், தேவியின் அருளால் அவரவர் குடும்பத்திற்கும், தேசத்திற்கும் க்ஷேமம் உண்டாவது திண்ணம். அதற்குரிய சிரத்தை, பக்தி, வசதி, வாய்ப்பு எல்லாவற்றையும் ஸ்ரீ பராசக்தி எல்லோருக்கும் அருளவேண்டுமென்று அந்த அன்னையின் அடிபணிந்து வேண்டுகிறேன்.

—**ஆசிரியர்.**

ஸ்ரீ:


ஸ்ரீ ஸௌந்தர்ய லஹரீ

ஸ்ரீ தேவி ஸங்க்ரஹ பூஜை

ஜபம் ஆரம்பிக்குமுன்—

[ஜபத்திற்கு வேண்டிய சாமான்கள்: மஞ்சள் பொடி, குங்குமம், புஷ்பங்கள், அக்ஷதை, புஷ்பமாலை, ஊதுவத்தி, சாம்பிராணி, கற்பூரம், வெற்றிலை, பாக்கு, பழம், தேங்காய், பஞ்சபாத்திரம், உத்தரணி, ஸ்ரீ தேவி படம்.]

ஜபம் செய்யும் ஸ்தலத்தைக் கோமயத்தால் [பசுவின் சாணத்தால்] மெழுகிக் கோலம் போடவேண்டும். ஸ்ரீதேவியின் படத்தை நன்றாக அலங்காரம் செய்துவைத்து, எதிரில் கோலம் போடவேண்டும். கோலம் போட்ட இடத்தில் கீழே காட்டியிருக்கிறபடி த்ரிகோண பிந்துக்களின் மத்தியில் "ஹ்ரீம்" என்று எழுதி (இது யாருடைய காலிலும் படக் கூடாது) அதன் எதிரில் குத்துவிளக்கு ஏற்றி வைக்கவேண்டும்.



ஸ்நாநம் செய்து, மடிவஸ்த்ரம் தரித்து, நெற்றிக்கு அணிந்து, பஞ்சபாத்திரத்தில் தீர்த்தத்துடன் பீடத்தில் கிழக்கு முகமாக அமரவேண்டும்.

ஜபம் ஆரம்பம்

கைகூப்பி கீழ்க்கண்ட ச்லோகம் சொல்லி ஸ்ரீசங்கரபகவத் பாத த்யானம் செய்யவேண்டும் :

ச்ருதி ஸ்ம்ருதி புராணானாம் ஆலயம் கருணாலயம் |
நமாமி பகவத்பாத சங்கரம் லோககசங்கரம் ||

பிறகு, கையில் புஷ்பம் அக்ஷதை எடுத்துக்கொண்டு, கீழ்க் கண்ட மந்த்ரம் சொல்லிக் குட்டிக்கொள்ளவேண்டும் :

சுக்லாம்பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்ப்புஜம் |
ப்ரஸந்நவதநம் த்யாயேத் ஸர்வ விக்நோப சாந்தயே ||

ஸங்கல்பம்

ஓம் தேவீ காயத்ரீ சந்த: ஸவிதா தேவதா, ப்ராணாயாமே விநியோக: | ஓம்பூ:— ஓம்புவ:— ஓம்ஸுவ:—ஓம்மஹ:— ஓம்ஜந:— ஓம்தப:— ஓம்ஸத்யம் — ஓம் தத்ஸவிதுர் வரேண்யம்—பர்கோ தேவஸ்ய தீமஹி—தியோ யோந: ப்ரசோதயாத்—ஓமாப:— ஜ்யோதீரஸ:— அம்ருதம் ப்ரஹ்ம பூர்புவஸ்ஸுவரோம். ஓம் ஓம் ஓம் ||

மமோபாத்த ஸமஸ்த துரிதக்ஷய த்வாரா ஸ்ரீபரமேச்வர ப்ரீத்யர்தம், சுபே சோபநே முஹூர்த்தே அத்யப்ரஹ்மண:— த்விதீய பரார்த்தே, ச்வேத வராஹகல்பே, வைவஸ்வத மந் வந்தரே, அஷ்டாவிம்சதிதமே கலியுகே, ப்ரதமபாதே, ஜம்பூ த்வீபே, பாரத வர்ஷே, பரதகண்டே, சகாப்தே, அஸ்மிந் வர்தமாநாநாம் வ்யாவஹாரிகாணாம் ப்ரபவாதீநாம் ஷஷ்ட்யா: ஸம்வத்ஸராணாம் மத்யே,.........நாமஸம்வத்ஸரே,........ ...அயநே...ருதௌ, மாஸே,...பக்ஷே,...சுபதிதௌ,...நக்ஷத்ரே, ...ராசௌ ஜாதஸ்ய, ஸஹகுடும்பஸ்ய,...சர்மண:மம,*

இக்கோடுகளிட்ட இடத்தைப் பஞ்சாங்கத்தைப் பார்த்தோ அல்லது பெரியவர்களைக் கேட்டோ சொல்லிக்கொள்ளவும்.

தனக்காக ஜபம செய்வதாயிருந்தால் "மம" என்றும், பிறருக் காகச் செய்வதாயிருந்தால் "அஸ்ய யஜமாநஸ்ய" என்றும் சொல்ல வேண்டும்.

ஸ்ரீதேவீப்ரஸாதத்வாரா, க்ஷேம்ஸ்தைர்ய வீர்ய விஜய ஆயுரா ரோக்ய—ஐச்வர்யாணும் அபிவ்ருத்த்யர்த்தம், இஷ்ட காம் யார்த்த ஸித்த்யர்த்தம், **ஸகலலோகக்ஷேமார்த்தம்*** யதா சக்தி ஸ்ரீஸௌந்தர்யலஹரீ ச்லோக ஜபமஹம் கரிஷ்யே.

பிறகு தேவியை ஆவாஹநம் செய்து பூஜை செய்ய வேண்டும். படம் வைத்துச் செய்வதாகயிருந்தால், " அஸ்மிந் சித்ரபடே " என்றும், பாராயண புஸ்தகத்தில் தேவியை ஆவாஹநம் செய்து பூஜை செய்வதாகயிருந்தால் "அஸ்மிந் க்ரந்தே " என்றும் தகுந்தபடி சொல்லவேண்டும்.

ஆவாஹநம், பூஜை

ததர்த்தம் அஸ்மிந் சித்ரபடே-(அஸ்மிந் க்ரந்தே) ஸ்ரீதேவீ பூஜாம் கரிஷ்யே-என்று சொல்லி கீழே சொல்லியிருக்கிறபடி ஆவாஹநம் செய்து பூஜை செய்யவேண்டும்.

அஸ்மிந் சித்ரபடே-(அஸ்மிந் க்ரந்தே)

ஸ்ரீ மஹாத்ரிபுரஸுந்தரீம் தேவீம் ஆவாஹயாமி (புஷ்பம் அக்ஷதை சேர்க்கவும்)

ஸ்ரீ மஹா த்ரிபுரஸுந்தர்யைநம: த்யாயாமி ,,

,, ,, ஆஸநம் ஸமர்ப்பயாமி ,,

,, ,, அர்க்யம் ஸமர்ப்பயாமி (உத்தரணியில் தீர்த்தம் எடுத்துவிடவும்)

,, ,, பாத்யம் ஸமர்ப்பயாமி ,,

,, ,, ஆசமநீயம் ஸமர்ப்பயாமி (தீர்த்தம் எடுத்துவிடவும்)

,, ,, ஸ்நபயாமி (தீர்த்தத்தை ஒரு புஷ்பத்தால் தொட்டுப் ப்ரோக்ஷிக்கவும்)

அந்தந்தப் பலனுக்கு உண்டானதை அந்த சுலோகத்தின் தலைப்பில் உள்ளதுபோல் தக்கபடி சொல்லவேண்டும். ஸ்ரீ ஸௌந்தர்ய லஹரீ முழுவதும் பாராயணம் செய்வதாக இருந்தால், " ஸ்ரீ ஸௌந்தர்ய லஹரீ பாராயணமஹம் கரிஷ்யே " என்று சொல்லிக் கொண்டால் போதும்.

ஸ்ரீ மஹாத்ரிபுரஸுந்தர்யை நம: ஸ்நாநாநந்தரம் ஆசமநீயம் ஸமர்ப்பயாமி (தீர்த்தம் எடுத்து விடவும்)

,, ,, வஸ்த்ரோபவீத புஷ்பமாலாதி நாநாவித ஆபரணானி ஸமர்ப்பயாமி (புஷ்பம் அக்ஷதை சேர்க்கவும்,

,, ,, தூபம் ஆக்ராபயாமி (தூபம் போடவும்)

,, ,, தீபம் தர்ஶயாமி (தீபம் காட்டவும்)

,, ,, சத்ர சாமராத்யசேஷ—உபசாரார்த்தே இமே அக்ஷதா: (அக்ஷதை சேர்க்கவும்)

,, ,, புஷ்பை: பூஜயாமி (கீழ்தரப்பட்டிருக்கும்

,, ,, நாமாக்களுக்குமுன் "ஓம்" என்றும் பின் "நம:" என்றும் (சேர்த்துச் சொல்லி புஷ்பம், அக்ஷதை சேர்க்கவும்)

1. சிவசக்த்யை 2. சரண்யாயை 3. ஹிமகிரிஸுதாயை 4. சிவாகார மஞ்சஸ்திதாயை 5. ஸஹஸ்ராரபத்மவிஹாரிண்யை 6. துஹிநகிரிகந்யாயை 7. சரத்ஜ்யோத்ஸ்நா சுத்தாயை 8. சசியுதஜடாஜூட மகுடாயை 9. வாத்ராஸத்ராணஸ்படிக கடிகாபுஸ்தக தராயை 10. ஜநந்யை 11. ஹரமஹிஷ்யை 12. அம்ருதரஸம் கிரந்த்யை 13. பவாந்யை 14. சிவாயை 15. மஹாமஹிம தாடங்க தாரிண்யை 16. பகவத்யை 17. சிவயுவத்யை 18. புவநபய பங்க வ்யஸநிந்யை 19. உமாயை 20. கோத்ராதரபதி குலோத்தம்ஸ கலிகாயை 21. ஈசாந தயிதாயை 22. பசுபதி பராதீந ஹ்ருதயாயை 23. தரணிதர ராஜந்ய தநயாயை 24. அபர்ணாயை 25. தேவ்யை 26. நகபதி பதாகாயை 27. அசல தநநாயை 28. பார்வத்யை 29. மாத்ரே 30. சண்ட்யை 31. மந்தார ஸ்தபக ஸுபக சரணாயை 32. சாருசரிதாயை 33. த்ருஹிண ஹரி ருத்ரேச்வர மஞ்சாயை 34. சிவ ப்ரச்சத படாயை 35. அருணா க்ருணாயை 36. ஸத்யை 37. ஹர ஸஹசர்யை 38. அம்பாயை.

ஸ்ரீ மஹாத்ரிபுரஸுந்தர்யை நம:	நாரிகேளகண்டம், கதளீ பலம் நிவேதயாமி (தேங்காய் உடைத்து நிவேதனம் செய்யவும்; பழமும் நிவேதனம் செய்யவும்)
,, ,, ,,	கற்பூர நீராஜநம் ஸமர்ப்பயாமி (கற்பூர ஹாரத்தி செய்யவும்)

பிறகு, கீழ்க்கண்ட ந்யாஸம் சொல்லவும்:

அஸ்ய ஸ்ரீ ஸௌந்தர்யலஹரீஸ்தோத்ர மஹா மந்த்ரஸ்ய, ஸ்ரீ சங்கரபகவத்பாத: ருஷி:, அநுஷ்டுப் சந்த:, ஸ்ரீ மஹாத்ரிபுரஸுந்தரீ தேவதா | சிந்தித மநோரத ஸித்த்யர்த்தே ஜபே விநியோக: |

கீழ்க்கண்ட ச்லோகம் சொல்லி, மனதில் தயானித்துக் கொண்டு, எந்த ச்லோகத்தை ஜபம் செய்ய உத்தேசமோ, அதை அந்த சுலோகத்தின் அடியில் குறிப்பிட்ட எண்ணிக்கையில் ஜபம் செய்யவேண்டும்.

த்யானம்

உத்தப்த ஹேம ருசிராம் ரவி சந்த்ர வஹ்நி
நேத்ராம் தநுச்சரயுதாங்குச பாசசூலம் |
ரம்யைர் புஜைஶ்ச தததீம் சிவஶக்திரூபாம்
காமேஶ்வரீம் ஹ்ருதி பஜாமி த்ருதேந்து லேகாம் ||

ஜபம் முடிந்தபின்

'ஸ்ரீ மஹாத்ரிபுரஸுந்தர்யைநம:' ஸமஸ்தோபசாராந் ஸமர்ப்பயாமி (புஷ்பம் அக்ஷதை சேர்க்கவும்) என்று புனப்பூஜை செய்து, கீழ்க்கண்ட ச்லோகங்கள் சொல்லிப் பிரார்த்தனை செய்யவும்.

பிரார்த்தனை

குஹ்யாதிகுஹ்ய கோப்த்ரீத்வம் க்ருஹாணாஸ்மத்க்ருதம் ஜபம் |
ஸித்திர்பவது மே தேவி த்வத்ப்ரஸாதாந் மஹேஶ்வரி ||
அநேந ஸௌந்தர்யலஹரீஶ்லோக ஜபேந (பாராயணேந)
ஸர்வாத்மிகா ஸ்ரீ மஹாத்ரிபுரஸுந்தரீ த்ருப்யது.''

நமஸ்காரம் செய்து ஆசமநம் செய்யவும்.

श्री सौन्दर्यलहरी

प्रथमो भागः — आनन्दलहरी

ஸ்ரீ ஸௌந்தர்யலஹரீ

முதல் பாகம் - ஆனந்தலஹரீ

|| ஸ்ரீ: ||



ஸ்ரீ பராசக்தியின் திருஅவதாரமாகிய

ஸ்ரீ லலிதாபரமேச்வரி

1

ஸ்ரீ பராஶக்த்யை நம:

எல்லா நன்மைகளும் பெற

(ஸகல யோக க்ஷேமார்த்தம்)

பராசக்தியின் பெருமை

शिव: शक्त्या युक्तो यदि भवति शक्त: प्रभवितुं
न चेदेवं देवो न खलु कुशल: स्पन्दितु-मपि ।
अतस्त्वा-माराध्यां हरि-हर-विरिञ्चादिभि-रपि
प्रणन्तुं स्तोतुं वा कथ-मकृतपुण्य: प्रभवति ॥ १ ॥

*ஶிவஃ ஶக்த்யா யுக்தோ யதி பவதி ஶக்தஃ ப்ரபவிதும்
ந சேதேவம் தேவோ ந கலு குஶலஃ ஸ்பந்திது-மபி ।
அதஸ்-த்வா-மாராத்யாம் ஹரி-ஹர-விரிஞ்சாதிபி-ரபி
ப்ரணந்தும் ஸ்தோதும் வா கத-மக்ருத-புண்யஃ
ப்ரபவதி ॥ 1 ॥*

கருத்துரை

தாயே, பரமசிவன் பராசக்தியாகிய உன்னுடன் சேர்ந்திருந்தால்தான் ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் என்னும் முத்தொழிலையும் செய்யமுடியும். நீ அவருக்கு உறுதுணையாக இல்லாவிடில் அந்த இறைவன் அசையவும் முடியாது. எனவே, ஹரி ஹரன், பிரமன் முதலானவர்களனைவரும் போற்றும் பெருமை பெற்ற உன்னை, முற்பிறவிகளில் புண்ணியம் செய்யாதவன் எப்படித் துதிக்கமுடியும்?

ஜப முறையும் பலனும்

காலையில் கிழக்கு முகமாக அமர்ந்து, 12 நாட்கள் தினந்தோறும் இந்த ஶ்லோகத்தை 1000 தரம் ஜபித்தால், தடைகளெல்லாம் நீங்கி, எடுத்த காரியம் எல்லாம் நிறைவேறும். எல்லா நன்மைகளையும் பெறலாம்.

நிவேதனம் : *நெய் சேர்த்த அன்னமும் வடையும்.*

2

ஸ்ரீ தேவ்யை நம:

ஜடப் பொருள்களால் தடை நீங்க

(பஞ்சபூத விஜயார்த்தம்)

தேவியின் பாததூளி மகிமை

तनीयांसं पांसुं तव चरण-पङ्केरुह-भवं
विरिञ्चिः संचिन्वन् विरचयति लोका-नविकलम् ।
वहत्येनं शौरिः कथमपि सहस्रेण शिरसां
हरः संक्षुद्यैनं भजति भसितोद्धूलन-विधिम् ॥ २ ॥

தநீயாம்ஸம் பாம்ஸூம் தவ சரண-பங்கேருஹ-பவம்
விரிஞ்சிஃ ஸஞ்சிந்வந் விரசயதி லோகா-நவிகலம் |
வஹத்யேநம் ஶௌரிஃ கதமபி ஸஹஸ்ரேண ஶிரஸாம்
ஹரஃ ஸம்க்ஷுத்யைநம் பஜதி பஸிதோத்தூளந-விதிம்||2||

கருத்துரை

தாயே, தாமரை மலர்கள் போன்ற நின் திருவடிகளிலிருந்து தோன்றிய மிகச் சிறிய தூளியை ஒவ்வொன்றாகச் சேர்த்து வைத்துக்கொண்டு பதினான்கு லோகங்களையும் பிரம்ம தேவன் விசாலமாகப் படைக்கிறார். அவ்வாறே, மஹாவிஷ்ணுவும் ஆதிசேஷன் என்னும் உருவில், பதினான்கு லோகங்களாக உருவாகியுள்ள இந்த உன் பாத தூளியைத் தன் ஆயிரந் தலைகளால் சிரமப்பட்டுத் தாங்குகிறார். பரமசிவனும் உன் பாத தூளியை மேலும் நன்கு பொடி செய்து விபூதியாக உடல் முழுவதும் தரிக்கிறார்.

ஜப முறையும் பலனும்

காலையில், வடக்கு முகமாக அமர்ந்து மேற்கண்ட சுலோகத்தை 1000 தடவை, 55 நாட்கள் ஜபம் செய்பவர்களுக்கு ஞானம், செல்வம், புத்ர ஸந்ததி, பதவி, புகழ் முதலிய ஸகல நன்மைகளும் உண்டாகும். ஜடப் பொருள்களால் ஏற்படும் தடைகள் நீங்கும்.

நிவேதனம் : பால் பாயஸம்.

3

ஸ்ரீ சிந்தாமணயே நமஃ

வேதப் பொருள் விளங்க

(வைதிகார்த்த விஜ்ஞாநார்த்தம்)

விரும்பியதை அளிக்கும் பாததூளி

अविद्यानामन्तस्तिमिर-मिहिर-द्वीपनगरी
जडानां चैतन्य-स्तबक-मकरन्द-स्रुतिझरी ।
दरिद्राणां चिन्तामणिगुणनिका जन्मजलधौ
निमग्नानां दंष्ट्रा मुररिपु-वराहस्य भवति ॥ ३ ॥

அவித்யாநா - மந்தஸ்திமிர - மிஹிர - த்வீப - நகரீ
ஜடாநாம் சைதந்ய - ஸ்தபக - மகரந்த ஸ்ருதிஜரீ |
தரித்ராணாம் சிந்தாமணி - குணநிகா ஜந்மஜலதௌ
நிமக்நாநாம் தம்ஷ்ட்ரா முரரிபு - வராஹஸ்ய பவதி || 3 ||

கருத்துரை

அம்பிகையே, இந்த உன்னுடைய பாததூளி, அஞ்ஞான மாகிய இருளையகற்றுபவனான பகலவன் தோன்றும் தீவு; மூடர்களுக்கு ஞானமென்னும் தேன் பிரவாகம்; ஏழைகளுக்குச் சிந்தாமணி; பிறவிக்கடலில் மூழ்கியவர்களுக்கு வராஹப் பெருமானின் (பூமியைத் தாங்கிய) கோரப் பல்.

ஜப முறையும் பலனும்

காலையில், வடகிழக்கு திக்கு நோக்கி உட்கார்ந்து, 45 நாட்கள், நாள்தோறும் இந்த சுலோகத்தை 2000 தரம் ஜபம் செய்தால், வேதங்களிலும் ஸகல கலைகளிலும் வல்லமையுண்டாகும். செல்வமும் உண்டாகும்.

நிவேதனம்: உளுந்து வடை.

4

ஸ்ரீ லோகஶரண்யாயை நம:

வியாதிகள் நீங்க

(ஸர்வ வ்யாதி நிவாரணார்த்தம்)

தேவியின் திருவடி மகிமை

त्वदन्यः पाणिभ्या-मभयवरदो दैवतगण:
त्वमेका नैवासि प्रकटित-वराभीत्यभिनया ।
भयात् त्रातुं दातुं फलमपि च वाञ्छासमधिकं
शरण्ये लोकानां तव हि चरणावेव निपुणौ ॥ ४ ॥

த்வதந்ய: பாணிப்ப்யா-மபயவரதோ தைவதகண:
த்வமேகா நைவாஸி ப்ரகடித-வராபீத்யபிநயா |
பயாத் த்ராதும் தாதும் பலமபி ச வாஞ்ச்சா-ஸமதிகம்
ஶரண்யே லோகானாம் தவ ஹி சரணாவேவ நிபுணௌ || 4 ||

கருத்துரை

தாயே, உன்னைத் தவிர, மற்ற தேவர்களெல்லாம், அபயம் வரதம் என்னும் ஹஸ்த முத்திரைகளைக் காட்டுகிறார்கள். நீ ஒருவள் தான் அந்த அபிநயங்களைச் செய்வதில்லை. ஏனென்றால், உன்னுடைய திருவடிகளே பயத்திலிருந்து காக்கின்றன. அவைகளே, அவரவர் விரும்பியதற்கு அதிகமாகவே வரம் அளித்து விடுகின்றன.

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு முகமாக அமர்ந்து, 36 நாட்கள் தினந்தோறும் 3000 தரம் இந்த சுலோகத்தை ஜபம் செய்தால், எல்லா விதமான நோய்களும், மற்ற பயங்களும் நீங்கும். பட்டம் பதவிகள் கிடைக்கும்.

நிவேதனம்: எலுமிச்சம்பழச் சாதம்.

5

ஸ்ரீ ஸௌபாக்யஜநந்யை நம:

அனைவரையும் வசீகரிக்க

(ஸர்வ ஜந வசீகரணார்த்தம்)

ஸ்ரீ தேவி பூஜை மஹிமை

हरिस्त्वामाराध्य प्रणत-जन-सौभाग्य-जननीं
पुरा नारी भूत्वा पुररिपुमपि क्षोभ-मनयत् ।
स्मरोऽपि त्वां नत्वा रतिनयन-लेह्येन वपुषा
मुनीनामप्यन्तः प्रभवति हि मोहाय महताम् ॥ ५ ॥

ஹரிஸ்-த்வா-மாராத்ய ப்ரணத-ஜந-ஸௌபாக்ய-ஜநநீம்
புரா நாரீ பூத்வா புரரிபுமபி க்ஷோப - மநயத் |
ஸ்மரோऽபி த்வாம் நத்வா ரதி-நயந-லேஹ்யேந வபுஷா
முநீநா-மப்யந்த: ப்ரபவதி ஹி மோஹாய மஹதாம் ||5||

கருத்துரை


தாயே, நீ வணங்கியவர்களுக்குச் செல்வமெல்லாம் அளிப்பவள்; உன்னைப் பூஜித்துத்தான் ஒரு சமயம் மஹா விஷ்ணு பெண்ணுருவம் கொண்டு, பரமசிவனையும் மோக மடையச் செய்தார். அவ்விதமே மன்மதனும் உன்னை வணங்கித்தான் மிக்க அழகு பெற்று, முனிவர்களின் மனத்தையும் கலங்கும்படி செய்ய முடிகிறது.

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு முகமாக அமர்ந்து, 8 நாட்கள் தினந் தோறும் 2000 தரம் இந்த சுலோகத்தை ஜபம் செய்தால் ஆண் பெண்களிடையே ஏற்பட்டுள்ள கருத்து வேற்றுமை நீங்கி ஒற்றுமை உண்டாகும். எல்லோரையும் வசீகரிக்கும் சக்தி உண்டாகும்.

நிவேதனம்: வெண் பொங்கல்.

|| ஸ்ரீ: ||



ஸ்ரீ பராசக்தியின் திரு அவதாரமாகிய

ஸ்ரீ அந்நபூர்ணா தேவி

6

ஸ்ரீ ஹிமகிரிஸுதாயை நமஃ

தம்பதிகளுக்குள் ப்ரேமை ஏற்பட

(தம்பத்யோஃ ப்ரேமமைத்ரீ ஸித்யர்த்தம்)

தேவியின் கடைக்கண் கருணை

धनुः पौष्पं मौर्वी मधुकरमयी पञ्च विशिखाः
वसन्तः सामन्तो मलयमरु-दायोधन-रथः ।
तथाप्येकः सर्वं हिमगिरिसुते कामपि कृपां
अपांगात्ते लब्ध्वा जगदिद-मनङ्गो विजयते ॥ ६ ॥

தநுஃ பௌஷ்பம் மௌர்வீ மதுகரமயீ பஞ்ச விஶிகாஃ
வஸந்தஃ ஸாமந்தோ மலயமரு - தாயோதந - ரதஃ
ததாப்யேகஃ ஸர்வம் ஹிமகிரிஸுதே காமபி க்ருபாம்
அபாங்காத்தே லப்த்வா ஜகதித-மநங்கோ விஜயதே ॥ 6 ॥

கருத்துரை

மன்மதனுக்கு புஷ்பம் வில்; வண்டுகள் நாண் கயிறு; ஐந்து பாணங்களும் புஷ்பங்கள்; வஸந்த ருது மந்திரி; மலைய மாருதம் என்னும் தென்றல் போருக்குரிய ரதம்; இவைக ளெல்லாம் வலிவில்லாதவை; நிலையில்லாதவை; ஆயினும், மன்மதன் உன் கடைக்கண் பார்வையால் கிடைத்த அருளினால், தனித்து நின்று இவ்வுலகனைத்தையும் வெற்றி கொள்கின்றானன்றோ!

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு அல்லது வடக்கு முகமாக உட்கார்ந்து, 21 நாட்கள், தினந்தோறும் 500 தரம் இந்த சுலோகத்தை ஜபம் செய்தால், தம்பதிகளுக்கிடையே ஒற்றுமை ஏற்படும். ஆண்மையற்றவனுக்கும் ஆண்மையுண்டாகி புத்திர ஸந்ததியும் ஏற்படும்.

நிவேதனம்: கரும்பு.

7

ஸ்ரீ ஆஹோபுருஷிகாயை நம:

சத்துருக்களை வெற்றி கொள்ள

(சத்ரு ஜயார்த்தம்)

ஸ்ரீ தேவியின் திவ்ய ரூபம்

क्वणत्कांची-दामा करिकलभ-कुंभ-स्तन-नता
परिक्षीणा मध्ये परिणत-शरच्चन्द्र-वदना ।
धनु-र्बाणान् पाशं सृणिमपि दधाना करतलैः
पुरस्ता-दास्तां नः पुरमथितु-राहो-पुरुषिका ॥ ७ ॥

க்வணத் காஞ்சீ - தாமா கரிகலப - கும்ப - ஸ்தந - நதா
பரிக்ஷீணு மத்த்யே பரிணத - ஶரச்சந்த்ர - வதநா ।
தநுர்-பாணாந் பாஶம் ஸ்ருணி-மபி ததாநா கரதலை:
புரஸ்தா-தாஸ்தாம் ந: புரமதிது-ராஹோ-புருஷிகா ॥ 7 ॥

கருத்துரை

அம்பிகை சிறிய மணிகள் ஒலிக்கும் ஒட்டியாணம் அணிந்தவள்; யானையின் மத்தகம் போன்று பெருத்த ஸ்தனங்களால் சற்று வணங்கினவள்; சிறிய இடையுள்ளவள்; சரத்காலத்துப் பூர்ணசந்திரன் போன்ற திருமுகமுள்ளவள்; வில், பாணம், பாசக்கயிறு, ஈட்டி இவைகளை நான்கு கைகளிலும் தரித்தவள். இத்தகைய, அஹங்கார (சிவசக்தி) ஸ்வரூபிணியான பரதேவதை எங்கள் எதிரில் நின்று காட்சியளிக்கட்டும்.

ஜப முறையும் பலனும்

கிழக்கு முகமாக அமர்ந்து, 12 நாட்கள் தினந்தோறும் 1000 தரம் இந்த சுலோகத்தை ஜபம் செய்தால் அரசாங்க காரியங்கள் அனைத்தும் நிறைவேறும். பகைவரை வெல்லலாம்.

நிவேதனம்: அன்னமும் பாயசமும்.

8

ஸ்ரீ சிதாநந்தலஹர்யை நமஃ

ஸம்ஸார பந்தம் நீங்க

(ஸம்ஸார பந்த விமோசநார்த்தம்)

தேவியின் வாஸஸ்தானம்

सुधासिन्धोर्मध्ये-सुरविटपि-वाटी-परिवृते
मणिद्वीपे नीपोपवनवति चिन्तामणि-गृहे ।
शिवाकारे मञ्चे परमशिव-पर्यङ्कनिलयां
भजन्ति त्वां धन्याः कतिचन चिदानन्द-लहरीम् ॥

ஸுதா-ஸிந்தோர்-மத்யே ஸுரவிடபி-வாடீ-பரிவ்ருதே
மணித்வீபே நீபோபவநவதி சிந்தாமணி க்ருஹே
ஶிவாகாரே மஞ்சே பரமஶிவ-பர்யங்க-நிலயாம்
பஜந்தி த்வாம் தந்யாஃ கதிசந சிதாநந்த-லஹரீம் || 8 ||

கருத்துரை

தாயே, அமுதக் கடலின் நடுவில், கற்பகத் தருக்களால் சூழப்பட்ட ரத்தினமயமான தீவில், கதம்ப மரங்கள் நிறைந்ததும் சிந்தாமணிகளால் அமைந்ததுமான அரண்மனையில், முக்கோண வடிவிலுள்ள கட்டிலில், பரமசிவனாகிய படுக்கைமீது அமர்ந்தவளும் ஞான-ஆனந்த அலை போன்றவளுமான உன்னை ஒரு சில புண்ணியசாலிகளே தியானம் செய்கிறார்கள்.

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு அல்லது வடக்கு முகமாக உட்கார்ந்து, 12 நாட்கள் தினந்தோறும் 1000 தரம் இந்த சுலோகத்தை ஜபம் செய்தால், ஸம்ஸார பந்தங்கள் நீங்கும்; சிறைவாஸ பயம் நீங்கும்; எண்ணியவை நிறைவேறும்.

நிவேதனம்: மிளகுச் சாதமும், பாயஸமும்.

9

ஸ்ரீ ஸஹஸ்ராா பத்ம விஹாரிண்யை நமஃ

பஞ்ச பூதங்கள் ஸ்வாதீனமாக

(பஞ்சபூத வஶ்யதா ஸித்த்யர்த்தம்)

தேவி ஸஞ்சரிக்கும் இடம்

महीं मूलाधारे कमपि मणिपूरे हुतवहं
स्थितं स्वाधिष्ठाने हृदि मरुत-माकाश-मुपरि।
मनोऽपि भ्रूमध्ये सकलमपि भित्वा कुलपथं
सहस्रारे पद्मे सह रहसि पत्या विहरसे ॥ ९ ॥

மஹீம் மூலாதாரே கமபி மணிபூரே ஹுதவஹம்
ஸ்த்திதம் ஸ்வாதிஷ்ட்டாநே ஹ்ருதி மருத-மாகாஶ-முபரி|
மநோऽபி ப்ரூமத்யே ஸகலமபி பித்வா குலபதம்
ஸஹஸ்ராரே பத்மே ஸஹ ரஹஸி பத்யா விஹரஸே || 9 ||

கருத்துரை

தாயே, மூலாதாரத்திலிருக்கும் பூமி தத்துவத்தையும், மணி பூரகத்திலுள்ள ஜலதத்துவத்தையும், ஸ்வாதிஷ்டானத்திலுள்ள அக்னி தத்துவத்தையும், ஹ்ருதயாகாசத்தில் அமைந்த அநாஹத சக்கரத்தில் உள்ள வாயுதத்துவத்தையும், விசுத்தி சக்கரத்திலுள்ள ஆகாச தத்துவத்தையும், புருவங்களின் இடையே ஆஜ்ஞாசக்கரத்தில் உள்ள மனஸ் தத்துவத்தையும் பிளந்து கொண்டுபோய், மேலே ஆயிரம் தளமுள்ள ஸஹஸ்ராரமென்னும் தாமரை மலரில் நீ உன் கணவனோடு களிப்புற்றிருக்கின்றாய்.

ஜப முறையும் பலனும்

காலையில் 45 நாட்கள், தினந்தோறும் 1000 தரம் இந்த சுலோகத்தை ஜபித்தால், விட்டுப்பிரிந்த பந்துக்கள் வந்து சேருவர். அவர்கள் சென்ற திக்கை நோக்கி ஜபம் செய்ய வேண்டும். பஞ்ச பூதங்களும் சுவாதீனமாகும்.

நிவேதனம் : பால் பாயஸம்.

10

ஸ்ரீ குலகுண்ட குஹரிணீ ஸ்வாமிந்யை நம:

சரீர சுத்தியுண்டாக

(ஶரீர ஶுத்த்யர்த்தம்)

ஆதார சக்ர வாஸிநீ தேவி

सुधाधारासारै-श्चरणयुगलान्त-र्विगलितैः
प्रपंचं सिञ्चन्ती पुनरपि रसाम्नाय-महसः ।
अवाप्य स्वां भूमिं भुजगनिभ-मध्युष्ट-वलयं
स्वमात्मानं कृत्वा स्वपिषि कुलकुण्डे कुहरिणि ॥ १० ॥

ஸுதாதாராஸாரைஶ்-சரணயுகலாந்தர்-விகலிதைஃ
ப்ரபஞ்சம் ஸிஞ்சந்தீ புநரபி ரஸாம்நாய மஹஸஃ ||
அவாப்ய ஸ்வாம் பூமிம் புஜகநிப-மத்த்யுஷ்ட-வலயம்
ஸ்வமாத்மாநம் க்ருத்வா ஸ்வபிஷி குலகுண்டே
குஹரிணி || 10 ||

கருத்துரை

தாயே, உன் திருவடிகளிலிருந்து பெருகுகின்ற அமிர்தத்தின் பிரவாகத்தால், உடலிலுள்ள எழுபத்திரண்டாயிரம் நாடிகளை நனைக்கிறாய். பிறகு சந்திரமண்டலத்திலிருந்து உன் இருப்பிடமான ஆதார சக்ரத்தை அடைந்து, தன் உருவத்தைச் சர்ப்பம் போல் வட்டமாக அமைத்துக் கொண்டு சிறிய துவாரமுள்ளதும், தாமரைக் கிழங்கு போன்றதுமான மூலாதார சக்கரத்தில் யோக நித்திரையில் அமர்ந்திருக்கிறாய்.


ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு முகமாக அமர்ந்து, 6 நாட்கள், தினந்தோறும் 1000 தரம் இந்த சுலோகத்தை ஜபித்தால் சரீர சுத்தியுண்டாகும். ஆண்மையற்றவருக்கு ஆண்மையும், மாதவிடாய் சரியாக இல்லாதவர்களுக்குச் சரியாதலும், தாய்ப்பால் இல்லாத குழந்தைகளுக்கு தாய்ப்பால் கிடைத்தலும் ஏற்படும்.

நிவேதனம்: பழம்.

|| ஸ்ரீ: ||

ஸ்ரீ சக்ரம்



ஸ்ரீ சக்ரத்தின் ஸ்வரூபம் எத்தகையது என்பதைத் தெரிவிப்பதற்காக மட்டுமே இங்கு தரப்பட்டுள்ளது. ஆசார்யோபதேசம் பெறக்கூடிய தகுதியும் ஆசாரானுஷ்டானங்களும் உள்ளவர்கள் மட்டுமே இதைப் பயன்படுத்தலாம்.

11

ஸ்ரீ மூலப்ரக்ருதயே நம:

மலடு நீங்க

(ஸத்புத்ராவாப்த்யர்த்தம்)

ஸ்ரீசக்ர வர்ணனே

चतुर्भिः श्रीकण्ठैः शिवयुवतिभिः पञ्चभिरपि
प्रभिन्नाभिः शंभोर्नवभिरपि मूलप्रकृतिभिः ।
चतुश्चत्वारिंशद्-वसुदल-कलाश्र-त्रिवलय-
त्रिरेखाभिः सार्धं तव चरणकोणाः परिणताः ॥ ११ ॥

சதுர்ப்பிஃ ஸ்ரீகண்டைஃ மிவ யுவதிபிஃ பஞ்சபிரபி
ப்ரபிந்நாபிஃ ஸம்போர்-நவபிரபி மூலப்ரக்ருதிபிஃ |
சதுஸ்சத்வாரிம்ஸத்-வஸுதல-கலாஸ்ர-த்ரிவலய-
த்ரிரேகாபிஃ ஸார்த்தம் தவ சரணகோணுஃ
பரிணதாஃ || 11 ||

கருத்துரை

(ஸ்ரீசக்ரத்தின் சொரூபம் இந்த சுலோகத்தில் கூறப் படுகிறது.) ஹே! பகவதி, சிவஸ்வரூபமான நான்கு சக்கரங்கள். இவைகளைக் காட்டிலும் வேறுபட்ட சக்தி ஸ்வரூபமான ஐந்து சக்கரங்கள் ; மூலகாரணமான தாதுக்கள் ஒன்பது ;' உன்னுடைய பிந்துஸ்தான மந்தர கோணங்கள்; எட்டு தளங்கள் ; பதினாறு தளங்கள்; மூன்று மேகலைகள்; மூன்று ப்ராகாரங்கள் ; ஆக இவைகள் 44 தத்துவங்களாக அமைந்துள்ளன.

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு முகமாக அமர்ந்து, 8 நாட்கள், தினந் தோறும் 1000 தரம் இந்த சுலோகத்தை ஜபம் செய்தால் புத்ர ஸந்ததி இல்லாதவர்களுக்கு ஸத்புத்ர லாபம் உண்டாகும்.

நிவேதனம் : வெல்லப் பாயஸமும், மஹாநைவேத்தியமும்.

12

ஸ்ரீ துஹிநகிரி கந்யாயை நமஃ

கவிதை உண்டாக

(கவித்வ ப்ராப்த்யர்த்தம்)

தேவியின் அழகு

त्वदीयं सौन्दर्यं तुहिनगिरिकन्ये तुलयितुं
कवीन्द्राः कल्पन्ते कथमपि विरिञ्चि-प्रभृतयः ।
यदालोकौत्सुक्या-दमरललना यान्ति मनसा
तपोभि-र्दुष्प्रापामपि गिरिश-सायुज्य-पदवीम् ॥ १२ ॥

த்வதீயம் ஸௌந்தர்யம் துஹிநகிரிகந்யே துலயிதும்
கவீந்த்ராஃ கல்பந்தே கதமபி விரிஞ்சி-ப்ரப்ருதயஃ |
யதாலோகௌத்ஸுக்யா-தமரலலநா யாந்தி மநஸா
தபோபிர்-துஷ்ப்ராபாமபி கிரிஶ-ஸாயுஜ்யபதவீம் || 12 ||

கருத்துரை

பனிமலையரசனின் கன்னிகையே! உன் உடலழகை வருணிப்பதற்குப் பிரமன் முதலான மஹாகவிகளுக்கும் இயலாது. ரம்பை, ஊர்வசி முதலிய தேவகன்னிகைகள் உன் அழகைப் பார்க்க வேண்டுமென்ற ஆவலினால் விரதங்களை அநுஷ்டித்து, சிவஸாயுஜ்யத்தை மனத்தினால் அடைகிறார்கள். (சிவஸாயுஜ்யம் பெற்றால் சிவனுக்கு மட்டுமே விளங்கும் உன் அழகு அவர்களுக்கும் விளங்குமல்லவா?)

ஜப முறையும் பலனும்

முதலில் ஒரு பாத்திரம் நிறைய ஜலம் எடுத்து, அந்த ஜலத்தில் ஒரு நீளவட்டத்தில் நாற்கோணம் எழுதி, அதன் நடுவே ஸௌஃ ஸௌஃ என்று எழுதி, அந்த ஜலத்தை ஜபம் முடிந்தவுடன் சாப்பிடவும்.

காலையில், கிழக்கு முகமாக அமர்ந்து, 45 நாட்கள், தினந்தோறும் 1000 தரம் இந்த சுலோகத்தை ஜபம் செய்த பின் மேற்கண்டவாறு ஜலத்தை அருந்தச் செய்தால் ஊமையும் பேசுவான். படித்தவன் பேச்சில் வல்லவனாவான். கவிதையும் புனைவான்.

நிவேதனம்: தேன்.

13

ஸ்ரீ தேவ்யை நமஃ

ஸ்த்ரீ வச்யம் ஆக

(ஸ்த்ரீவஶ்யதா ப்ராப்த்யர்த்தம்)

கடைக்கண் பார்வை மகிமை

नरं वर्षीयासं नयनविरसं नर्मसु जडं
तवापांगालोके पतित-मनुधावन्ति शतशः ।
गलद्वेणीबन्धाः कुचकलश-विस्रस्त-सिचया
हठात् त्रुटयत्काञ्च्यो विगलित-दुकूला युवतयः ॥१३॥

நரம் வர்ஷீயாம்ஸம் நயநவிரஸம் நர்மஸு ஜடம்
தவாபாங்காலோகே பதித-மநுதாவந்தி ஶதஶஃ
கலத்வேணீபந்தாஃ குசகலஶ-விஸ்ரஸ்த-ஸிசயா
ஹடாத் த்ருட்யத்-காஞ்ச்யோ விகலித-துகூலா
யுவதயஃ ॥ 13 ॥

கருத்துரை

ஹேதேவி, உன் கடைக்கண் பார்வையில் அகப்பட்டவன், கிழவனுகவோ, பார்ப்பதற்குக் குரூபியாகவோ சக்தியற்ற வனுகவோ இருந்தாலும், அழகிய யௌவனப் பெண்கள் வெட்கத்தை விட்டு ஆசையோடு அவனைப் பின் தொடர்ந்து ஓடிவருவார்கள்.

ஜப முறையும் பலனும்

காலையில் கிழக்கு முகமாக அமர்ந்து, 6 நாட்கள், தினந் தோறும் 1000 தரம் ஜபம் செய்தால், தார்மிக முறையில் தாம் விரும்பும் பெண்ணை அடைவதற்கு ஏற்பட்ட தடைகள் நீங்கி அந்த ஸ்த்ரீ லாபம் ஏற்படும். (அதர்ம வழியில் முயற்சித் தால் விபரீத பலன்தான் கிடைக்கும்).

நிவேதனம் : த்ரிமதுரம் அல்லது அன்னம்.

14

ஸ்ரீ பகவத்யை நம:

துர்பிக்ஷம் நீங்க

(துர்பிக்ஷாதிபீடா பரிஹாரார்த்தம்)

ஆதார சக்ரத்தின் மேலுள்ள தேவி

क्षितौ षट्पञ्चाशद्-द्विसमधिक-पञ्चाश-दुदके
हुताशे द्वाषष्टि-श्चतुरधिक-पञ्चाश-दनिले ।
दिवि द्विःषट्त्रिंशन् मनसि च चतुःषष्टिरिति ये
मयूखा-स्तेषा-मप्युपरि तव पादांबुज-युगम् ।। १४ ।।

க்ஷிதௌ ஷட்பஞ்சாஶத்-த்விஸமதிக-பஞ்சாஶ-துதகே
ஹுதாஶே த்வாஷஷ்டிஶ் சதுரதிக பஞ்சாஶ-தநிலே |
திவி த்விஷ் ஷட்த்ரிம்ஶந்-மநஸி ச சதுஷ்ஷஷ்டிரிதி யே
மயூகாஸ்-தேஷா-மப்யுபரி தவ பாதாம்புஜ-யுகம் || 14 ||

கருத்துரை

தாயே, ப்ருதிவீ தத்துவமான மூலாதாரத்தில் 56 கிரணங்களும், ஜல தத்துவமாகிய மணிபூரகத்தில் 52 கிரணங்களும், அக்னி தத்துவமாகிய ஸ்வாதிஷ்டானத்தில் 62 கிரணங்களும், வாயு தத்துவமாகிய அநாஹதத்தில் 54 கிரணங்களும், ஆகாச தத்துவமாகிய விசுத்தி சக்கரத்தில் 72 கிரணங்களும், மனஸ்தத்துவமாகிய ஆஜ்ஞா சக்கரத்தில் 64 கிரணங்களும் உள்ளன என்பது சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ளது. இந்த கிரணங்களுக்கும் மேலே உள்ள ஸஹஸ்ரார கமலத்தின் மத்தியில் உன் திருவடிகள் விளங்குகின்றன.

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு முகமாக அமர்ந்து, 45 நாட்கள், தினந்தோறும் 1000 தரம் இந்த சுலோகத்தை ஜபம் செய்தால், நாட்டிலோ வீட்டிலோ ஏற்பட்டிருக்கும் பற்றுக்குறைகளும், கலவரங்களும் நீங்கி சுபிக்ஷமும், அமைதியும் ஏற்படும்.

நிவேதனம்: பால் பாயஸம்.

15

ஸ்ரீ ஶரஜ்ஜ்யோத்ஸ்நா ஶுத்தாயை நம:

கவிதை புனையும் வல்லமை ஏற்பட

(ஸத்கவித்வ ரசந படிஷ்டதா ஸித்யர்த்தம்)

கவிதை அளிப்பவள்

शरज्ज्योत्स्ना-शुद्धां शशियुत-जटाजूट-मकुटां
वर-त्रास-त्राण-स्फटिकघटिका-पुस्तक-कराम् ।
सकृन्न त्वा नत्वा कथमिव सतां सन्निदधते
मधु-क्षीर-द्राक्षा-मधुरिम-धुरीणाः फणितयः ॥ १५ ॥

ஶரஜ்-ஜ்யோத்ஸ்நா ஶுத்தாம் ஶஶியுத-ஜடாஜூட-மகுடாம்
வர-த்ராஸ-த்ராண-ஸ்படிக கடிகா-புஸ்தக - கராம் ।
ஸக்ருந் நத்வா ந த்வா கதமிவ ஸதாம் ஸந்நிதததே
மது-க்ஷீர-த்ராக்ஷா-மதுரிம-துரீணாః பணிதயः ॥ 15 ॥

கருத்துரை

ஹே பராசக்தியே, நீ சரத்காலத்துச் சந்திரனைப்போல் வெளுப்பானவள்; சந்திர கலையையும் நவரத்தின கிரீடத்தையும் முடியில் தரிப்பவள். வரத முத்திரை, அபய முத்திரை, ஸ்படிகமாலை, புஸ்தகம் இவைகளைக் கரங்களில் தாங்குபவள். உன்னை ஒரு தரம் வணங்கும் பக்தர்களுக்கு தேன், பால், திராட்சை இவைகளைக் காட்டிலும், அதிகமாக இனிக்கும் சொல் நயங்கள் ஏன் வந்து சேராது?

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு முகமாக அமர்ந்து, 45 நாட்கள், தினந் தோறும் 1000 தரம் இந்த சுலோகத்தை ஜபம் செய்தால் நல்ல கவிதைகள் இயற்றும் வல்லமையும், பரீக்ஷைகளில் வெற்றியும் ஏற்படும். ஜலத்தில் ஒரு வட்டம் வரைந்து, அதன் நடுவே 6 முறை 'ஸம்' என்னும் பீஜாக்ஷரத்தையும் எழுதி, ஜபமுடிவில் அந்த ஜலத்தை அருந்தவும்.

நிவேதனம்: தேன், பழம், சர்க்கரை.

16

ஸ்ரீ ஶ்ருங்கார லஹர்யை நம:

சபையோரை மகிழ்விக்க

(அஶேஷ ஸப்யப்ரீணந ஶக்தி ஸித்யர்த்தம்)

கல்வி அளிப்பவள்

कवीन्द्राणां चेतः कमलवन-बालातप-रुचिं
भजन्ते ये सन्तः कतिचिदरुणामेव भवतीम् ।
विरिञ्चि-प्रेयस्या-स्तरुणतर-शृङ्गारलहरी-
गभीराभि-र्वाग्भि-र्विदधति सतां रञ्जनममी ॥ १६ ॥

கவீந்த்ராணும் சேத: கமலவந பாலாதப-ருசிம்
பஜந்தே யே ஸந்த: கதிசிதருணு-மேவ பவதீம் |
விரிஞ்சி-ப்ரேயஸ்யாஸ்-தருணதர-ஶ்ருங்காரலஹரீ
கபீராபிர்-வாக்பிர்-விதததி ஸதாம் ரஞ்ஜநமமீ || 16 ||

கருத்துரை

தாயே, நீ சிறந்த கவிகளின் மனமாகிய தாமரை மலர்களை மலரச்செய்யும் இளம் வெயில்; சிவப்பானவள்; உன்னைப் பணிகின்ற நல்லோர்களுக்கு ஸரஸ்வதீ தேவியின் யௌவன சிருங்கார ரஸத்தின் பிரவாகம் போன்ற சொல் வன்மையுண்டாகி, அவர்கள் சபையோர்களை மகிழ்விப் பார்கள்.

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு முகமாக அமர்ந்து, 45 நாட்கள், தினந்தோறும் 1000 தரம் இந்த சுலோகத்தை ஜபம் செய் தால், இதை ஜபிப்பவர்களுக்கு வேத வேதாங்க சாஸ்திர ஞானம் ஏற்பட்டு சபைகளில் விளங்குவார்கள். பேய் பிசாசு பிடித்தவர்களுக்காக ஜபித்தால் அவை அகன்று ஓடிவிடும்.

நிவேதனம்: தேன்.

|| ஸ்ரீ: ||



ஸ்ரீ பராசக்தியின் திரு அவதாரமாகிய

ஸ்ரீ ஸாஸ்வதீ தேவி

17

ஸ்ரீ ஜநந்யை நம:

ஸகல கலைகளிலும் வல்லமையுண்டாக

(ஸகலகலா பாரீணதா ஸித்யர்த்தம்)

கலைகளையளிப்பவள்

सवित्रीभि-र्वाचां शशि-मणि-शिला-भङ्ग-रुचिभि-
र्वशिन्याद्याभि-स्त्वां सह जननि संचिन्तयति यः ।
स कर्ता काव्यानां भवति महतां भङ्गिरुचिभि-
र्वचोभि-र्वाग्देवी-वदन-कमलामोद-मधुरैः ॥ १७ ॥

ஸவித்ரீபிர்-வாசாம் ஶஶிமணி-ஶிலா-பங்க-ருசிபிர்-
வஶிந்யாத்யாபிஸ்-த்வாம் ஸஹ ஜநநி ஸஞ்சிந்தயதி ய: ।
ஸ கர்த்தா காவ்யாநாம் பவதி மஹதாம் பங்கிருசிபிர்
வசோபிர்-வாக்தேவீ-வதந-கமலாமோத-மதுரை: ॥ 17 ॥

கருத்துரை

தாயே, நீ வசினி முதலிய எண்வகைச் சக்திகளுடன் கூடியவள். அந்த சக்தி தேவிகள் நவரஸங்கள் நிரம்பிய சொல் நயத்தை அளிப்பவர்கள். பிளந்த சந்திரக் காந்தக் கல்லைப் போல் வெண்மை நிறமுள்ளவர்கள். அவர்களையும் உன்னையும் உபாசனை புரிபவன், மஹாகவிகளின் காவியப்படைப்புகளைப் போன்றனவும், ஸரஸ்வதி தேவியின் தாமரையை ஒத்த திருமுகத்தின் வாசனையுள்ளனவுமான வார்த்தைகளால் பல காவியங்களை இயற்றவல்லவனுவான்.

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு முகமாக அமர்ந்து, 45 நாட்கள், தினந்தோறும் 1000 தரம் இந்த சுலோகத்தை ஜபம் செய்தால் ஸகல கலைகளிலும் வல்லமையும் வாக்குச் சாதுர்யமும் சபைகளில் பெருமதிப்பும் ஏற்படும்.

நிவேதனம்: பால், தேன், கரும்பு, சர்க்கரை.

18

ஸ்ரீ ஶஶியுத ஜடாஜூட மகுடாயை நம:

ஸ்த்ரீ வச்யம்

(காமித ஸ்த்ரீ லாபார்த்தம்)

ஸ்த்ரீ வசீகரண காரணமாதல்

तनुच्छायाभिस्ते तरुण-तरणि-श्रीसरणिभि-
र्दिवं सर्वा-मुर्वी-मरुणिम-निमग्नां स्मरति यः ।
भवन्त्यस्य त्रस्य-द्वनहरिण-शालीन-नयनाः
सहोर्वश्या वश्याः कतिकति न गीर्वाण-गणिकाः ॥१८॥

தநுச்சாயாபிஸ்-தே தருண-தரணி-ஸ்ரீ ஸரணிபிர்-
திவம் ஸர்வா-முர்வீ-மருணிம-நிமக்நாம் ஸ்மரதி ய: |
பவந்த்யஸ்ய த்ரஸ்யத்-வந ஹரிண-ஶாலீந-நயநா:
ஸஹோர்வஶ்யா வஶ்யா: கதிகதி ந கீர்வாண-
கணிகா: || 18 ||

கருத்துரை

ஜகந்மாதாவே, இளஞ்சூரியனுடைய வெயிலைப்போல் சிவந்த வர்ணமுள்ள உன் உடலின் ஒளியால் மேலுலகங் களும், பூவுலகும் சிவப்பு வர்ணத்தில் மூழ்கி விட்டதாக எந்த பக்தன் தியானம் செய்கிறானோ அவனுக்கு மான்களுடையவை போன்று மருண்ட கண்களையுடைய ஊர்வசி முதலிய தேவ கன்னிகைகளும் வசியமாவார்கள்.

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு முகமாக அமர்ந்து, 45 நாட்கள் தினந்தோறும் 1000 தரம் இந்த சுலோகத்தை ஜபம் செய்தால் விரும்பிய பெண் வசியமாவாள். சித்திரக்கலைஞன் ஜபிக்க, வல்லவனெனப் புகழ் பெறுவான். செல்வாக்கு உண்டாகும்.

நிவேதனம் : *பாயஸம், பால், தாம்பூலம்.*

19

ஸ்ரீ ஹரமஹிஷ்யை நம:

ஸ்த்ரீ மோஹநம்

(ஸ்த்ரீ மோஹநார்த்தம்)

மூவுலக வசியம் தருபவள்

मुखं बिन्दुं कृत्वा कुचयुगमध-स्तस्य तदधो
हरार्धं ध्यायेद्यो हरमहिषि ते मन्मथकलाम् ।
स सद्यः सक्षोभं नयति वनिता इत्यतिलघु
त्रिलोकीमप्याशु भ्रमयति रवीन्दु-स्तनयुगाम् ॥ १९ ॥

முகம் பிந்தும் க்ருத்வா குசயுக-மதஸ் தஸ்ய தததோ
ஹரார்த்தம் த்யாயேத் யோ ஹரமஹிஷி தே
மந்மதகலாம் |
ஸ ஸத்ய: ஸம்க்ஷோபம் நயதி வநிதா இத்யதிலகு
த்ரிலோகீ மப்யாஶு ப்ரமயதி ரவீந்து-ஸ்தநயுகாம் || 19 ||

கருத்துரை

ஹே பரமசிவ பத்தினியே, உன் திருமுகத்தைப் பிந்து ஸ்தானமாகவும், அதன் கீழே ஸ்தனங்களையும், அதன் கீழே உன் பெண்மையான சக்தி ஸ்வரூபத்தையும், பிறகு மன்மதக் கலையையும் தியானம் செய்பவன் சூரிய சந்திரர்களை ஸ்தனங்களாகக் கொண்ட மூவுலகங்களாகிய ஸ்த்ரீகளை மோகிக்கச் செய்வான்.

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு முகமாக அமர்ந்து, 25 நாட்கள், தினந்தோறும் 1000 தரம் ஜபம் செய்தால், தர்மமுறையில் விரும்பிய பெண் வசமாவாள். பேய் அகலும். மிருகங்கள் பணியும். அரசாங்கத்தில் செல்வாக்கு ஏற்படும்.

நிவேதனம்: தேன், பால், பாயஸம்.

20

ஸ்ரீ ஹிமகர ஶிலா மூர்த்தயே நம:

விஷ பயம் நீங்க

(விஷ நிர்வீர்யதா ஸித்யர்த்தம்)

விஷ பயம் நீக்கும் சக்தி

किरन्ती-मङ्गेभ्यः किरण-निकुरुम्बामृत-रसं
हृदि त्वा-माधत्ते हिमकरशिला-मूर्तिमिव यः ।
स सर्पाणां दर्पं शमयति शकुन्ताधिप इव
ज्वरप्लुष्टान् दृष्टया सुखयति सुधाधारसिरया ॥ २० ॥

கிரந்தீ-மங்கேப்ய: கிரண-நிகுரும்பாம்ருதரஸம்
ஹ்ருதி த்வா மாதத்தே ஹிமகர-ஶிலா-மூர்த்திமிவ ய: ।
ஸ ஸர்ப்பாணாம் தர்ப்பம் ஶமயதி ஶகுந்தாதிப இவ
ஜ்வரப்லுஷ்டாந் த்ருஷ்ட்யா ஸுகயதி ஸுதாதார
ஸிரயா ॥ 20 ॥

கருத்துரை

தாயே, நீ உனது திருமேனியிலிருந்து வெளிப்படும் கிரணங்களாகிய அமிர்த ரஸத்தை அள்ளி வீசுகிறாய். நீ சந்திரகாந்தச் சிலையால் செய்யப்பட்ட பிரதிமை போன்றவள். அத்தகைய உன்னைத் தியானம் செய்பவன் கருடனைப்போல் பாம்புகளின் கர்வத்தை அடக்குவான். தன் பார்வையாலேயே ஜுரத்தால் வருந்துபவர்களைக் குணமடையச் செய்வான்.

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு முகமாக அமர்ந்து, 25 நாட்கள் தினந்தோறும் 1000 தரம் இந்த சுலோகத்தை ஜபம் செய்தால் தீராததென முடிவுசெய்த விஷஜ்வரமும் நீங்கும். பூரான், செய்யான் முதலிய விஷ ஜந்துக்கள் தீண்டியதால் ஏற்பட்ட வியாதிகள் நீங்கும். திருஷ்டி தோஷத்தால் ஏற்படும் தீங்குகளும் நீங்கும்.

நிவேதனம் : பால், பாயஸம்.

21

ஸ்ரீ பரமாஹ்லாத லஹர்யை நம:

ஜனங்களிடம் மரியாதை பெற

(ஸர்வ ஜந ஸம்மாந்யதா லாபார்த்தம்)

பரமானந்தமளிப்பவள்

तटिल्लेखा-तन्वीं तपन-शशि-वैश्वानर-मयीं
निषण्णां षण्णामप्युपरि कमलानां तव कलाम् ।
महापद्माटव्यां मृदित-मलमायेन मनसा
महान्तः पश्यन्तो दधति परमाह्लाद-लहरीम् ॥ २१ ॥

தடில்லேகா-தந்வீம் தபந-பஶி-வைஶ்வாநர-மயீம்
நிஷண்ணாம் ஷண்ணா-மப்யுபரி கமலாநாம் தவ கலாம் |
மஹாபத்மாடவ்யாம் ம்ருதித-மல மாயேந மநஸா
மஹாந்த: பஶ்யந்தோ தததி பரமாஹ்லாத-லஹரீம் |

கருத்துரை

தாயே, ஆறு கமலங்களுக்கு மேலுள்ள ஸஹஸ்ரார கமலத்தில் அமர்ந்ததும், சூரியன், சந்திரன், அக்னி என்னும் உருவில் உள்ளதும், மின்னற் கொடி போன்றதுமான உன் கலையை, காமாதி மலங்கள், மாயை இவைகள் நீங்கிய மனத்தால் மஹான்கள் தியானம் செய்வார்களாகில், அவர்கள் பேரானந்தமாகிய அலைகளில் திகழ்வார்கள்.

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு முகமாக அமர்ந்து, 11 நாட்கள், தினந்தோறும் 1000 தரம் இந்த சுலோகத்தை ஜபம் செய்தால் எல்லோரும் மரியாதை செலுத்துவர். மற்றவர்கள் காரணமில்லாமல் தன்மீது பகைமை பாராட்டுதல் நீங்கும். எந்த விஷயத்திலும் தைரியமும் வெற்றியும் உண்டாகும்.

நிவேதனம்: தேனும், பழமும்.

|| ஸ்ரீ: ||



ஸ்ரீ பராசக்தியின் திரு அவதாரமாகிய
ஸ்ரீ பவானீ தேவி

22

ஸ்ரீ பவாந்யை நம:

இஹலோக ஸுகம் பெற

(ஐஹிக - அசேஷ ஸுக லாபார்த்தம்)

தேவியைத் துதிப்பதன் பயன்

भवानि त्वं दासे मयि वितर दृष्टिं सकरुणां
इति स्तोतुं वाञ्छन् कथयति भवानि त्वमिति यः ।
तदैव त्वं तस्मै दिशसि निजसायुज्य-पदवीं
मुकुन्द-ब्रह्मेन्द्र-स्फुट-मकुट-नीराजितपदाम् ॥ २२ ॥

பவாநி த்வம் தாஸே மயி விதர த்ருஷ்டிம் ஸகருணாம்
இதி ஸ்தோதும் வாஞ்சந் கதயதி பவாநி த்வமிதி ய: |
ததைவ த்வம் தஸ்மை திஶஸி நிஜ-ஸாயுஜ்ய-பதவீம்
முகுந்த-ப்ரஹ்மேந்த்ர-ஸ்புட-மகுட-நீராஜித-பதாம் ||

கருத்துரை

"ஹே பவாநி, நீ உன் அடிமையான என்னைக் கருணையுடன் கூடிய உன் கடைக்கண்ணால் பார்ப்பாயாக" என்று துதி செய்ய விரும்பிய ஒருவன், "ஹே பவாநி, நீ......" என்று சொல்லத் தொடங்கிய உடனே அவனுக்கு விஷ்ணு, பிரம்மா, இந்திரன் இவர்களின் கிரீடங்களால் மங்களாரத்தி செய்யப்பட்ட திருவடிகளுடன் கூடியதான உன் ஸாயுஜ்ய பதவியையே அளித்து விடுகிறாய்.

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு முகமாக அமர்ந்து, 45 நாட்கள், தினந்தோறும் 1000 தரம் இந்த சுலோகத்தை ஜபம் செய்தால் அரச பதவி, மந்திரி பதவி போன்ற உயர் பதவிகள் ஏற்படும். தேர்வுகளில் வெற்றியுண்டாகும். கோயில் அல்லது நதிக்கரையில் ஜபிக்க வேண்டும். இம்மைப் பயன்களெல்லாம் சித்திக்கும்.

நிவேதனம்: சித்ரான்னங்கள்.

23

ஸ்ரீஶம்பு ஶரீரார்த்தாயை நம:

வியாதி, கடன் தொல்லை நீங்க

(ஸர்வ வ்யாதி, ருண விமோசநார்த்தம்)

தேவியின் திவ்ய ரூபம்

त्वया हृत्वा वामं वपु-रपरितृप्तेन मनसा
शरीरार्धं शंभो-रपरमपि शङ्के हृतमभूत् ।
यदेतत् त्वद्रूपं सकलमरुणाभं त्रिनयनं
कुचाभ्यामानम्रं कुटिल-शशिचूडाल-मकुटम् ॥ २३ ॥

த்வயா ஹ்ருத்வா வாமம் வபு-ரபரித்ருப்தேந மநஸா
ஶரீரார்த்தம் ஶம்போ-ரபரமபி ஶங்கே ஹ்ருதமபூத் |
யதேதத் த்வத்ரூபம் ஸகல-மருணாபம் த்ரிநயநம்
குசாப்யா-மாநம்ரம் குடில-ஶஶி-சூடால-மகுடம் || 23 ||

கருத்துரை

தாயே, என் இதயத்தில் உள்ள உன் உருவம் முழுவதுமே சிவப்பாகவும், முக்கண்களையுடையதாகவும், இரண்டு ஸ்தனங்களால் சற்று வணங்கியதாகவும், சந்திரகலையுடன் கூடிய முடியையுடையதாகவும் விளங்குவதால், நீ பரமசிவனுடைய இடது பாகத்தை அபகரித்துக் கொண்டு, மனம் திருப்தியடையாமல் மற்றொரு பாதியையும் அபகரித்துக் கொண்டாயென்று நினைக்கிறேன்.

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு முகமாக அமர்ந்து, 45 நாட்கள், தினந்தோறும் 1000 தரம் இந்த சுலோகத்தை ஜபம் செய்தால், தீராத வியாதிகள், கடன் தொல்லைகள் நீங்கும். பல வழிகளில் பணம், பொருள் வந்து சேரும்.

நிவேதனம் : உளுந்து வடை, பாயஸம்.

24

ஸ்ரீ ஸ்படிக கடிகா கராயை நம:

பேய், பூதம் முதலியவை நீங்க

(பூதப்ரேத பிஶாசாதி பாதா நிவ்ருத்யர்த்தம்)

தேவியின் புருவ அசைவு

जगत्सूते धाता हरिरवति रुद्रः क्षपयते
तिरस्कुर्व-न्नेतत् स्वमपि वपु-रीश-स्तिरयति ।
सदा-पूर्वः सर्वं तदिद-मनुगृह्णाति च शिव-
स्तवाज्ञा-मालम्ब्य क्षणचलितयो-र्भ्रूलतिकयोः ॥ २४ ॥

ஜகத்ஸூதே தாதா ஹரி-ரவதி ருத்ரஃ க்ஷபயதே
திரஸ்குர்வந்-நேதத் ஸ்வமபி வபு-ரீஶஸ்-திரயதி ।
ஸதா-பூர்வஃ ஸர்வம் ததித-மநுக்ருஹ்ணுதி ச ஶிவஸ்
தவாஜ்ஞா-மாலம்ப்ய க்ஷண-சலிதயோர் ப்ரூ-லதிக-
யோஃ || 24 ||

கருத்துரை

ஹே பராசக்தியே! பிரமன் உலகைப் படைக்கிருன்; விஷ்ணு காக்கிருன்; ருத்ரன் அழிக்கிருன். இவர்களுக்கும் மேற்பட்ட ஈசுவரன் என்பவன் மேற்கண்ட பிரமன், விஷ்ணு, ருத்ரன் இம்மூவரையும் தன் சொரூபத்தில் மறையும்படி செய்து, தன் உடலையும் மறைத்துக் கொள்கிருன். ஸதா சிவன் (பரப்ரஹ்மம்) என்பவன், கொடி போன்ற புருவங்களை நீ சற்று அசைத்தால், அதை ஆதாரமாகக் கொண்டு மறு படியும் பிரமன், விஷ்ணு, ருத்திரன், ஈசுவரன் என்னும் நான்கு தத்துவங்களையும் படைக்கிருன்.

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு முகமாக அமர்ந்து, 20 நாட்கள் தினந் தோறும் 1000 தரம் இந்த சுலோகத்தை ஜபம் செய்தால், பேய் பிசாசு முதலியவைகள் ஓடிவிடும். அடிக்கடி வரும் சிறிய நோய்கள் நிவ்ருத்தியாகும்.

நிவேதனம்: எள்சாதம் (இனிப்பாக), உளுந்துவடை, தேன்.

25

ஸ்ரீ ஶிவாயை நம:

உயர் பதவி கிடைக்க

(உத்தம பதவீ லாபார்த்தம்)

தேவி பூஜையே மும்மூர்த்தி பூஜை

त्रयाणां देवानां त्रिगुण-जनितानां तव शिवे
भवेत् पूजा पूजा तव चरणयो-र्या विरचिता ।
तथा हि त्वत्पादोद्वहन-मणिपीठस्य निकटे
स्थिता ह्येते शश्वन्मुकुलित-करोत्तंस-मकुटाः ॥ २५ ॥

த்ரயாணாம் தேவாநாம் த்ரிகுண-ஜநிதாநாம் தவ ஶிவே
பவேத் பூஜா பூஜா தவ சரணயோர்-யா விரசிதா ||
ததா ஹி த்வத் பாதோத்வஹந-மணிபீடஸ்ய நிகடே
ஸ்திதா ஹ்யேதே ஶஶ்வந்-முகுலித-கரோத்தம்ஸ-
மகுடா: || 25 ||

கருத்துரை

ஹே மங்களாம்பிகே! பிரம்மா, விஷ்ணு, ருத்ரன் என்பவர் மூவரும் ஸத்வம், ரஜஸ், தமஸ் என்னும் முக்குணங்களால் தோன்றியவர். அவர்கள் உன் திருவடிகளைத்தாங்கும் ரத்ன பீடத்தின் அருகில் எப்பொழுதும் தமது மணிமுடிகள் மீது கைகூப்பிக் கொண்டே நின்றுகொண்டிருப்பதால், உன். திருவடிகளைப் பூஜித்தாலே அவர்களையெல்லாம் பூஜித்ததாக ஆகிவிடுமன்றோ!

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு அல்லது வடக்கு முகமாக அமர்ந்து, 45 நாட்கள், தினந்தோறும் 1000 தரம் இந்த சுலோகத்தை ஜபம் செய்தால் முறைப்படி கிடைக்க வேண்டிய உயர்பதவி கிடைக்கும்.

நிவேதனம்: தேன்.

26

ஸ்ரீ ஸதீதேவ்யை நம :

பகைமை நீங்க

(ஶத்ரு விஜயார்த்தம்)

ஸ்ரீ ஸதாசிவனின் மகிமை

विरिञ्चिः पञ्चत्वं व्रजति हरिराप्नोति विरतिं
विनाशं कीनाशो भजति धनदो याति निधनम् ।
वितन्द्री माहेन्द्री विततिरपि संमीलित-दृशा
महासंहारेऽस्मिन् विहरति सति त्वत्पति-रसौ ॥ २६ ॥

விரிஞ்சிः பஞ்சத்வம் வ்ரஜதி ஹரிராப்நோதி விரதிம்
விநாஶம் கீநாஶோ பஜதி தநதோ யாதி நிதநம் |
விதந்த்ரீ மாஹேந்த்ரீ விததிரபி ஸம்மீலித-த்ருஶா
மஹா-ஸம்ஹாரேऽஸ்மிந் விஹரதி ஸதி த்வத்பதி-ரஸௌ ‖ 26 ‖

கருத்துரை

தாயே, மஹாப்ரளய காலத்தில் பிரம்மா, விஷ்ணு, யமன், குபேரன், இந்திரர்கள் 14 பேர், இவர்கள் எல்லோரும் அழிகிருர்கள். ஆனுல், தர்மபத்தினியான உன் பாதிவ்ரத்திய மஹிமையால் ஸதாசிவனுன உன் கணவன் மட்டும் அந்த ப்ரளய காலத்திலும் அழியாமல் உன்னேடு க்ரீடை புரிகிருன்.

ஜப முறையும் பலனும்

ஒவ்வொரு மாதமும் வரும் அமாவாஸ்யை யன்று (6 அமாவாஸ்யை தினங்களில்) காலையில், கிழக்கு முகமாக அமர்ந்து 1000 தரம் இந்த சுலோகத்தை ஜபம் செய்தால் தம் மீது பகைமை பாராட்டுபவர்கள் பகைமை நீங்கி வசமாவார்கள்.

நிவேதனம் : சர்க்கரைப் பொங்கல்.

27

ஸ்ரீ புஸ்தக ஹஸ்தாயை நம:

ஆத்ம ஞானம் உண்டாக

(ஆத்மஜ்ஞாந ப்ராப்த்யர்த்தம்)

ஆறு விதமான ஐக்ய த்யானம்

जपो जल्पः शिल्पं सकलमपि मुद्राविरचना
गतिः प्रादक्षिण्य-क्रमण-मशनाद्याहुति-विधिः ।
प्रणामः संवेशः सुखमखिल-मात्मार्पण-दृशा
सपर्या-पर्याय-स्तव भवतु यन्मे विलसितम् ॥ २७ ॥

ஜபோ ஜல்ப: ஶில்பம் ஸகலமபி முத்ரா-விரசநா
கதி: ப்ராதக்ஷிண்ய-க்ரமண-மஶநாத்யாஹுதி-விதி: ।
ப்ரணாம: ஸம்வேஶ: ஸுகமகில-மாத்மார்ப்பண-த்ருஶா
ஸபர்யா-பர்யாயஸ்-தவ பவது யந்மே விலஸிதம் ॥ 27 ॥

கருத்துரை

ஹேபகவதி! 'எல்லாம் உனக்கு அர்ப்பணம்' என்ற நோக்குடன், நான் பேசுவதெல்லாம் உன் மந்த்ர ஜபமாகவும், என் உடலசைவுகள் உன் முத்திரைகளாகவும், என் நடைகள் உன் பிரதக்ஷிணமாகவும், நான் புசிப்பதெல்லாம் உனக்குச் செய்யும் ஹோமமாகவும், நான் படுப்பது உனக்குச் செய்யும் நமஸ்காரமாகவும், இம்மாதிரி என் சுகத்திற்காக நான் செய்யக்கூடிய செயலெல்லாம் உன் பூஜையாகவே ஆகட்டும்.

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு முகமாக அமர்ந்து, 45 நாட்கள் தினந்தோறும் 1000 தரம் இந்த சுலோகத்தை ஜபம் செய்தால் தன்னிலை அறிதலாகிய ஆத்ம ஞானம் உண்டாகிப் பேரின்ப வழி இறக்கும்.

நிவேதனம்: பால்.

28

ஸ்ரீ ஜநந்யை நம:

அபம்ருத்யு பயம் நீங்க

(அபம்ருத்யு பரிஹாரார்த்தம்)

தேவியின் செவியணியின் மகிமை

सुधामप्यास्वाद्य प्रति-भय-जरामृत्यु-हरिणीं
विपद्यन्ते विश्वे विधि-शतमखाद्या दिविषदः ।
करालं यत् क्ष्वेलं कबलितवतः कालकलना
न शम्भोस्तन्मूलं तव जननि ताटङ्क-महिमा ॥ २८ ॥

ஸுதா மப்யாஸ்வாத்ய ப்ரதிபய-ஜராம்ருத்யு-ஹரிணீம்
விபத்யந்தே விஶ்வே விதி-ஶதமகாத்யா திவிஷத:।
கராலம் யத் க்ஷ்வேலம் கபலிதவத: காலகலநா
ந ஶம்போஸ் தந் மூலம் தவ ஜநநி தாடங்க-
மஹிமா ॥ 28 ॥

கருத்துரை

தாயே, ப்ரம்மா, இந்திரன் முதலான தேவர்களெல்லாம், பயங்கரமான கிழத்தனம், மரணம் இவைகளைப் போக்கும் அமிருதத்தைப் பருகியவர்கள். ஆயினும் பிரளய காலத்தில் அழிந்து விடுகிறார்கள். ஆனால், மிகக் கொடிய விஷத்தைப் பருகிய பரமசிவனோவென்றால், அந்தப் பிரளய காலத்திலும் அழிவதில்லை. இதற்குக் காரணம் பரம பதிவிரதையான நீ செவிகளில் பூட்டியிருக்கும் 'தாடங்கம்' என்னும் கர்ணாபரணத்தின் மகிமைதான்.

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு முகமாக அமர்ந்து 45 நாட்கள், தினந்தோறும் 1000 தரம் இந்த சுலோகத்தை ஜபம் செய்தால், தாம் தொடங்கிய எல்லாக் காரியங்களிலும் வெற்றியுண்டாகும். விஷ வ்யாதி பயங்கள் அகலும்.

நிவேதனம் : பால்பாயஸம், த்ரிமதுரம், தாம்பூலம்.

29

ஸ்ரீ வரதாபய கராயை நம:

முரட்டுத்தனம் நீங்க

(அவிநய நிவ்ருத்யர்த்தம்)

ஸ்ரீ பரமசிவனின் ப்ரபாவம்

किरीटं वैरिञ्चं परिहर पुरः कैटभभिदः
कठोरे कोटीरे स्खलसि जहि जंभारि-मकुटम् ।
प्रणम्रेष्वेतेषु प्रसभ-मुपयातस्य भवनं
भवस्याभ्युत्थाने तव परिजनोक्ति-र्विजयते ॥ २९ ॥

கிரீடம் வைரிஞ்சம் பரிஹர புர: கைடபபித:
கடோரே கோடீரே ஸ்கலஸி ஜஹி ஜம்பாரி மகுடம் |
ப்ரணம்ரேஷ்வேதேஷு ப்ரஸப முபயாதஸ்ய பவநம்
பவஸ்யாப்யுத்தாநே தவ பரிஜநோக்திர் விஜயதே || 29 ||

கருத்துரை

ஹே பகவதி, உன்னை ப்ரம்மா, விஷ்ணு, இந்திரன் இவர்கள் தினந்தோறும் வணங்குவதற்கு வருகிறார்கள். உன் பணிப் பெண்கள் உன்னைப் பார்த்து, "அம்மா, ப்ரம்மா வணங்குகிறார், அவர் கிரீடத்தை ஒதுக்கி விடுங்கள்; விஷ்ணுவின் கிரீடத்தில் தடுக்கி விடப் போகிறீர்கள்; இந்திரனின் மகுடத்தை அகற்றி விடுங்கள்" என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே, உன் அரண்மனையில் பரமசிவன் பிரவேசிக்கிறார். அப்பொழுது அவரை வரவேற்பதற்காக நீ எழுந்திருப்பது மிகச் சிறப்புடையதாக விளங்குகிறது.

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு முகமாக அமர்ந்து, 45 நாட்கள், தினந்தோறும் 1000 தரம் இந்த சுலோகத்தை ஜபம் செய்தால், வீட்டில் பிள்ளை, பெண் முதலியவர்களின் முரட்டுத்தனம் நீங்கும். வீட்டில் ப்ரஸவம் ஆக வேண்டியவர்களுக்கு சுகப்ரஸவம் உண்டாகும்.

நிவேதனம்: வெல்லம் சேர்த்த பொங்கல்.

30

ஸ்ரீ நித்யாயை நம:

அஷ்ட சித்தி பெற

(அணிமாதி - அஷ்ட ஸித்தி லாபார்த்தம்)

தேவியுடன் ஒன்றிவிடுதலின் பலன்

स्वदेहोद्भूताभि-र्घृणिभि-रणिमाद्याभि-रभितो
निषेव्ये नित्ये त्वा-महमिति सदा भावयति यः ।
किमाश्चर्यं तस्य त्रिनयन-समृद्धिं तृणयतो
महासंवर्ताग्नि-र्विरचयति नीराजन-विधिम् ॥ ३० ॥

ஸ்வதேஹோத்பூதாபிர்-க்ருணிபி-ரணிமாத்யாபி-ரபிதோ
நிஷேவ்யே நித்யே த்வா-மஹமிதி ஸதா பாவயதி ய: |
கிமாஸ்சர்யம் தஸ்ய த்ரிநயந-ஸம்ருத்திம் த்ருணயதோ
மஹாஸம்வர்த்தாக்நிர்-விரசயதி நீராஜந-விதிம் || 30 ||

கருத்துரை

சாசுவதமான தெய்வமே, உன் திருவடிகளிலிருந்து தோன்றிய கிரணங்களே அணிமா, மஹிமா முதலிய அஷ்டைச்வரியங்கள். அவைகளால் சூழப்பெற்றிருக்கும் உன்னை நான் வணங்குகிறேன். உன்னைத் தன் ஆத்மாவென்று எப்பொழுதும் தியானம் செய்பவன் பரமேசுவரனுடைய ஐசுவரியத்தையும் த்ருணமாக நினைப்பான். அவனுக்கு ப்ரளய காலத்திய அக்னியும் மங்களாரத்தி செய்யுமென்பதில் என்ன வியப்பு?

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு முகமாக அமர்ந்து, 96 நாட்கள், தினந்தோறும் 1000 தரம் இந்த சுலோகத்தை ஜபித்தால், அணிமாதி அஷ்டசித்திகள் உண்டாகும். எந்தக் காரியத்தைத் தொடங்குவதிலும் அதைரியம் நீங்கி தைரியம் உண்டாகும். கூடுவிட்டுக் கூடுபாய்தலென்னும் பரகாயப்ரவேச சக்தியும் சித்திக்கும் என்பர்.

நிவேதனம்: தேன், வெல்லப் பொங்கல், த்ரிமதுரம், தாம்பூலம்.



ஸ்ரீ பராசக்தியின் திரு அவதாரமாகிய
ஸ்ரீ மஹாலக்ஷ்மி

31

ஸ்ரீ அகில புருஷார்த்தைக கடநாயை நமঃ

ராஜவச்யம்

(ராஜத்வாரே ஸர்வாநுகூல்ய ஸித்யர்த்தம்)

ஸ்ரீ தேவியின் பஞ்சதசீ என்னும் சாஸ்திரம்

चतुः-षष्टचा तन्त्रैः सकल-मतिसन्धाय भुवनं
स्थितस्तत्तत्-सिद्धि-प्रसव-परतन्त्रैः पशुपतिः ।
पुनस्त्व-न्निर्बन्धा-दखिल-पुरुषार्थैक-घटना-
स्वतन्त्रं ते तन्त्रं क्षितितल-मवातीतर-दिदम् ॥ ३१ ॥

சதுঃ ஷஷ்ட்யா தந்த்ரைஸ் ஸகல-மதிஸந்தாய புவநம்
ஸ்திதஸ்-தத்தத்-ஸித்தி-ப்ரஸவ-பரதந்த்ரைঃ பஶுபதிঃ |
புநஸ்-த்வந்நிர்பந்தா-தகில-புருஷார்த்தைக-கடநா-
ஸ்வதந்த்ரம் தே தந்த்ரம் க்ஷிதிதல-மவாதீதர-திதம் ||

கருத்துரை

ஹே பராசக்தித் தாயே! பரமசிவன் பலவிதமான ஸித்திகளைத் தரக்கூடிய 64 தந்த்ரங்களால் (சாஸ்திரங்களால்) உலகத்தை ஏமாற்றி விட்டுப் பேசாமலிருந்து விட்டார். ஆனால், அவரே நீ செய்த நிர்ப்பந்தத்தால் அந்த 64 தந்திரங்களாலும் அடையக் கூடிய பிறவிப் பயன்களையெல்லாம் ஒருங்கே தரக்கூடிய பஞ்சதசி என்னும் முக்கியமான உன்னுடைய தந்த்ரத்தை (உபாஸனை முறையை) இப்பூவுலகில் வெளியிட்டார்.

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு முகமாக அமர்ந்து, 45 நாட்கள் தினந்தோறும் 1000 தரம் இந்த சுலோகத்தை ஜபித்தால், ராஜ வசியமும், பொன், பொருள், மனைவி, மக்கள், வீடு, வாகனம் போன்ற ஸகல விதமான செல்வமும் உண்டாகும்.

நிவேதனம்: பால், தேன், பழம்.

32

ஸ்ரீ ஜநந்யை நமஃ

தங்கம் செய்யும் வழி அறிய

(தாம்ரம் கநகம் விபரிணமயிதும் சக்தி ப்ராப்த்யர்த்தம்)

தேவியைக் குறிக்கும் மந்த்ரம்

शिवः शक्तिः कामः क्षिति-रथ रविः शीतकिरणः
स्मरो हंसः शक्र-स्तदनु च परा-मार-हरयः ।
अमी हृल्लेखाभि-स्तिसृभि-रवसानेषु घटिता
भजन्ते वर्णास्ते तव जननि नामावयवताम् ॥ ३२ ॥

ஶிவஃ ஶக்திஃ காமஃ க்ஷிதி-ரத ரவிஃ ஶீதகிரணஃ
ஸ்மரோ ஹம்ஸஃ ஶக்ரஸ்-ததநு ச பரா-மார-ஹரயஃ |
அமீ ஹ்ருல்லேகாபிஸ்-திஸ்ருபி-ரவஸாநேஷு கடிதா
பஜந்தே வர்ணாஸ்தே தவ ஜநநி நாமாவயவதாம் || 32 ||

கருத்துரை

(இந்த சுலோகத்தில் 'ஸ்ரீமத் பஞ்சதசாக்ஷரி' என்னும் மஹாத்ரிபுர ஸுந்தரீ மந்த்ரத்திலமைந்த அக்ஷரங்கள் சிவன், சக்தி, காமன் என்ற சொற்களால் ரகசியமாக விளக்கப்படுகின்றன.) அதாவது, சிவன் (க), சக்தி (ஏ), காமன் (ஈ), க்ஷிதி (ல), ரவி (ஹ), சீதகிரணன் (ஸ), ஸ்மரன் (க), ஹம்ஸம் (ஹ), சக்ரன் (ல), பரா, மார, ஹரயஃ (ஸ, க, ல) மூன்று ஹ்ருல்லேகைகள் (மூன்று ஹ்ரீம்காரங்கள்) ஆக இந்த 15 அக்ஷரங்களும் மஹாத்ரிபுர ஸுந்தரீ மஹா மந்த்ரத்தின் பகுதிகள் ஆகின்றன.

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு முகமாக அமர்ந்து, 45 நாட்கள், தினந்தோறும் 1000 தரம் இந்த சுலோகத்தை ஜபம் செய்தால், செப்பைத் தங்கமாக மாற்றும் சக்தி ஏற்படும். மற்றும் வியாபாரத்தில் எதிர்பார்த்ததற்கு மேலாக அதிக லாபம் உண்டாகும்.

நிவேதனம்: சர்க்கரைப் பொங்கல், உளுந்துவடை, தயிர்சாதம்.

33

ஸ்ரீ நித்யாயை நம:

செல்வம் செழிக்க

(ஸம்பதபிவ்ருத்யர்த்தம்)

தேவியைப் பற்றிய மந்த்ரம்

स्मरं योनिं लक्ष्मीं त्रितय-मिद-मादौ तव मनोः
निधायैके नित्ये निरवधि-महाभोग-रसिकाः ।
भजन्ति त्वां चिन्तामणि-गुणनिबद्धाक्ष-वलयाः
शिवाग्नौ जुह्वन्तः सुरभिघृत-धाराहुति-शतैः ॥ ३३ ॥

ஸ்மரம் யோநிம் லக்ஷ்மீம் த்ரிதயமித-மாதௌ தவ மநோ:
நிதாயைகே நித்யே நிரவதி-மஹாபோக-ரஸிகா: |
பஜந்தி த்வாம் சிந்தாமணி-குண-நிபத்தாக்ஷ-வலயா:
ஶிவாக்நௌ ஜுஹ்வந்த: ஸுரபிக்ருத-தாராஹுதி-
ஶதை: || 33 ||

கருத்துரை

(இந்த சுலோகத்தில் 'ஸௌபாக்ய பஞ்சதசீ' என்னும் மந்த்ரம் ஸங்கேதமாகக் கூறப்படுகிறது.)

ஹே பராசக்தியே! புண்ணியவான்களான சில யோகிகள், தமது கையில் தாமரை மணிமாலையைத்தரித்து, முறையே காம, யோநி, லக்ஷ்மீ பீஜாக்ஷரங்களான க்லீம், ஹ்ரீம், ஸ்ரீம் என்னும் பீஜாக்ஷரங்களையும் முன் சொன்ன மந்த்ரத்துடன் சேர்த்து 'ஸௌபாக்யபஞ்சதசீ' என்னும் இந்த மந்த்ரத்தை த்ரிகோணாகாரமாகிய சிதக்நியில், பசு நெய்யினால் ஹோமம் செய்து உன்னைத் திருப்தி செய்விக்கிறார்கள்.

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு முகமாக அமர்ந்து, 45 நாட்கள், தினந்தோறும், 1000 தரம் ஜபித்தால் செல்வம் மேன்மேலும் வளரும். மற்றும் இந்த சுலோகத்தைப் பாராயணம் செய்யும் போது, தம் கையில் மூடி வைத்துக் கொள்ளும் பணத்தைப் போல் பத்துமடங்கு பணம் அதிகமாகக் கிடைக்கும்.

நிவேதனம்: தேன், வெண்பொங்கல், சித்ரான்னம்.

34

ஸ்ரீ பகவத்யை நம:

ஸந்தேஹம் நீங்க

(ஸகலவித ஸந்தேஹ நிவ்ருத்யர்த்தம்)

சக்தி சிவ ஸமத்துவம்

शरीरं त्वं शंभोः शशि-मिहिर-वक्षोरुह-युगं
तवात्मानं मन्ये भगवति नवात्मान-मनघम् ।
अतः शेषः शेषीत्यय-मुभय-साधारणतया
स्थितः संबन्धो वां समरस-परानन्द-परयोः ।। ३४ ।।

*ஶரீரம் த்வம் ஶம்போ: ஶஶி-மிஹிர-வக்ஷோருஹ-யுகம்
தவாத்மாநம் மந்யே பகவதி நவாத்மாந-மநகம் |
அத: ஶேஷ: ஶேஷீத்யய-முபய-ஸாதாரணதயா
ஸ்த்தித: ஸம்பந்தோ வாம் ஸமரஸ-பராநந்த-
பரயோ: || 34 ||*

கருத்துரை

ஹே பகவதி, (ஆனந்த பைரவியான) நீ ஆனந்த பைரவனை பரமசிவனுக்குச் சரீரமாகக் காணப்படுகிறாய், அந்த ஆனந்த பைரவனின் உருவமும் உன் உருவமாகக் காணப்படும். ஆகவே, யோசித்தால் உங்கள் இருவருக்கும் இடையே உள்ள சேஷ சேஷிபாவம் (ஒருவர் சரீரமாகவும் மற்றொருவர் ஆன்மாவாகவும் இருத்தல்) சமமேயென்று தோன்றுகிறது.

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு முகமாக அமர்ந்து, 45 நாட்கள், தினந்தோறும் 1000 தரம் இந்த சுலோகத்தை ஜபம் செய்தால், எல்லாவிதமான சந்தேகங்களும் நீங்கும். மற்றும், ஜலோதரம், நீராச்சளி, சீதள ஜ்வரம் போன்ற ஸகல ஜலரோகங்களும் நீங்கும்.

நிவேதனம்: நெய்யில் கலந்த மிளகுப் பொடி, தேன்.

35

ஸ்ரீ ஶிவயுவத்யை நம:

மார்பு நோய் நீங்க

(ஹ்ருத்ரோக நிவ்ருத்யர்த்தம்)

ஸகல தத்வ ரூபிணி

मनस्त्वं व्योम त्वं मरुदसि मरुत्सारथि-रसि
त्वमाप-स्त्वं भूमि-स्त्वयि परिणतायां न हि परम् ।
त्वमेव स्वात्मानं परिणमयितुं विश्व-वपुषा
चिदानन्दाकारं शिवयुवति-भावेन बिभृषे ॥ ३५ ॥

மநஸ்த்வம் வ்யோம த்வம் மருதஸி மருத்ஸாரதி-ரஸி
த்வ-மாபஸ்-த்வம் பூமிஸ்-த்வயி பரிணதாயாம் ந ஹி பரம் ।
த்வமேவ ஸ்வாத்மாநம் பரிணமயிதும் விஶ்வ-வபுஷா
சிதாநந்தாகாரம் ஶிவயுவதி-பாவேந பிப்ருஷே ॥ 35 ॥

கருத்துரை

தாயே, நீயே மனம்; நீயே ஆகாசம்; நீயே வாயு தத்துவம்; நீயே அக்நி தத்துவம்; நீயே ஜலதத்துவம்; நீயே பூமி தத்துவம். நீ உலகமாக மாறிய போது உன்னைக் காட்டிலும் வேறொரு பொருள் இல்லை. நீயே உன்னை, ஆனந்த பைரவனின் உருவமாகிய உலகமாக மாற்றிக் கொள்வதற்காக சிவ பெருமானின் பத்தினி என்னும் நிலையைத் தரிக்கின்றாய்.

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு முகமாக அமர்ந்து, 45 நாட்கள், தினந்தோறும் 1000 தரம் இந்த சுலோகத்தை ஜபம் செய்தால், மார்பு நோய் நீங்கும், க்ஷயரோகம் என்னும் காச நோயும் நீங்கும். கடுக்காயில் ஜபம் செய்து, அதை நீரில் உறைத்துச் சாப்பிடச் செய்யவும்.

நிவேதனம்: பாயஸம், தேன், சர்க்கரை.

36

ஸ்ரீ தேவ்யை நம:

பயங்கர ரோகங்கள் நீங்க

(தீவ்ரதர வ்யாதி நிவாரணார்த்தம்)

தேவியின் ஆஜ்ஞா சக்ர ப்ரபாவம்

तवाज्ञाचक्रस्थं तपन-शशि कोटि-द्युतिधरं
परं शंभुं वन्दे परिमिलित-पार्श्वं परचिता ।
यमाराध्यन् भक्त्या रवि-शशि-शुचीना-मविषये
निरालोके ऽलोके निवसति हि भालोक-भुवने ॥ ३६ ॥

தவாஜ்ஞா-சக்ரஸ்த்தம் தபந-ஶஶி-கோடி த்யுதிதரம்
பரம் ஶம்பும் வந்தே பரிமிலித-பார்ஶ்வம் பரசிதா ।
யமாராத்த்யந் பக்த்யா ரவி-ஶஶி-ஶுசீநா-மவிஷயே
நிராலோகேऽலோகே நிவஸதி ஹி பாலோக-புவநே ॥ 36 ॥

கருத்துரை

ஹேபகவதி! உன்னுடைய ஆஜ்ஞா சக்கரத்தில் (இரு புருவங்களின் மத்தியில்) ஒளிர்கிறவனும், கோடி சூரிய சந்திரர்களின் காந்தியைத் தரிப்பவனும், ஸகுண நிர்குண சக்திகளை இடது பக்கத்தில் தாங்குபவனுமான காமேசுவரனை நான் வணங்குகிறேன். அந்த காமேசுவரனைப் பக்தியோடு தியானிப்பவன், சூரியன், சந்திரன், அக்னி இவர்களுடைய ஒளிகள் பரவாததான பரஞ்ஜோதிமயமான உன்னுடைய ஸாயுஜ்ய பதவியில் வசிப்பான்.

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு முகமாக அமர்ந்து, 45 நாட்கள் தினந்தோறும் 1000 தரம் இந்த சுலோகத்தை ஜபம் செய்தால், சாதாரண நோய்களும், தீராத நோய்களும் தீரும். பிரம்மராக்ஷஸ் பிடித்தவர்களை அது விட்டு ஓடி விடும். சுலோகத்தை ஜலத்தில் எழுதச் செய்து ஸ்நானம் செய்விக்கவும்.

நிவேதனம்: பாயஸம், வடை, அதிரசம்.

37

ஸ்ரீ தேவ்யை நமః

பிசாசு பீடை நீங்க

(பிஶாச பாதா நிவாரணார்த்தம்)

விசுத்தி சக்கரத்தின் மகிமை

विशुद्धौ ते शुद्धस्फटिक-विशदं व्योम-जनकं
शिवं सेवे देवीमपि शिवसमान-व्यवसिताम् ।
ययोः कान्त्या यान्त्याः शशिकिरण-सारूप्यसरणेः
विधूतान्त-र्ध्वान्ता विलसति चकोरीव जगती ॥ ३७ ॥

விஶுத்தௌ தே ஶுத்தஸ்படிக-விஶதம் வ்யோம-ஜநகம்
ஶிவம் ஸேவே தேவீமபி ஶிவஸமாந-வ்யவஸிதாம்
யயோః காந்த்யா யாந்த்யாః ஶஶிகிரண-ஸாரூப்ய-ஸரணேః
விதூதாந்தர்-த்வாந்தா விலஸதி சகோரீவ ஜகதீ || 37 ||

கருத்துரை

தாயே! உன்னுடைய விசுத்தி என்னும் சக்கரத்தில் சுத்தமான ஸ்படிகம் போல் பிரகாசிப்பவனும், ஆகாச தத்துவத்திற்குக் காரணமாகவும் உள்ள பரமசிவனையும் அவனோடொத்த எண்ணமுள்ளவளான உன்னையும் வணங்குகிறேன். சந்திரகிரணத்தையொத்த உங்கள் இருவருடைய காந்தியினால் அஞ்ஞானமென்னும் இருள் நீங்கப் பெற்ற உலகம் சகோரபக்ஷி போல் இருக்கிறது (இருள் நீங்கினால் சகோரங்கள் கண் தெரிந்து ஒன்றோடொன்று சேருமென்பது கவிமரபு).

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு முகமாக அமர்ந்து, 45 நாட்கள், தினந்தோறும் 5000 தரம் இந்த சுலோகத்தை ஜபம் செய்தால் பேய், பிசாசு, பூதம், பிரும்ம ராக்ஷஸ் போன்றவை நீங்கி விடும்.

நிவேதனம்: உளுந்து வடை, பாயஸம், தேங்காய், பழம்.

38

ஸ்ரீ கீர்தேவ்யை நம:

குழந்தைகள் நோய் நீங்க

(பாலாரிஷ்ட ஶாந்த்யர்த்தம்)

அநாஹத சக்ர மஹிமை

समुन्मीलत्-संवित्कमल-मकरन्दैक-रसिकं
भजे हंसद्वन्द्वं किमपि महतां मानसचरम् ।
यदालापा-दष्टादश-गुणित-विद्यापरिणतिः
यदादत्ते दोषाद् गुण-मखिल-मद्भ्यः पय इव ॥ ३८ ॥

ஸமுந்மீலத்-ஸம்வித்-கமல-மகரந்தைக-ரஸிகம்
பஜே ஹம்ஸத்வந்த்வம் கிமபி மஹதாம் மாநஸசரம் ||
யதாலாபா-தஷ்டாதஶ-குணித வித்யாபரிணதிः
யதாதத்தே தோஷாத் குணமகில-மத்ப்யः பய இவ ॥ 38 ॥

கருத்துரை

ஹே பகவதியே! நான் இரண்டு ஹம்ஸங்களை வணங்குகிறேன். அவை நன்கு மலர்ந்த ஞானமாகிய தாமரை மலரில் ஆனந்தமென்னும் தேனைப் பருகுபவை. அவை மஹான்களின் மனத்தில் (மானஸமென்னும் தடாகத்தில்) ஸஞ்சரிப்பவை. அவைகள் எழுப்பும் தொனியிலிருந்து பதினெண் கலைகளும் தோன்றுகின்றன. இந்த ஹம்ஸங்கள் ஜலத்தையும் பாலையும் பிரித்து விடுவது போல் தோஷத்தையும் குணத்தையும் பிரித்தெடுத்து விடுகின்றன. (இங்கு ஹம்ஸங்களாகக் குறித்தது சக்தியும் சிவனுமே.)

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு முகமாக அமர்ந்து, 45 நாட்கள், தினந்தோறும் 5000 தரம் இந்த சுலோகத்தை ஜபம் செய்தால், குழந்தைகளுக்கு ஏற்படும் பாலாரிஷ்டம் என்பது நீங்கி சுகமாகும்.

நிவேதனம்: பழம், கற்கண்டு, திராட்சை போன்ற ஏதாவது.

39

ஸ்ரீ ஜநந்யை நமஃ

துஸ்ஸ்வப்ந தோஷம் நீங்க

(துஸ்ஸ்வப்ந பாதா நிவ்ருத்யர்த்தம்)

ஸ்வாதிஷ்டாந சக்ரமஹிமை

तव स्वाधिष्ठाने हुतवह-मधिष्ठाय निरतं
तमीडे संवर्तं जननि महतीं तां च समयाम् ।
यदालोके लोकान् दहति महसि क्रोध-कलिते
दयार्द्रा या दृष्टिः शिशिर-मुपचारं रचयति ॥ ३९ ॥

தவ ஸ்வாதிஷ்ட்டாநே ஹுதவஹ-மதிஷ்ட்டாய நிரதம்
தமீடே ஸம்வர்த்தம் ஜநநி மஹதீம் தாஞ்ச ஸமயாம் ||
யதாலோகே லோகாந் தஹதி மஹஸி க்ரோதகலிதே
தயார்த்ரா யா த்ருஷ்டிஃ ஶிஶிர முபசாரம் ரசயதி || 39 ||

கருத்துரை

தாயே, உன்னுடைய ஸ்வாதிஷ்டான சக்கரத்தில் அக்னி தத்துவத்தை ஏற்று, எப்பொழுதும் ஒளிர்கின்ற பிரளய காலத்து அக்கினி மயனுன காமேச்வரனேயும் 'மஹத்' என்று கூறப்படுபவளுமான அந்த பராசக்தியையும் துதி செய்கிறேன். அந்த பரமசிவனின் பார்வையாகிய அக்னி உலகங்களை எரிக்கும் போது (உன்னுடைய) கருணை பொழியும் கடாக்ஷமல்லவா சீதோபசாரம் செய்து உலகங்களைக் காக்கின்றது!

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு அல்லது வடக்கு முகமாக அமர்ந்து, 12 நாட்கள், தினந்தோறும் 108 தரம் இந்த சுலோகத்தை ஜபம் செய்தால் பயத்தையுண்டாக்கும் கெட்ட கனவுகள் நீங்கும்.

நிவேதனம்: தேன், பால், பாயஸம், பொங்கல்.

40

ஸ்ரீ அத்ரி தநயாயை நமః

வருங்காலம் உணர

(ஆகாமி ஸம்பவ பரிஜ்ஞாநார்த்தம்)

மணிபூரக சக்ர மஹிமை

तटित्त्वन्तं शक्त्या तिमिर-परिपन्थि-स्फुरणया
स्फुर-न्नानारत्नाभरण-परिणद्धेन्द्र-धनुषम् ।
तव श्यामं मेघं कमपि मणिपूरैक-शरणं
निषेवे वर्षन्तं-हरमिहिर-तप्तं त्रिभुवनम् ॥ ४० ॥

தடித்வந்தம் ஶக்த்யா திமிர-பரிபந்த்தி-ஸ்புரணயா
ஸ்புரந்-நாநாரத்நாபரண-பரிணத்தேந்த்ர-தனுஷம் |
தவ ஶ்யாமம் மேகம் கமபி மணிபூரைக-ஶரணம்
நிஷேவே வர்ஷந்தம் ஹரமிஹிர-தப்தம் த்ரிபுவநம் || 40 ||

கருத்துரை

ஹே பகவதி, நீலமேக ரூபமான உனது ஸதாசிவ தத்வத்தை நான் வணங்குகிறேன். அந்த மேகம் மணிபூரக மென்னும் சக்கரத்தையே இருப்பிடமாகக் கொண்டது; அங்குள்ள இருளையகற்றும் சக்தியாகிய மின்னல்களையுடையது; பற்பல வர்ணமுள்ள ரத்தினாபரணங்களின் ஒளியாகிய வானவில் லுடன் கூடியது; காலாக்னி ருத்ரனால் தகிக்கப்படும் மூவுலகையும் அமிருத வர்ஷத்தால் குளிரச் செய்வது.

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு அல்லது வடக்கு முகமாக அமர்ந்து, 45 நாட்கள், தினந்தோறும் 1000 தரம் இந்த சுலோகத்தை ஜபித்தால், வருங்காலத்தை அறியலாம். தாம் விரும்பிய பொருளை அடையும் வகையைக் கனவில் காணலாம்.

நிவேதனம் : பால் பாயஸமும், தாம்பூலமும்.

41

ஸ்ரீ ஹர ஸஹசர்யை நம:

வயிற்று வலி நீங்க

(உதர பீடா நிவாரணார்த்தம்)

மூலாதார சக்ர மகிமை

तवाधारे मूले सह समयया लास्यपरया
नवात्मानं मन्ये नवरस-महाताण्डव-नटम् ।
उभाभ्या-मेताभ्या-मुदय-विधि-मुद्दिश्य दयया
सनाथाभ्यां जज्ञे जनकजननीमत् जगदिदम् ॥ ४१ ॥

தவாதாரே மூலே ஸஹ ஸமயயா லாஸ்ய-பரயா
நவாத்மாநம் மந்யே நவரஸ-மஹாதாண்டவ-நடம் |
உபாப்யா-மேதாப்யா-முதய-விதி-முத்திஶ்ய தயயா
ஸநாதாப்யாம் ஜஜ்ஞே ஜநகஜநநீமத் ஜகதிதம் || 41 ||

கருத்துரை

தாயே, உன்னுடைய மூலாதாரமென்னும் சக்கரத்தில் நர்த்தனம் புரிபவளான ஸமயா தேவியோடு சிருங்காரம் முதலிய 9 ரஸங்கள் பொருந்திய தாண்டவ மென்னும் நடனம் புரிகின்ற மஹாபைரவமென்னும் உன் ரூபத்தைத் தியானம் செய்கிறேன். பிரளயத்திற்குப் பின் மறுபடியும் தோன்றுகிற இந்த உலகிற்கு, மஹாபைரவர், மஹாபைரவீ என்னும் நீங்கள் இருவரும் கருணையால் ஒன்றுகூடித் தாய் தந்தையர்களாகிறீர்கள்.

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு அல்லது வடக்கு முகமாக அமர்ந்து, 30 நாட்கள், தினந்தோறும் 4000 தரம் இந்த சுலோகத்தை ஜபம் செய்தால், வயிற்று வலி நீங்கும். குல்மம் என்னும் வயிற்றுக் கட்டியும் நீங்கி சௌக்கியம் உண்டாகும்.


நிவேதனம்: பொங்கல், தேன்.

श्री सौन्दर्यलहरी

द्वितीयो भागः — सौन्दर्यलहरी

ஸ்ரீ ஸௌந்தர்யலஹரீ

இரண்டாம் பாகம்-ஸௌந்தர்யலஹரீ



ஸ்ரீ பராசக்தியின் திரு அவதாரமாகிய
ஸ்ரீ காயத்ரீதேவி

42

ஸ்ரீ ஹிமகிரி ஸுதாயை நம:

மஹோதரம் நீங்க

(மஹோதராக்ய ரோக நிவாரணார்த்தம்)

தேவியின் கிரீட வர்ணனை

गतै-र्माणिक्यत्वं गगनमणिभिः सान्द्रघटितं
किरीटं ते हैमं हिमगिरिसुते कीर्तयति यः ।
स नीडेयच्छाया-च्छुरण-शबलं चन्द्र-शकलं
धनुः शौनासीरं किमिति न निबध्नाति धिषणाम् ॥४२॥

கதைர்-மாணிக்யத்வம் ககநமணிபிஃ ஸாந்த்ர-கடிதம்
கிரீடம் தே ஹைமம் ஹிமகிரிஸுதே கீர்த்தயதி யஃ ||
ஸ நீடேயச்சாயா-ச்சுரண ஶபலம் சந்த்ர-ஶகலம்
தநுஃ ஶௌநாஸீரம் கிமிதி ந நிபத்நாதி திஷணாம் ‖ 42 ||

கருத்துரை

ஹே மலையரசனின் மகளே, பன்னிரு சூரியர்களாகிய ரத்தினங்கள் இழைத்த உன்னுடைய கிரீடத்தை வருணிக்கும் கவியானவன், உன்னுடைய கிரீடத்தின் ஸந்திகளில் இழைக்கப்பட்டுள்ள நவரத்தினங்களின் காந்திகள் பரவியுள்ள சந்திரகலையைப் பார்த்து 'வானவில்' என்று நினைத்துக் கொள்ள மாட்டானோ?

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு அல்லது வடக்கு முகமாக அமர்ந்து, 45 நாட்கள், தினந்தோறும், 1000 தரம் இந்த சுலோகத்தை ஜபம் செய்தால், மஹோதரம் என்னும் நோய் நீங்கும். மற்றும் பசு, பக்ஷி, மனிதர்கள், தேவர்கள் எல்லோரையும் வசீகரிக்கும் சக்தியும் ஏற்படும்.

நிவேதனம்: பாலும் சர்க்கரையும்.

43

ஸ்ரீ பிவாயை நம:

ஜயம், புகழ் பெறவும், வ்யாதி நீங்கவும்

(விஜய கீர்த்திலாபார்த்தம், வ்யாதி நிவாரணார்த்தம்ச)

தேவியின் கேச வர்ணனை

धुनोतु ध्वान्तं न-स्तुलित-दलितेन्दीवर-वनं
घनस्निग्ध-श्लक्ष्णं चिकुर-निकुरुम्बं तव शिवे ।
यदीयं सौरभ्यं सहज-मुपलब्धु सुमनसो
वसन्त्यस्मिन् मन्ये वलमथन-वाटी विटपिनाम् ॥४३॥

துநோது த்வாந்தம் நஸ்-துலித-தலிதேந்தீவர-வநம்
கந-ஸ்நிக்த-ஶ்லக்ஷ்ணம் சிகுர-நிகுரும்பம் தவ ஶிவே |
யதீயம் ஸௌரப்யம் ஸஹஜ-முபலப்தும் ஸுமநஸோ
வஸந்த்யஸ்மிந் மந்யே வலமதந-வாடீ-விடபிநாம் || 43 ||

கருத்துரை

ஹே பார்வதி, உன்னுடைய கேசங்கள் மலர்ந்த கரு நெய்தல் புஷ்பம் போலும், நெருக்கமாகவும் வழவழப்பாகவும் உள்ளன. இந்த கேசங்கள் எங்களது அஞ்ஞான இருளை அகற்றுவதாகுக. உன்னுடைய கேசங்களில் இயற்கையாக அமைந்த வாஸனையை அடைவதற்காகவே, தேவேந்திரனது தோட்டத்திலுள்ள கற்பகத்தருவின் மலர்கள் உனது கேசங்களில் வாசம் புரிகின்றனவென்று எண்ணுகிறேன்.

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு அல்லது வடக்கு முகமாக அமர்ந்து 45 நாட்கள், தினந்தோறும் 1000 தரம் இந்த சுலோகத்தை ஜபம் செய்தால், எடுத்த காரியங்கள் எல்லாவற்றிலும் வெற்றியுண்டாகும். நோய்களெல்லாம் நீங்கும்.

நிவேதனம்: ம்ருஷ்டான்னம்.

44

ஸ்ரீ வைதாத்ர களத்ராய நம:

ஜனங்களின் மனதைக் கவர

(ஜநமந ஆகர்ஷணார்த்தம்)

தேவியின் வகிட்டின் வர்ணனை

तनोतु क्षेमं न-स्तव वदनसौन्दर्यलहरी-
परीवाहस्रोतः-सरणिरिव सीमन्तसरणिः ।
वहन्ती सिन्दूरं प्रबलकबरी-भार-तिमिर-
द्विषां बृन्दै-र्बन्दीकृतमिव नवीनार्क-किरणम् ॥ ४४ ॥

தநோது க்ஷேமம் நஸ் தவ வதந-ஸௌந்தர்யலஹரீ-
பரீவாஹ-ஸ்ரோதஃ-ஸரணிரிவ ஸீமந்த-ஸரணிஃ ।
வஹந்தீ ஸிந்தூரம் ப்ரபல-கபரீ-பார-திமிர-
த்விஷாம் ப்ருந்தைர்-பந்தீ-க்ருதமிவ நவீநார்க்க-
கிரணம் || 44 ||

கருத்துரை

ஹே தேவி, உன் கேசங்களுக்கிடையேயுள்ள வகிடு (ஸீமந்தம்) உன் முகஸௌந்தரியம் வழிந்தோடும் வழி போலுள்ளது. அது உனது கேசங்களாகிய பலமுள்ள பகைவர்களால் இருட்டறையில் அடைக்கப்பட்ட கைதிபோல் காணப்படுகிறது. இளஞ் சூரியன் போல் ஒளிர்கின்றதும், குங்குமம் அப்பியதுமான அந்த வகிடு எங்களுக்கு க்ஷேமத்தை அளிக்கட்டும்.

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு அல்லது வடக்கு முகமாக அமர்ந்து, 12 நாட்கள், தினந்தோறும் 1000 தரம் இந்த சுலோகத்தை ஜபித்தால், எல்லோரையும் வசீகரிக்கும் சக்தி ஏற்படும்.

நிவேதனம்: தேன்.

45

ஸ்ரீ தேவ்யை நம:

வருங்காலத்தை உணர

(பவிஷ்யதர்த்த பரிஜ்ஞானார்த்தம்)

தேவியின் முன் நெற்றி மயிர்கள்

अरालैः स्वाभाव्या-दलिकलभ-सश्रीभि-रलकैः
परीतं ते वक्त्रं परिहसति पङ्केरुह-रुचिम् ।
दरस्मेरे यस्मिन् दशनरुचि-किञ्जल्क-रुचिरे
सुगन्धौ माद्यन्ति स्मरदहन-चक्षु-र्मधुलिहः ॥ ४५ ॥

அராலை: ஸ்வாபாவ்யா-தலிகலப-ஸஸ்ரீபி-ரலகை:
பரீதம் தே வக்த்ரம் பரிஹஸதி பங்கேருஹ-ருசிம் |
தரஸ்மேரே யஸ்மிந் தஶநருசி-கிஞ்ஜல்க-ருசிரே
ஸுகந்தௌ மாத்யந்தி ஸ்மர-தஹந-சக்ஷுர்-
மதுலிஹ: || 45 ||

கருத்துரை

தாயே, உன் முகமாகிய தாமரை மலர் சற்று மலர்ந்தது போல் புன்சிரிப்புடன் கூடியுள்ளது. உனது பற்களாகிய கேஸரங்கள் அதற்குள்ளன. தாமரை மலரின் வாசனையும் உன் முகத்திற்கு உள்ளது. அந்த உன் திருமுகமாகிய தாமரை மலரைப் பரமேசுவரனுடைய கண்களாகிய வண்டுகள் வட்டமிட்டு மகிழ்ச்சியடைகின்றன. அந்த நெற்றியைச் சுற்றிலும் சிறு வண்டுகள் போன்ற முன் நெற்றி மயிர்கள் பரவியுள்ளன. இத்தகைய உன் முகம் தாமரை மலரைப் பரிகசிக்கின்றது.

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு அல்லது வடக்கு முகமாக அமர்ந்து, 45 நாட்கள், தினந்தோறும் 1000 தரம் இந்த சுலோகத்தை ஜபித்தால் வருங்காலத்தை உணரும் சக்தியுண்டாகி சொன்னதெல்லாம் பலிக்கும்.

நிவேதனம் : த்ரிமதுரம்.

46

ஸ்ரீ விமல லலாடாயை நம :

புத்ர லாப முண்டாக

(ஸுகுண புத்ர லாபார்த்தம்)

தேவியின் நெற்றி

ललाटं लावण्य-द्युति-विमल-माभाति तव यत्
द्वितीयं तन्मन्ये मकुटघटितं चन्द्रशकलम् ।
विपर्यास-न्यासा-दुभयमपि सम्भूय च मिथ:
सुधालेपस्यूति: परिणमति राका-हिमकर: ॥ ४६ ॥

லலாடம் லாவண்ய-த்யுதி-விமல-மாபாதி தவ யத்
த்விதீயம் தந்மந்யே மகுட-கடிதம் சந்த்ரஶகலம் |
விபர்யாஸ-ந்யாஸா-துபயமபி ஸம்பூய ச மிதஃ
ஸுதாலேப-ஸ்யூதிஃ பரிணமதி ராகா-ஹிமகரஃ || 46 ||

கருத்துரை

ஹே பகவதி, உன்னுடைய நெற்றியாவது உன் கிரீடத்தில் கீழ்நோக்கி தொங்கவிடப்பட்ட மற்றொரு சந்திர கலைபோல் காட்சி தருகிறது. ஏற்கனவே மேல் நோக்கிக் கிரீடத்திலுள்ள சந்திரகலையையும் உன் நெற்றியாகிய சந்திர கலையையும் மாற்றி வைத்தால் இரண்டும் சேர்ந்து பூர்ண சந்திரனாகக் காட்சி தரும்.

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு அல்லது வடக்கு முகமாக அமர்ந்து, 45 நாட்கள், தினந்தோறும் 1000 தரம் இந்த சுலோகத்தை ஜபம் செய்தால், பிள்ளையில்லாதவருக்குக் குணமுள்ள பிள்ளை யுண்டாகும். தவிர, கோரிய பலன்களெல்லாம் ஸித்திக்கும்

நிவேதனம் : பால் பாயஸமும், தேனும்.

47

ஸ்ரீ உமாயை நமஃ

தெய்வ ப்ரீதி பெற

(ஸகல தேவதாப்ரீதி ஸித்த்யர்த்தம்)

தேவியின் புருவங்கள்

भ्रुवौ भुग्ने किञ्चिद्भुवन-भय-भङ्ग-व्यसनिनि
त्वदीये नेत्राभ्यां मधुकर-रुचिभ्यां धृतगुणम् ।
धनु-र्मन्ये सव्येतरकर-गृहीतं रतिपतेः
प्रकोष्ठे मुष्टौ च स्थगयति निगूढान्तर-मुमे ॥ ४७ ॥

ப்ருவௌ புக்நே கிஞ்சித்புவந-பய-பங்க-வ்யஸநிநி
த்வதீயே நேத்ராப்யாம் மதுகர-ருசிப்யாம் த்ருத-
குணம் ॥
தநுர்-மந்யே ஸவ்யேதர கர-க்ருஹீதம் ரதிபதேஃ
ப்ரகோஷ்டே முஷ்டௌ ச ஸ்தகயதி நிகூடாந்தர-
முமே ॥ 47 ॥

கருத்துரை

உலக மக்களின் அச்சத்தை அகற்றுவதையே குறிக்கோளாகக் கொண்டவளே, உன்னுடைய சற்று வளைந்த புருவங்களை மன்மதனுடைய வில் என்று நினைக்கிறேன். இந்த வில் வண்டுகள் போலுள்ள உன் இரண்டு கண்களாகிய நாண் கயிற்றுடன் கூடியது. இதை மன்மதன் இடது கையில் வைத்துக் கொண்டிருப்பதால் முழங்கையிலிருந்து மணிக்கட்டும், கைவிரல்களின் பிடியும் இந்த வில்லின் நடுப் பகுதியை மறைக்கிறது என்று எண்ணுகிறேன்.

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு அல்லது வடக்கு முகமாக அமர்ந்து, 25 நாட்கள், தினந்தோறும் 1000 தரம் இந்த சுலோகத்தை ஜபித்தால், ஸகல தேவதைகளும் வசியமாவார்கள். அதன் மூலம் விரும்பிய காரியங்களெல்லாம் வெற்றியுண்டாகும்.

நிவேதனம்: பழம், தேங்காய், தேன்,

48

ஸ்ரீ விமாலாயை நம:

க்ரஹ தோஷம் நீங்க

(ஸர்வபேதர க்ரஹபாதா நிவ்ருத்யர்த்தம்)

தேவியின் கண்கள்

अहः सूते सव्यं तव नयन-मर्कात्मकतया
त्रियामां वामं ते सृजति रजनीनायकतया ।
तृतीया ते दृष्टि-र्दरदलित-हेमाम्बुज-रुचिः
समाधत्ते सन्ध्यां दिवस-निशयो-रन्तरचरीम् ॥ ४८ ॥

அஹ: ஸூதே ஸவ்யம் தவ நயந-மர்க்காத்மகதயா
த்ரியாமாம் வாமம் தே ஸ்ருஜதி ரஜநீ-நாயகதயா |
த்ருதீயா தே த்ருஷ்டிர்-தரதலித-ஹேமாம்புஜ-ருசி:
ஸமாதத்தே ஸந்த்யாம் திவஸ-நிஸயோ-ரந்தரசரீம் || 48 ||

கருத்துரை

தாயே, உன் வலது கண் சூரியனாக இருப்பதால் பகலைத் தோற்றுவிக்கிறது. உன் இடது கண் சந்திரனாக இருப்பதால் இரவைப் படைக்கிறது. உன்னுடைய மூன்றாவது கண் சற்று மலர்ந்த தங்கத் தாமரை மலர் போலிருப்பதால் இரவு பகல்களின் இடையேயுள்ள காலை மாலைச் சந்தியா காலங்களை அமைக்கிறது.

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு அல்லது வடக்கு முகமாக அமர்ந்து, 9 நாட்கள், தினந்தோறும் 1000 தரம் இந்த சுலோகத்தை ஜபம் செய்தால், நவக்ரஹங்களால் உண்டாகும் தோஷங்களும், சிரமங்களும் நீங்கி சுகம், சம்பத்து உண்டாகும்.

நிவேதனம்: பழம், தேன், சித்திரான்னம்.

49

ஸ்ரீ விஶாலாயை நமঃ

நிதி லாபம் பெற

(நிதி லாபார்த்தம்)

தேவியின் பார்வை

विशाला कल्याणी स्फुटरुचि-रयोध्या कुवलयैः
कृपाधाराधारा किमपि मधुराऽऽभोगवतिका ।
अवन्ती दृष्टिस्ते बहुनगर-विस्तार-विजया
ध्रुवं तत्तन्नाम-व्यवहरण-योग्या विजयते ॥ ४९ ॥

விஶாலா கல்யாணீ ஸ்புடருசி-ரயோத்யா குவலயைঃ
க்ருபாதாரா தாரா கிமபி மதுராSSபோக-வதிகா |
அவந்தீ த்ருஷ்டிஸ்தே பஹுநகர-விஸ்தார விஜயா
த்ருவம் தத்தந்-நாம-வ்யவஹரண-யோக்யா
விஜயதே || 49 ||

கருத்துரை

தேவி, உன்னுடைய கண் விசாலமானது; மங்கள கரமானது; கரு நெய்தல் பூக்களால் யுத்தம் (போட்டி) செய்ய முடியாதது; கருணையாகிய பிரவாகத்திற்கு ஆதார மானது; வருணிக்க முடியாத அழகுடன் கூடியது; நீண்டது; பக்தர்களைக் காப்பது; பல தலைநகரங்கள் போல் ஒளிர்வது; இவ்வாறு இருப்பதால், விசாலா, கல்யாணீ, அயோத்யா, தாரா, மதுரா, அவந்தீ முதலிய பெயர்களால் அழைக்கத் தக்கதாக விளங்குகிறது. (இந்த சொற்களுக்கு இரு பொருள் கொண்டு பேசப்பட்டது)

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு அல்லது வடக்கு முகமாக அமர்ந்து, 10 நாட்கள், தினந்தோறும் 1000 தரம் இந்த சுலோகத்தை ஜபித்தால், புதையல் உள்ள இடத்தைக் காணலாம். இதற்குரிய யந்த்ரத்தை மஞ்சளில் எழுதி, அந்த மஞ்சளைச் சுட்டு, நல்லெண்ணெயில் உறைத்து மையாக்கி, பூனைக் கண்ணுள்ள பெண்கையால் மை தீட்டிக் கொண்டால் புதையல் உள்ள இடம் காணப்படும்.

நிவேதனம் : பொங்கலும், தேனும்.

|| ஸ்ரீ: ||



ஸ்ரீ பராசக்தியின் திரு அவதாரமாகிய
ஸ்ரீ துர்காதேவி

50

ஸ்ரீ கல்யாண்யை நம:

அம்மை நோய் நீங்க

(ஸ்போடகபாத நிவ்ருத்யர்த்தம்)

தேவியின் கடைக்கண் நோக்கு

कवीनां सन्दर्भ-स्तबक-मकरन्दैक-रसिकं
कटाक्ष-व्याक्षेप-भ्रमरकलभौ कर्णयुगलम् ।
अमुञ्चन्तौ दृष्ट्वा तव नवरसास्वाद-तरलौ
असूया-संसर्गा-दलिकनयनं किञ्चिदरुणम् ॥ ५० ॥

கவீநாம் ஸந்தர்ப்ப-ஸ்தபக-மகரந்தைக-ரஸிகம்
கடாக்ஷ-வ்யாக்ஷேப-ப்ரமர-கலபௌ-கர்ணயுகலம் |
அமுஞ்சந்தௌ த்ருஷ்ட்வா தவ நவரஸாஸ்வாத-தரலௌ
அஸூயா-ஸம்ஸர்கா-தலிக-நயநம் கிஞ்சிதருணம் ||50||

கருத்துரை

தாயே, உன்னுடைய இரண்டு காதுகளும் கவிகளின் காவியப் படைப்பாகிய புஷ்பக் கொத்திலுள்ள தேனைப் பருகும் ஆவலுடன் கூடியவை. அந்தக் காதுகளைச் சற்றும் பிரியாமல் உள்ள உன் கண்கள், சிருங்காரம் முதலிய நவ ரஸங்களைப் பருகும் சிறு வண்டுகள் போன்ற கடைக்கண் பார்வையுடன் கூடியவை. எனவே, உன் இரண்டு கண்களையும் பார்த்துப் பொறுமையினாலேபோல் உன் நெற்றிக் கண் கொஞ்சம் சிவப்பாக மாறுகிறது.

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு அல்லது வடக்கு முகமாக அமர்ந்து, 5 நாட்கள், தினந்தோறும் 1000 தரம் இந்த சுலோகத்தை ஜபம் செய்தால் வைசூரியினால் உடலெரிச்சல், கைகால்கள் முடமாதல், கண்பார்வை இழத்தல் போன்ற சிரமங்களெல்லாம் நீங்கிச் சுக முண்டாகும்.

நிவேதனம்: *கரும்பும், சர்க்கரையும்.*

51

ஸ்ரீ ஜநந்யை நம:

புகழ் பெற

(கீர்த்தி லாபார்த்தம்)

தேவியின் ரஸப் பார்வை

शिवे शृङ्गाराद्री तदितरजने कुत्सनपरा
सरोषा गङ्गायां गिरिशनयने विस्मयवती।
हराहिभ्यो भीता सरसिरुह-सौभाग्य-जननी
सखीषु स्मेरा ते मयि जननि दृष्टिः सकरुणा ॥ ५१ ॥

ஶிவே ஶ்ருங்காரார்த்ரா ததிதரஜநே குத்ஸநபரா
ஸரோஷா கங்காயாம் கிரிஶநயநே விஸ்மயவதீ
ஹராஹிப்யோ பீதா ஸரஸிருஹ-ஸௌபாக்யஜநநீ
ஸகீஷு ஸ்மேரா தே மயி ஜநநி த்ருஷ்டி: ஸகருணா || 51 ||

கருத்துரை

தாயே, உன்னுடைய பார்வையில் எண்வகைரஸங்களும் பொதிந்துள்ளன. அதாவது, ஸதாசிவன் விஷயத்தில் சிருங்கார ரஸமும், மற்ற மக்களிடம் பீபத்ஸமென்ற வெறுப்பும், கங்கையிடம் கோபமும், பரமசிவனின் நெற்றிக் கண்ணில் அத்புத ரஸமும், சிவ பெருமானின் பாம்புகளிடமிருந்து பயமும், தாமரை மலரைப் போல் சிவந்து வீரரஸமும், தோழிகளிடம் ஹாஸ்ய ரஸமும், என்னிடம் கருணாரஸமும் கொண்டதாக விளங்குகிறது.

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு, அல்லது வடக்கு முகமாக அமர்ந்து, 45 நாட்கள், தினந்தோறும் 1000 தரம் இந்த சுலோகத்தை ஜபித்தால், நல்ல புகழ் உண்டாகும். (சந்தனத்தின் மீது நீண்ட சதுரம் எழுதி, அதன் நடுவில் 'க்லீம்' என்று மூன்று முறை எழுதி, பொட்டு இட்டுக் கொண்டு உடலில் பூசிக் கொள்ளவும்.) ஸர்வஜன வச்ய முண்டாகும்.

நிவேதனம்: உளுந்து வடை, தேன்.

52

ஸ்ரீ கோத்ராதரபதி குலோத்தம்ஸகலிகாயை நமः

கண்நோய், காதுநோய் நீங்க

(நேத்ர ஶ்ரோத்ர ரோக நிவாரணார்த்தம்)

தேவியின் கண்கள்

गते कर्णाभ्यर्णं गरुत इव पक्ष्माणि दधती
पुरां भेत्तुश्चित्तप्रशम-रस-विद्रावण-फले ।
इमे नेत्रे गोत्राधरपति-कुलोत्तंस-कलिके
तवाकर्णाकृष्ट-स्मरशर-विलासं कलयतः ॥ ५२ ॥

கதே கர்ணாப்யர்ணம் கருத இவ பக்ஷ்மாணி தததீ
புராம் பேத்துஶ்-சித்தப்ரஶம-ரஸ-வித்ராவண-பலே |
இமே நேத்ரே கோத்ராதரபதி-குலோத்தம்ஸ-கலிகே
தவாகர்ணாக்ருஷ்ட-ஸ்மரஶர-விலாஸம் கலயதः || 52 ||

கருத்துரை

மலையரசனின் குலவிளக்கே, உன்னுடைய இந்த இரண்டு கண்கள், காதுகள் வரை பரவியுள்ளன. பாணங்களுக்கு இரு புறமும் கட்டப்படும் இறகுகள் போன்ற மயிர்களையும் தாங்குகின்றன. இவை திரிபுரங்களை அழித்த பரமசிவனின் சாந்தி ரஸத்தை அழிப்பவை. (ச்ருங்காரத்தைத் தோற்றுவிப்பவை என்பது கருத்து) காதுவரை இழுக்கப்பட்ட மன்மதனுடைய பாணங்களைப் போலுள்ளவை.

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு அல்லது வடக்கு முகமாக அமர்ந்து, 45 நாட்கள் தினந்தோறும் 1000 தரம் இந்த ச்லோகத்தை ஜபித்தால், கண்களிலும் காதுகளிலும் பார்வை மங்குதல், எரிச்சல், காதுகளில் சீழ் வழிதல், குத்துதல் போன்ற நோய்களெல்லாம் நீங்கும்.

நிவேதனம்: பாயஸமும், என்னோரையும்.

53

ஸ்ரீ ஈஶாந தயிதாயை நம:

சகுனம் பார்க்க

(தீபம் ப்ரகாசமாக இருந்தால் தேவி அருளால் நன்மை)

முக்கண்களும் முக்குணங்களும்

विभक्त-त्रैवर्ण्यं व्यतिकरित-लीलाञ्जनतया
विभाति त्वन्नेत्र-त्रितय-मिद-मीशान-दयिते ।
पुनः स्रष्टुं देवान् द्रुहिण-हरि-रुद्रानुपरतान्
रजः सत्वं बिभ्रत् तम इति गुणानां त्रयमिव ॥ ५३ ॥

விபக்த-த்ரைவர்ண்யம் வ்யதிகரித-லீலாஞ்ஜந-தயா
விபாதி த்வந்நேத்ர-த்ரிதய-மித-மீஶாந-தயிதே |
புந:ஸ்ரஷ்டும் தேவாந் த்ருஹிண-ஹரி-ருத்ரா-நுபரதாந்
ரஜ: ஸத்வம் பிப்ரத் தம இதி குணாநாம் த்ரயமிவ || 53 ||

கருத்துரை

பரமேசுவரனின் அன்புக்குரியவளே, நீ விளையாட்டிற்காகக் கண்களில் மையைத் தீட்டியிருக்கிறாய். எனவே, உன்னுடைய மூன்று கண்களும் சிவப்பு, வெளுப்பு, கருப்பு என்னும் மூன்று வர்ணங்களைக் கொண்டிருக்கின்றன. இதைப் பார்த்தால், பிரளய காலத்தில் உன்னில் அடங்குகிற பிரும்மா, விஷ்ணு, ருத்திரன் என்னும் தேவர்களை மறுபடியும் படைப்பதற்காக முறையே ரஜோகுணம், ஸத்வகுணம், தமோகுணம் என்பவைகளை உன் கண்கள் தாங்குகின்றனவா என்று எண்ணத் தோன்றுகிறது.

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு அல்லது வடக்கு முகமாக அமர்ந்து, 45 நாட்கள், தினந்தோறும் 1000 தரம் ஜபித்தால், தேவியின் அருள் கிடைக்கும். குத்து விளக்கேற்றி அதனடியில் ஜபம் செய்ய வேண்டும். தீபம் வெளிச்சமாக எரிந்தால் சுபம்; மந்தமாக இருந்தால் அசுபம்.

நிவேதனம்: பால் பாயஸம்.

54

ஸ்ரீ பஶுபதி பராதீந ஹ்ருதயாயை நம:

துஷ்ட ரோகங்கள் நீங்க

(துஷ்டவ்யாதி நிவாரணார்த்தம்)

முக்கண்களும் முந்நதிகளும்

पवित्रीकर्तुं नः पशुपति-पराधीन-हृदये
दयामित्रै-र्नेत्रै-ररुण-धवल-श्याम-रुचिभिः ।
नदः शोणो गङ्गा तपनतनयेति ध्रुवममुं
त्रयाणां तीर्थाना-मुपनयसि संभेद-मनघम् ॥ ५४ ॥

பவித்ரீ-கர்த்தும் ந: பஶுபதி-பராதீந-ஹ்ருதயே
தயாமித்ரைர்-நேத்ரை-ரருண-தவல-ஶ்யாம-ருசிபி: ।
நத: ஶோணோ கங்கா தபந-தநயேதி த்ருவமமும்
த்ரயாணாம் தீர்த்தாநா-முபநயஸி ஸம்பேத-மநகம் ॥ 54 ॥

கருத்துரை

பரமசிவனிடம் அர்ப்பணித்த மனமுள்ளவளே, உன்னுடைய கண்களில் சிவப்பு, வெளுப்பு, கருப்பு என்னும் மூன்றுவிதமான ரேகைகள் வெவ்வேறு வழியாகச் செல்கின்றன. அவைகள் மேற்கு நோக்கிச் செல்லும் சிவப்பு வர்ணமுள்ள சோணு நதி, கிழக்கு நோக்கிச் செல்லும் வெளுப்பான கங்கை, கிழக்கு நோக்கிச் செல்லும் கருப்பு வர்ணமுள்ள யமுனை, இவைகளின் சங்கமத்தை எங்களைப் புனிதம் செய்வதற்காக அமைத்திருக்கிருய் என்றே நினைக்கிறேன்.

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு அல்லது வடக்கு முகமாக அமர்ந்து, 45 நாட்கள், தினந்தோறும், 1000 தரம் இந்த சுலோகத்தை ஜபித்தால் பெண்களுக்கு ஏற்படும் சூதக நோய் முதலிய கொடிய நோய்களெல்லாம் நீங்கும்.

நிவேதனம் : வெல்லப் பாயஸம்.

55

ஸ்ரீ தரணிதர ராஜந்ய:தநயாயை நம:

சத்ரு மரிக்க

(சத்ரு மாரணார்த்தம்)

தேவியின் கண் இமைக்கொட்டுதல்

निमेषोन्मेषाभ्यां प्रलयमुदयं याति जगती
तवेत्याहुः सन्तो धरणिधर-राजन्यतनये ।
त्वदुन्मेषाज्जातं जगदिद-मशेषं प्रलयत :
परित्रातुं शङ्के परिहृत-निमेषा-स्तव दृशः ॥ ५५ ॥

நிமேஷோந்மேஷாப்யாம் ப்ரலய-முதயம் யாதி ஜகதீ
தவேத்யாஹுஸ் ஸந்தோ தரணிதர-ராஜந்ய-தநயே |
த்வதுந்மேஷாஜ்ஜாதம் ஜகதித-மஶேஷம் ப்ரலயதஃ
பரித்ராதும் ஶங்கே பரிஹ்ருத-நிமேஷாஸ்-தவ த்ருஶஃ || 55 ||

கருத்துரை

மலையரசனின் மகளே, நீ இமைக் கொட்டுதலால் (கண்களை மூடித் திறப்பதால்) உலகம் அழிந்து மறுபடியும் தோன்றுகிறது என அறிஞர்கள் கூறுகிறார்கள். எனவே, உன் கண் திறப்பினால் தோன்றிய இவ்வுலகமனைத்தும் அழியாமல் காப்பதற்காகவே, உன் கண்கள் இமைக் கொட்டாமல் இருக்கின்றன என்று எண்ணுகிறேன். (தேவதைகளுக்கு இமைக் கொட்டுதல் இல்லை என்பது மரபு)

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு அல்லது வடக்கு முகமாக, 45 நாட்கள் தினந்தோறும் 2500 தரம் இந்த சுலோகத்தை ஜபம் செய்தால், தம்மை அழிக்க நினைக்கும் பகைவன் அழிவான். விரைவாதம் முதலான அண்ட நோய்களும் நீங்கும்.

நிவேதனம் : பாயஸம், தேங்காய், வெற்றிலைப் பாக்கு.

56

ஸ்ரீ அபர்ணாயை நமः

சிறைவாசம் நீங்க

(காராக்ருஹபாதா நிவ்ருத்யர்த்தம்)

தேவியின் கண்கள் பெருமை

तवापर्णे कर्ण-जप-नयन-पैशुन्य-चकिता
निलीयन्ते तोये नियत-मनिमेषाः शफरिकाः ।
इयं च श्री-र्बद्धच्छद-पुट-कवाटं कुवलयं
जहाति प्रत्यूषे निशि च विघटय्य प्रविशति ॥ ५६ ॥

தவாபர்ணே-கர்ணே-ஜப-நயந-பைஶுந்ய-சகிதா
நிலீயந்தே தோயே நியத-மநிமேஷாः ஶபரிகாः !
இயஞ் ச ஸ்ரீர்-பத்தச்சத-புட-கவாடம் குவல்யம்
ஜஹாதி ப்ரத்யூஷே நிஶி-ச விகடய்ய ப்ரவிஶதி || 56 ||

கருத்துரை

ஹே பார்வதிதேவி, உன் கண்கள் உன் காதுகளின் அருகில் சென்று கலகம் (கோழிச் சொல்லுதல்) செய்கின்றனவோ என்ற பயத்தால் உன்னைப் போல் இமைக் கொட்டாத மீன்கள் தண்ணீரில் மறைந்து விடுகின்றன. இந்த உன் கண்களிலுள்ள ஒளியாகிய லக்ஷ்மி விடியற் காலையில் இதழ்களாகிய கதவுகளால் மூடப்பெறும் கரு நெய்தல் புஷ்பத்தை விட்டு அகல்கிறாள். மறுபடியும் இரவில் அந்த இதழ்களைத் திறந்து கொண்டு உள்ளே புகுகிறாள்.

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு அல்லது வடக்கு முகமாக அமர்ந்து, 45 நாட்கள், தினந்தோறும் 20000 தரம் இந்த சுலோகத்தை ஜபம் செய்தால், காலுக்கிட்ட விலங்குகள் தெறித்தோடும். கதவுகளுக்கிட்ட பூட்டுகளும் தெறிக்கும். பந்த விமோசனம் உண்டாகும்.

நிவேதனம் : தேன்.

|| ஸ்ரீ: ||



ஸ்ரீ பராசக்தியின் திரு அவதாரமான
ஸ்ரீ சாகம்பரீ தேவி

57

ஸ்ரீ ஶிவாயை நம꞉

ஸுபிக்ஷம் ஏற்பட

(ஸர்வ ஸம்பத் ஸம்ருத்யர்த்தம்)

தேவியின் கடைக்கண் பெருமை

दृशा द्राघीयस्या दरदलित-नीलोत्पल-रुचा
दवीयांसं दीनं स्नपय कृपया मामपि शिवे ।
अनेनायं धन्यो भवति न च ते हानि-रियता
वने वा हर्म्ये वा समकर-निपातो हिमकर: ॥ ५७ ॥

த்ருஶா த்ராகீயஸ்யா தரதலித-நீலோத்பல-ருசா
தவீயாம்ஸம் தீநம் ஸ்நபய க்ருபயா மாமபி ஶிவே ;
அநேநாயம் தந்யோ பவதி ந ச தே ஹாநி-ரியதா
வநே வா ஹர்ம்யே வா ஸமகர-நிபாதோ ஹிமகர꞉ || 57 ||

கருத்துரை

ஸகல மங்களங்களையும் அளிப்பவளே ! உன் கடைக்கண் பார்வை சற்றே மலர்ந்த கருநெய்தல் புஷ்பம் போல் விளங்குகிறது; காது வரை நீண்டுள்ளது. உன்னை நெருங்காமல் உள்ள இந்த ஏழையை அந்தப் பார்வையால் தயவு செய்து ஸ்நானம் செய்துவை. அதனால் நான் புண்ணியமும் செல்வமும் பெறுவேன். இதனால் உனக்கு எந்தக் குறையும் இல்லை. சந்திரன், காட்டிலும் அரண்மனையிலும் பாரபக்ஷமின்றி ஒரே விதமாகத்தானே காய்கின்றான் ?

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு, அல்லது வடக்கு முகமாக அமர்ந்து 6 நாட்கள் தினந்தோறும் 25,000 தரம் இந்த சுலோகத்தை ஜபம் செய்தால், ஒவ்வொருவருக்கும் தேவையான வீடு, வாகனம், மனை, மனைவி முதலான ஸகல சுகங்களும் உண்டாகும். நாட்டில் சுபிக்ஷம் ஏற்படும்.

நிவேதனம் : தேனும், பாயஸமும்.

58

ஸ்ரீ அகராஜந்ய-தநயாயை நம:

புகழ் பெறவும் நோய் நீங்கவும்

(வ்யாதி நிவ்ருத்யர்த்தம், கீர்த்திலாபார்த்தம்)

தேவியின் (பாலிகள்) கன்னங்கள்

अरालं ते पालीयुगल-मगराजन्यतनये
न केषा-माधत्ते कुसुमशर-कोदण्ड-कुतुकम् ।
तिरश्चीनो यत्र श्रवणपथ-मुल्लङ्घ्य विलसन्
अपांग-व्यासंगो दिशति शरसन्धान-धिषणाम् ॥ ५८ ॥

அராலம் தே பாலீயுகல-மகராஜந்யதநயே
ந கேஷா-மாதத்தே குஸுமஶர-கோதண்ட-குதுகம் |
திரஶ்சீநோ யத்ர ஶ்ரவணபத-முல்லங்க்ய விலஸந்
அபாங்க வ்யாஸங்கோ திஶதி சரஸந்தாந-திஷணாம் || 58

கருத்துரை

பர்வத ராஜ புத்திரியே, காதுகளுக்கும் கண்களுக்கும் இடையே வளைவாக உள்ள உன் கன்னங்கள் மன்மதனுடைய வில் என்று யாருக்குத் தோன்றுது? ஏனென்றால், இந்தக் கன்னத்தில் உன் கடாக்ஷம் காதுகளையும் தாண்டி பிரகாசிப்பதால், மன்மதன் பாணங்களைப் பிரயோகம் செய்வது போலிருக்கிறதன்றோ!

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு அல்லது வடக்கு முகமாக அமர்ந்து, 45 நாட்கள், தினந்தோறும் இந்த சுலோகத்தை 1000 தரம் ஜபம் செய்தால், எங்கும் செல்வாக்கும், புகழும் உண்டாகும். ஸகல நோய்களும் நீங்கும்.

நிவேதனம் : தேனும் சித்ரான்னமும்

59

மனேவியின் ப்ரீதியைப் பெற

(பத்நீ ஸௌமநஸ்ய லாபார்த்தம்)

தேவியின் திருமுகம்

स्फुरद्गण्डाभोग-प्रतिफलित-ताटङ्कयुगलं
चतुश्चक्रं मन्ये तव मुखमिदं मन्मथरथम् ।
यमारुह्य द्रुह्य-त्यवनिरथ-मर्केन्दुचरणं
महावीरो मारः प्रमथपतये सज्जितवते ।। ५९ ।।

ஸ்புரத்கண்டாபோக-ப்ரதிபலித-தாடங்க-யுகளம்
சதுஶ்சக்ரம் மந்யே தவமுகமிதம் மந்மதரதம் |
யமாருஹ்ய த்ருஹ்யத்-யவநிரத-மர்க்கேந்து-சரணம்
மஹாவீரோ மாரஃ ப்ரமதபதயே ஸஜ்ஜிதவதே || 59 ||

கருத்துரை

ஹே தேவி, உன்னுடைய தாடங்கங்கள் என்னும் ஸ்ரீசக்ர ரூபமான வைரத் தோடுகள் உன் கன்னங்களில் பிரதிபலிக்கின்றன. அவைகளுடன் கூடிய உன் திருமுகத்தை நான்கு சக்கரங்களுடன் கூடிய மன்மதனின் ரதமெனக் கருதுகிறேன். இந்த ரதத்தில் ஏறிக் கொண்டுதான் மன்மதன் சூரியனேயும் சந்திரனேயும் சக்கரங்களாகக் கொண்ட பூமியாகிய ரதத்தில் ஏறி, திரிபுரங்களே அழித்த பரமசிவனுடன் போர் புரிகிருனே!

ஜப முறையும் பலனும்

காலேயில், கிழக்கு அல்லது வடக்கு முகமாக அமர்ந்து, 3 நாட்கள், தினந்தோறும் 25,000 தரம் இந்த சுலோகத்தை ஜபம் செய்தால், மனேவியின் அன்பைப் பெறலாம். சிறந்த பதவியும் கிடைக்கும்.

நிவேதனம் : வெண்பொங்கலும் தேனும்.

60

ஸ்ரீ ஶர்வாண்யை நம:

கல்வி அறிவு பெற

(ஸர்வ வித்யா பாரங்கதத்வ ஸித்யர்த்தம்)

தேவியின் இனிய பேச்சு

सरस्वत्याः सूक्ती-रमृतलहरी-कौशलहरीः
पिबन्त्याः शर्वाणि श्रवण-चुलुकाभ्या-मविरलम् ।
चमत्कार-श्लाघाचलित-शिरसः कुण्डलगणो
झणत्कारैस्तारैः प्रतिवचन-माचष्ट इव ते ॥ ६० ॥

ஸரஸ்வத்யா: ஸூக்தீ-ரம்ருத-லஹரீ-கௌஶலஹரீ:
பிபந்த்யா: ஶர்வாணி ஶ்ரவண-சுலுகாப்யா-மவிரலம் |
சமத்கார-ஶ்லாகாசலித ஶிரஸ: குண்டலகணோ
ஜணத்காரைஸ்-தாரை: ப்ரதிவசந-மாசஷ்ட இவ தே || 60 ||

கருத்துரை

ஹே பரமசிவன் பத்தினியே! உன் இனிய பேச்சு அமிருததாரையின் இனிப்பையும் வெற்றி கொண்டது. அத்தகைய உன் இனிய சொற்களை ஸரஸ்வதி தேவி வியப்புடன் தலையசைத்துக் காதுகளால் பருகுகிறாள். அவள் தலையை அசைக்கும் போது ஒலிக்கும் அவளது கர்ண குண்டலங்கள், ஆமோதிக்கும் வார்த்தைகளைச் சொல்பவை போலிருக்கின்றன.

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு அல்லது வடக்கு முகமாக அமர்ந்து, 45 நாட்கள், தினந்தோறும் 1000 தரம் இந்த சுலோகத்தை ஜபம் செய்தால், ஸகலகலா ஞானமும், சென்றவிடமெல்லாம் செல்வாக்கும் உண்டாகும்.

நிவேதனம்: *பால் பாயஸமும், தேனும்.*

61

ஸ்ரீ துஹிநகிரி வம்ஶ த்வஜபட்யை நமஃ

விரும்பியதைப் பெற

(சிந்தித மநோரத பூர்த்யர்த்தம்)

தேவியின் நாசி

असौ नासावंश-स्तुहिनगिरिवंश-ध्वजपटि
त्वदीयो नेदीयः फलतु फल-मस्माकमुचितम् ।
वहत्यन्तर्मुक्ताः शिशिरकर-निश्वास-गलितं
समृद्धया यस्तासां बहिरपि च मुक्तामणिधरः ॥ ६१ ॥

அஸௌ நாஸாவம்ஶஸ்-துஹிநகிரிவம்ஶ-த்வஜபடி
த்வதீயோ நேதீயஃ பலது பல-மஸ்மாக-முசிதம் |
வஹத்யந்தர்-முக்தாஃ ஶிஶிரகர-நிஶ்வாஸ-கலிதம்
ஸம்ருத்த்யா யஸ்தாஸாம் பஹிரபி ச முக்தாமணிதரஃ ||61||

கருத்துரை

பனிமலையரசனின் குலக்கொடியே, உன்னுடைய நாசியாகிய மூங்கில் தன்னுள்ளே முத்துக்களைத் தாங்குகிறது. ஆகவே, உன் இடது நாசியாகிய சந்திர நாடி வழியாக வரும் மூச்சுக் காற்று அம்முத்துக்களை வெளியிலும் கொண்டு வருகிறது. மற்றும் முத்துமணியையும் தரித்துள்ள மூங்கில் போன்ற உன் நாசியானது எங்களுக்கு விரைவில் கிடைக்கக் கூடிய தகுந்த பயனை அளிப்பதாகுக.

ஜப முறையும் பலனும்

காலையில் கிழக்கு அல்லது வடக்கு முகமாக அமர்ந்து, 8 நாட்கள், தினந்தோறும் 12,000 தரம் இந்த சுலோகத்தை ஜபம் செய்தால், எடுத்த காரியம் எல்லாவற்றிலும் தடையின்றி வெற்றியுண்டாகும்.

நிவேதனம் : வெண்பொங்கல், தேன், பழம், தேங்காய்.

62

ஸ்ரீ ஸுதத்யை நம:

ஸுகமான தூக்கம் பெற

(ஸுக நித்ரா லாபார்த்தம்)

தேவியின் உதடுகள்

प्रकृत्याऽऽरक्तााया-स्तव सुदति दन्तच्छदरुचेः
प्रवक्ष्ये सादृश्यं जनयतु फलं विद्रुमलता ।
न बिंबं तद्बिंब-प्रतिफलन-रागा-दरुणितं
तुलामध्यारोढुं कथमिव विलज्जेत कलया ॥ ६२ ॥

ப்ரக்ருத்யாSSரக்தாயாஸ்-தவ ஸுததி தந்தச்சதருசே:
ப்ரவக்ஷ்யே ஸாத்ருஶ்யம் ஜநயது பலம் வித்ருமலதா |
ந பிம்பம் தத்பிம்ப-ப்ரதிபலந-ராகா-தருணிதம்
துலா-மத்யாரோடும் கதமிவ விலஜ்ஜேத கலயா || 62 ||

கருத்துரை

அழகிய பற்கள் அமைந்த தேவி, உன்னுடைய உதடுகளின் வர்ணம் இயற்கையாகவே சிவப்பு. இதற்கு உவமை கூறப் புகுகிறேன். பவழக்கொடிக்குப் பழம் கிடையாது. அது பழத்தைத் தோற்றுவித்தால் அதை உவமையாகக் கூறலாம். கோவைப்பழமும் இயற்கையாகச் சிவந்ததல்ல; உன் உதட்டின் சிவப்பு அதில் பிரதிபலித்திருப்பதால்தான் அதுவும் சிவப்பாக இருக்கிறது. ஆகவே, கோவைப்பழம் பதினாறில் ஒரு பங்கு கூட உன் உதட்டுச் சிவப்புடன் ஒப்பிட முடியாமையால் வெட்கமுற்றிருக்கிறது.

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு அல்லது வடக்கு முகமாக அமர்ந்து 8 நாட்கள், தினந்தோறும் 1000 தரம் இந்த சுலோகத்தை ஜபம் செய்தால், தூக்கம் இல்லாமல் வருந்துபவர்களுக்கு நல்ல தூக்கம் உண்டாகும். (ஒரு தங்கத்தகட்டில் சதுரமாகக் கோடு அடித்து, அதன் மத்தியில், 'மம், மம், மம்' என்று எழுத வைத்து ஜபம் செய்தபின் தலைகாணிக்கு அடியில் வைத்துப் படுக்கவும்.

நிவேதனம்: உளுந்துப் பொங்கல்.

63

ஸ்ரீ ஸ்புடருசயே நமஃ

அதிகாரம் பெற

(சாஸித்ருத்வ ஸித்யர்த்தம்)

தேவியின் முகமே சந்திரன்

स्मितज्योत्स्नाजालं तव वदनचन्द्रस्य पिबतां
चकोराणा-मासी-दतिरसतया चञ्चु-जडिमा ।
अतस्ते शीतांशो-रमृतलहरी-माम्लरुचयः
पिबन्ति स्वच्छन्दं निशि निशि भृशं काञ्जिकधिया ॥

ஸ்மிதஜ்யோத்ஸ்நாஜாலம் தவ வதந-சந்த்ரஸ்ய பிபதாம்
சகோராணா-மாஸீ-ததிரஸதயா சஞ்சு-ஜடிமா |
அதஸ்தே பீதாம்ஸோ-ரம்ருதலஹரீ-மாம்லருசயஃ
பிபந்தி ஸ்வச்சந்தம் நிபி நிபி ப்ருஸம் காஞ்ஜிகதியா ||63||

கருத்துரை

தாயே, உன் முகமே சந்திரன்; உன் புன்சிரிப்பே வெண்ணிலா என்று எண்ணி சகோர பக்ஷிகள் மிக்க இனிய தான உன் புன்சிரிப்பாகிய வெண்ணிலாவை அதிக அளவில் பானம் செய்துவிட்டதால் அவைகளுக்குத் திகட்டல் ஏற்பட்டு விட்டது. அதற்காக அந்த பக்ஷிகள், புளிப்பை மாற்று ரஸமாகக் குடிக்க விரும்பி, சந்திரனின் அமிருதப் பெருக்கைப் புளித்த கழிவுநீர் என்று நினைத்து ஒவ்வொரு இரவிலும் அதைத் திருப்தியாகப் பானம் செய்கின்றன.

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு அல்லது வடக்கு முகமாக அமர்ந்து, 30 நாட்கள், தினந்தோறும் இந்த சுலோகத்தை 30,000 தரம் ஜபித்தால் உயர்ந்த பதவியையும், அதிகாரத்தையும் பெற லாம். இவ்வுலகில் எல்லோரையும் மோகிக்கச் செய்யும் சக்தி யும் உண்டாகும்.

நிவேதனம் : தேன், பழம், தேங்காய், தயிர்சாதம்.

64

ஸ்ரீ அயோத்யாயை நமஃ

ஸ்த்ரீகளின் வியாதி நீங்க

(ஸ்த்ரீ ரோக நிவ்ருத்யர்த்தம்)

தேவியின் நாக்கு

अविश्रान्तं पत्यु-र्गुणगण-कथाम्रेडनजपा
जपापुष्पच्छाया तव जननि जिह्वा जयति सा ।
यदग्रासीनायाः स्फटिकदृष-दच्छ-च्छविमयी
सरस्वत्या मूर्तिः परिणमति माणिक्यवपुषा ॥ ६४ ॥

அவிஸ்ராந்தம் பத்யுர்-குணகண-கதாம்ரேடநஜபா
ஜபாபுஷ்பச்சாயா தவ ஜநநி ஜிஹ்வா ஜயதி ஸா |
யதக்ராஸீநாயாஃ ஸ்படிகத்ருஷ-தச்சச்சவி-மயீ
ஸரஸ்வத்யா மூர்த்திஃ பரிணமதி மாணிக்யவபுஷா || 64 ||

கருத்துரை

ஹே தாயே, செம்பருத்திப் பூப் போலுள்ள உன்னுடைய நாக்கு ஸதா உன் கணவனை பரமசிவன் செய்த திரிபுர ஸம்ஹாரம் முதலிய மங்களகரமான கதைகளைத் திரும்பத் திரும்ப சொல்வதையே மந்த்ர ஜபமாகக் கொண்டிருக்கிறது. அந்த நாக்கின் நுனியில் வஸிக்கின்ற காரணத்தால் தான் ஸரஸ்வதியின் ஸ்படிகம் போன்ற வெளுத்தமேனி, மாணிக்கம் போல் சிவப்பாக மாறுகின்றது.

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு, அல்லது வடக்கு முகமாக அமர்ந்து, 18 நாட்கள், தினந்தோறும் 25,000 தரம் இந்த சுலோகத்தை ஜபித்தால் பெண்களுக்கு ஏற்படும் எல்லா நோய்களும் நீங்கும். நினைத்த காரியமும் நிறைவேறும்.

நிவேதனம் : *வெல்லப் பாயஸம்.*

65

ஸ்ரீ மாத்ரே நமஃ

அனைத்திலும் வெற்றி பெற

(ஸர்வதோ விஜய ஸித்த்யர்த்தம்)

தேவியின் நிர்மால்யச் சிறப்பு

रणे जित्वा दैत्या-नपहृत-शिरस्त्रैः कवचिभिः
निवृत्तै-श्चण्डांश-त्रिपुरहर-निर्माल्य-विमुखैः ।
विशाखेन्द्रोपेन्द्रैः शशिविशद-कर्पूरशकला
विलीयन्ते मातस्तव वदनताम्बूल-कबलाः ॥ ६५ ॥

ரணே ஜித்வா தைத்யா-நபஹ்ருத-ஶிரஸ்த்ரைஃ கவசிபிஃ
நிவ்ருத்தைஶ் சண்டாம்ஶ-த்ரிபுரஹர-நிர்மால்ய-விமுகைஃ
விஶாகேந்த்ரோபேந்த்ரைஃ ஶஶிவிஶத-கர்ப்பூரஶகலா
விலீயந்தே மாதஸ்தவ வதந-தாம்பூல-கபலாஃ || 65 ||

கருத்துரை

ஹே தாயே, ஸுப்ரஹ்மண்யர், தேவேந்திரன், மஹா விஷ்ணு என்பவர்கள், இரும்புக்கவசங்கள் பூண்டு போரில் அசுரர்களை ஜெயித்து விட்டுத் திரும்பி, உன் அருகில் வரும் போது, மரியாதைக்காகத் தமது தலையில் உள்ள தலைப் பாகையை நீக்கிக் கையில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள், சண்டிகேசுவரனின் பாகமாகிய பரமசிவனின் நிர்மால்யத்தைப் பொருட்படுத்தாமல், சந்திரன் போன்று வெளுப்பான பச்சைக் கர்ப்பூரம் கலந்ததும் நீ வாயில் மென்று கொடுத்ததுமான தாம்பூலக் கவளங்களைப் பெற்று நன்கு மென்று தின்கிறார்கள்.

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு, அல்லது வடக்கு முகமாக அமர்ந்து, 45 நாட்கள், தினந்தோறும் 1000 தரம் இந்த சுலோகத்தை ஜபித்தால், எடுத்த காரியம் எதுவாக இருந்தாலும் தோல்வி யென்பதே இல்லாமல் வெற்றியுண்டாகும்.

நிவேதனம் : தேன்.

66

ஸ்ரீ ஸாது வசநாயை நம:

ஸர்வ ரோக நிவாரணம்

(ஸர்வ ரோக நிவாரணார்த்தம்)

தேவியின் வாக்கு வன்மை

विपञ्च्या गायन्ती विविध-मपदानं पशुपते:
त्वयारब्धे वक्तुं चलितशिरसा साधुवचने ।
तदीयै-र्माधुर्यै-रपलपित-तन्त्रीकलरवां
निजां वीणां वाणी निचुलयति चोलेन निभृतम् ॥६६॥

விபஞ்ச்யா காயந்தீ விவித-மபதாநம் பசுபதேः
த்வயாரப்தே வக்தும் சலிதசிரஸா ஸாதுவசநே |
ததீயைர்-மாதுர்யை-ரபலபித-தந்த்ரீ-கலரவாம்
நிஜாம் வீணாம் வாணீ நிசுலயதி சோலேந நிப்ருதம் || 66 ||

கருத்துரை

தாயே, ஸரஸ்வதிதேவி பரமசிவனுடைய பலவிதமான சரித்திரத்தைத் தனது வீணையில் கானம் செய்கிறாள். நீ அதைக் கேட்டு மகிழ்ச்சியோடு தலையை அசைத்து, 'ஆஹா' என்று சொல்ல ஆரம்பித்தாய். அந்த உன் பேச்சின் இனிமை, தன் வீணைத் தந்தியின் ஒலியைப் பரிகாசம் செய்வது போலிருப்பதால் ஓசைப்படாமல் ஸரஸ்வதி தேவி உறைத்துணியால் தன் வீணையை மறைத்து விடுகிறாள்.

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு அல்லது வடக்கு முகமாக அமர்ந்து, 3 நாட்கள், தினந்தோறும் 5000 தரம் இந்த சுலோகத்தை ஜபித்தால் எல்லாவித நோய்களும் நீங்கும். வீணை, பிடில், மிருதங்கம் முதலிய வாத்தியங்களை அப்யாஸம் செய்பவர்கள் இதைப் பாராயணம் செய்தால் அவைகளில் மிக்க வல்லவர்களாக ஆகி விடுவார்கள்.

நிவேதனம்: வெல்லம் சேர்த்த பொங்கல்.

67

ஸ்ரீ கிரிஸுதாயை நம:

ராஜப்ரீதி உண்டாக

(ராஜத்வாரே ஸர்வாநுகூல்ய ஸித்யர்த்தம்)

தேவியின் முகவாய்

करा‍ग्रेण स्पृष्टं तुहिनगिरिणा वत्सलतया
गिरीशेनो-दस्तं मुहुरधर-पानाकुलतया ।
करग्राह्यं शंभोर्मुख-मुकुरवृन्तं गिरिसुते
कथंकारं ब्रूम-स्तव चुबुक-मौपम्य-रहितम् ॥ ६७ ॥

கராக்ரேண ஸ்ப்ருஷ்டம் துஹிநகிரிணா வத்ஸலதயா
கிரீஶேநோதஸ்தம் முஹுரதர-பாநாகுலதயா |
கரக்ராஹ்யம் ஶம்போர்-முகமுகுரவ்ருந்தம் கிரிஸுதே
கதங்காரம் ப்ரூமஸ்-தவ-சுபுக-மௌபம்ய-ரஹிதம் || 67 ||

கருத்துரை

ஹே பர்வத ராஜகுமாரி, உன் முகவாய், உன் தந்தையான ஹிமவானால் அன்போடு தன் நுனிக்கையால் தொடப்பட்டது. அடிக்கடி அதரபானம் செய்ய வேண்டுமென்ற ஆசையால், பரமசிவனால் தமது திருக்கையால் உயரத் தூக்கப்படக் கூடியது. உன் முகமாகிய கண்ணாடியின் பிடிபோலுள்ளது. உவமையற்ற இத்தகைய உன் முகவாயை எப்படி நான் வர்ணிப்பேன்?

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு, அல்லது வடக்கு முகமாக அமர்ந்து, 45 நாட்கள், தினந்தோறும் 1000 தரம் இந்த சுலோகத்தை ஜபம் செய்தால் நினைத்த காரியம் அனைத்தும் நிறைவேறும். அரசாங்க அலுவல்களில் அநுகூலமுண்டாகும்.

நிவேதனம்: *பால்பாயஸமும், தாம்பூலமும்.*

68

ஸ்ரீ க்ருபாதாராயை நம:

ராஜப்ரீதி உண்டாக

(ராஜத்வாரே ஸர்வாநுகூல்ய ஸித்த்யர்த்தம்)

தேவியின் கழுத்து

भुजाश्लेषान्नित्यं पुरदमयितुः कण्टकवती
तव ग्रीवा धत्ते मुख-कमलनाल-श्रिय-मियम् ।
स्वतः श्वेता कालागरु-बहुल-जम्बालमलिना
मृणाली-लालित्यं वहति यदधो हारलतिका ॥ ६८ ॥

புஜாஸ்லேஷாந்நித்யம் புரதமயிதுஃ கண்டகவதீ
தவ க்ரீவா தத்தே முக-கமலநால-ஸ்ரிய-மியம் |
ஸ்வதஃ ஸ்வேதா காலாகரு-பஹுல-ஜம்பால-மலிநா
ம்ருணாலீ-லாலித்யம் வஹதி யததோ ஹாரலதிகா || 68 ||

கருத்துரை

ஹே பராசக்தியே, பரமசிவன் ஸதா தனது கைகளால் அணைத்துக் கொண்டிருப்பதால் உன் கழுத்து மயிர்க் கூச்ச மெடுத்திருக்கிறது. அது உன் முகமாகிய தாமரைப் பூவின் (முள்ளுடன் கூடிய) தண்டு போல் காட்சி தருகின்றது. தவிர நீ கழுத்தில் அணிந்துள்ள முத்துமாலை, அகருக் கட்டையின் சந்தனத்தால் பூசப்பட்டு, அழுக்கேறி, தாமரைக்கொடி போல் காணப்படுகிறது.

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு அல்லது வடக்குமுகமாக அமர்ந்து, 45 நாட்கள், தினந்தோறும் 1000 தரம் இந்த சுலோகத்தை ஜபம் செய்தால் தேவியின் அருளால் அரசாங்கத்தில் நன்மை ஏற்படும். இதில் அந்தாயாக ப்ரயோகம் குறிக்கப் பட்டிருப்பதால் அதைக் குருமூலம் அறிய வேண்டும்.

நிவேதனம்: *பால் பாயஸம்.*

69

ஸ்ரீ கதிகமக கீதைக நிபுணாயை நம:

எடுத்த காரியம் நிறைவேற

(ஆரப்த கார்ய பரிபூர்ணதா ஸித்யர்த்தம்)

தேவி கழுத்தின் மும்மடிப்புகள்

गले रेखास्तिस्रो गति-गमक-गीतैक-निपुणे
विवाह-व्यानद्ध-प्रगुणगुण-संख्या-प्रतिभुवः ।
विराजन्ते नानाविध-मधुर-रागाकर-भुवां
त्रयाणां ग्रामाणां स्थिति-नियम-सीमान इव ते ॥६९॥

கலே ரேகாஸ்திஸ்ரோ கதி-கமக-கீதைக நிபுணே
விவாஹ-வ்யாநத்த ப்ரகுணகுண-ஸங்க்யா ப்ரதிபுவ: |
விராஜந்தே நாநாவித-மதுர-ராகாகர-புவாம்
த்ரயாணாம் க்ராமாணாம் ஸ்திதி-நியம-ஸீமாந
இவ தே || 69 ||

கருத்துரை

கதி, கமகம், கீதம் என்னும் மூவகையான சங்கீதத்தில் வல்லவளே, உன் கழுத்தில் உள்ள மூன்று கோடுகள் விவாஹ காலத்தில் பரமசிவன் உன் கழுத்தில் கட்டிய மங்கள ஸூத்திரத்தின் மூன்று கயிறுகளை ஞாபகமூட்டுகின்றன. மற்றும், பலவித ராகங்களுக்கு இருப்பிடமான ஷட்ஜம், மத்யமம், காந்தாரம் என்னும் மூன்று வகை க்ராமங்களைப் பிரித்துக் காட்டுகிற எல்லைக் கோடுகள் போலவும் அவை விளங்குகின்றன.

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு அல்லது வடக்கு முகமாக அமர்ந்து, 45 நாட்கள், தினந்தோறும் 1000 தரம் இந்த சுலோகத்தை ஜபம் செய்தால், ஸகல காரியங்களிலும் ஸித்தியுண்டாகும். (தம்பதிகள் மகிழ்ச்சியுடனிருக்கும்பொழுது இதை ஜபிக்கும்படி சொல்லப்பட்டிருக்கிறது).

நிவேதனம் : தேன், தேங்காய், பழம், வெற்றிலைப்பாக்கு.

70

ஸ்ரீ தாராயை நம:

எடுத்த காரியம் நன்கு நிறைவேற

(ஆரப்த கார்ய பரிபூர்ணதாஸித்யர்த்தம்)

தேவியின் நான்கு புஜங்கள்

मृणाली-मृद्वीनां तव भुजलतानां चतसृणां
चतुर्भिः सौन्दर्यं सरसिजभवः स्तौति वदनैः ।
नखेभ्यः सन्त्रस्यन् प्रथम-मथना-दन्तकरिपोः
चतुर्णां शीर्षाणां सम-मभयहस्तार्पण-धिया ॥ ७० ॥

ம்ருணாலீ-ம்ருத்வீநாம் தவ புஜலதாநாம் சதஸ்ருணாம்
சதுர்ப்பிஃ ஸௌந்தர்யம் ஸரஸிஜபவஃ ஸ்தௌதி வதநைஃ
நகேப்யஃ ஸந்த்ரஸ்யந் ப்ரதம-மதநா-தந்தகரிபோஃ
சதுர்ணாம் ஸீர்ஷாணாம் ஸம-மபய-ஹஸ்தார்ப்பண-
தியா ॥ 70 ॥

கருத்துரை

தேவி, உன்னுடைய கைகள் தாமரைக் கொடிகளைப் போல் மிருதுவானவை. ஒரு சமயம் பிரம்மாவின் ஐந்தாவது தலையைப் பரமசிவன் நகத்தால் கிள்ளி எறிந்து விட்டார். அதற்குப் பயந்து பிரமன் மீதமுள்ள தன் தலைகளுக்கு ஒரே காலத்தில் அபயமளிக்கவேண்டுமென்று உன் நான்கு கைகளின் அழகைத் தன் நான்கு வாய்களாலும் துதி செய்கிறார்.

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு அல்லது வடக்கு முகமாக அமர்ந்து, 45 நாட்கள், தினந்தோறும் 1000 தரம் இந்த சுலோகத்தை ஜபம் செய்தால் எடுத்த காரியம் அனைத்தும் நிறைவேறும் வியாபாரத்தில் வெற்றியும், அதிக லாபமும் உண்டாகும்.

நிவேதனம்: *மஞ்சள் பொங்கலும், தாம்பூலமும்.*

71

ஸ்ரீ உமாயை நம:

தேவதைகளை வசப்படுத்த

(தேவதா வசீகரணார்த்தம்)

தேவியின் கைவிரல் நகங்கள்

नखाना-मुद्योतै र्नवनलिनरागं विहसतां
करणां ते कान्ति कथय कथयामः कथमुमे ।
कयाचिद्वा साम्यं भजतु कलया हन्त कमलं
यदि क्रीडल्लक्ष्मी-चरणतल-लाक्षारस-चणम् ॥ ७१ ॥

நகாநா-முத்யோதைர்-நவநலிந-ராகம் விஹஸதாம்
கராணும் தே காந்திம் கதய கதயாமஃ கதமுமே |
கயாசித்வா ஸாம்யம் பஜது கலயா ஹந்த கமலம்
யதி க்ரீடல்லக்ஷ்மீ-சரண-தல-லாக்ஷா-ரஸ-சணம் || 71 ||

கருத்துரை

ஹே பார்வதிதேவி, உன் கைகள் தம் விரல்களில் உள்ள நகங்களின் காந்தியால் காலையில் மலர்ந்த தாமரை மலர் களின் ஒளியைப் பரிகசிக்கின்றன. அத்தகைய உன் கைகளின் அழகை நான் எப்படி வர்ணிப்பேன்? சொல். செந்தா மரை மலருக்குத் தன்னுள் வசிக்கும் மஹாலக்ஷ்மியின் உள்ளங்காலில் விளங்கும் மருதாணியாலல்லவா அவ்வளவு ஒளி வந்துள்ளது. அந்தச் செயற்கையொளியும் பதினாறில் ஒரு பங்குதான் உன் நக சோபைக்கு ஈடாக முடியும்.

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு அல்லது வடக்கு முகமாக அமர்ந்து, 45 நாட்கள், தினந்தோறும் 12,000 தரம் இந்த சுலோகத்தை ஜபம் செய்தால், யக்ஷிணி முதலிய தேவதைகள் வசிய மாவார்கள். (ஆலமரத்தடியில் உட்கார்ந்து ஜபம் செய்ய வேண்டும்.)

நிவேதனம் : தேன்.

72

ஸ்ரீ தேவ்யை நம:

யாத்திரையில் பயம் நீங்க

(யாத்ராயாம் அபய ஸித்யர்த்தம்)

தேவியின் ஸ்தனங்கள்

समं देवि स्कन्द-द्विपवदन-पीतं स्तनयुगं
तवेदं नः खेदं हरतु सततं प्रस्नुत-मुखम् ।
यदालोक्याशङ्काकुलित-हृदयो हासजनकः
स्वकुम्भौ हेरंबः परिमृशति हस्तेन झडिति ॥ ७२ ॥

ஸமம் தேவி ஸ்கந்த-த்விபவதந-பீதம் ஸ்தநயுகம்
தவேதம் நஃ கேதம் ஹரது ஸததம் ப்ரஸ்நுத-முகம் |
யதாலோக்யாஶங்காகுலித-ஹ்ருதயோ ஹாஸஜநகஃ
ஸ்வகும்பௌ ஹேரம்பஃ பரிம்ருஶதி ஹஸ்தேந ஜடிதி ||

கருத்துரை

ஹே தேவி, உன்னுடைய ஸ்தனங்கள் மஹாகணபதி, சுப்ரம்மண்யர் என்னும் இரு குழந்தைகளாலும் பானம் செய்யப்படுபவை. யானைத்தலையோனாகிய கணபதி தனது தலையிலுள்ள கும்பங்களை (குடங்களை)த்தான் தன் தாய் எடுத்துக் கொண்டு விட்டாளோ என்று பயந்து, தன் தலையில் அவை உள்ளனவா என்று தடவிப் பார்த்துக் கொள்கிறார். இதைக் கண்டு தாய் தந்தையர் சிரிக்கின்றனர். அத்தகைய தேவியின் ஸ்தனங்கள் நம் கஷ்டங்களையெல்லாம் அகற்றுவனவாகுக. (யானையின் தலையில் இருபகுதியாக, மேடாக உள்ளது கும்பஸ்தலம் எனப்படும்).

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு அல்லது வடக்கு முகமாக அமர்ந்து, 45 நாட்கள், தினந்தோறும் 1000 தரம் இந்த சுலோகத்தை ஜபம் செய்தால், யாத்திரையில் பேய், பிசாசு, சத்ரு, சிறை வாசம் போன்ற எல்லாவிதமான பயங்களும் நீங்கும்.

நிவேதனம் : தேன்.

73

ஸ்ரீ நகபதி பதாகாயை நம:

பால் பெருக

(க்ஷீராபிவ்ருத்யர்த்தம்)

தேவியின் ஸ்தனங்கள்

अमू ते वक्षोजा-वमृतरस-माणिक्य-कुतुपौ
न सन्देहस्पन्दो नगपति-पताके मनसि नः ।
पिबन्तौ तौ यस्मा-दविदित-वधूसङ्ग-रसिकौ
कुमारावद्यापि द्विरदवदन-क्रौञ्चदलनौ ॥ ७३ ॥

அமூ தே வக்ஷோஜா-வம்ருதரஸ-மாணிக்ய-குதுபௌ
ந ஸந்தேஹஸ்பந்தோ நகபதி-பதாகே மநஸி ந: |
பிபந்தௌ தௌ யஸ்மா-தவிதித-வதூஸங்க ரஸிகௌ
குமாராவத்யாபி த்விரதவதந-க்ரௌஞ்ச-தலநௌ || 73 ||

கருத்துரை

மலையரசனின் குலக்கொடியே, உன்னுடைய இரு ஸ்தனங்களும் அமிருதம் நிரம்பிய மாணிக்கத்தால் செய்யப் பட்ட குடுவைப் பாத்திரங்கள். இந்த ஸ்தனங்களை இப் பொழுதும் பானம் செய்து கொண்டிருக்கிற காரணத்தால் தான், கணபதியும் முருகனும் பெண் சகவாஸமே அறியாத குழந்தைகளாக இருந்து விட்டார்களோ!

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு, அல்லது வடக்கு முகமாக அமர்ந்து, 8 நாட்கள், தினந்தோறும் 1000 தரம் இந்த சுலோகத்தை ஜபம் செய்து, ஜலத்தில் ஒரு வட்டம் வரைந்து, அதன் நடுவே 'காம்' என்று எழுதி அந்த ஜலத்தை அருந்தினுல், தாய்ப்பாலில்லாதவருக்குப் பாலுண்டாகும், பசுக்களுக்கும் பால் அபிவிருத்தியாகும்.

நிவேதனம் : தேன்.

74

ஸ்ரீ அம்பாயை நமஃ

புகழ் உண்டாக

(யசோபிவ்ருத்யர்த்தம்)

தேவியின் இரு ஸ்தனங்களின் நடுப்பகுதி

वहत्यम्ब स्तम्बेरम-दनुज-कुम्भप्रकृतिभिः
समारब्धां मुक्तामणिभि-रमलां हारलतिकाम् ।
कुचाभोगो बिम्बाधर-रुचिभि-रन्तः शबलितां
प्रताप-व्यामिश्रां पुरदमयितुः कीर्तिमिव ते ॥ ७४ ॥

வஹத்யம்ப ஸ்தம்பேரம-தநுஜ-கும்பப்ரக்ருதிபிஃ
ஸமாரப்தாம் முக்தாமணிபி-ரமலாம் ஹாரலதிகாம் |
குசாபோகோ பிம்பாதர-ருசிபி-ரந்தஃ மபலிதாம்
ப்ரதாப-வ்யாமிஸ்ராம் புரதமயிதுஃ கீர்த்திமிவ தே || 74 ||

கருத்துரை

தாயே, உன்னுடைய இரு ஸ்தனங்களின் இடையே உள்ள மார்புப் பகுதி, கஜாஸுரனுடைய கும்ப ஸ்தலத்தில் தோன்றிய முத்துக்களால் கோர்க்கப்பட்ட முத்து மாலையைத் தாங்குகிறது. நிர்மலமான அந்த முத்துக்களில் மிகச் சிவந்த உன் உதட்டின் ஒளி வீசி, பல வர்ணமுள்ளதாகக் காட்சி யளிக்கிறது. மற்றும் திரிபுரங்களை அழித்த பிரதாபசாலி யான பரமசிவனின் புகழே போன்றுள்ளது.

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு அல்லது வடக்கு முகமாக அமர்ந்து, 3 நாட்கள் தினந்தோறும். 108 தரம் தெய்வ சந்நிதியில் இந்த சுலோகத்தை ஜபம் செய்தால் நல்ல புகழ் உண்டாகும்.

நிவேதனம் : பால் பாயஸம்.

75

ஸ்ரீ தரணிதர கந்யாயை நமஃ

கவிதா சக்தி யுண்டாக

(ஸத்கவநஶக்தி லாபார்த்தம்)

தேவியின் தாய்ப்பால்

तव स्तन्यं मन्ये धरणिधरकन्ये हृदयतः
पयः पारावारः परिवहति सारस्वतमिव ।
दयावत्या दत्तं द्रविडशिशु-रास्वाद्य तव यत्
कवीनां प्रौढाना-मजनि कमनीयः कवयिता ॥ ७५ ॥

தவ ஸ்தந்யம் மந்யே தரணிதரகந்யே ஹ்ருதயதஃ
பயஃ பாராவாரஃ பரிவஹதி ஸாரஸ்வத மிவ |
தயாவத்யா தத்தம் த்ரவிடஶிஶு-ராஸ்வாத்ய தவ யத்
கவீநாம் ப்ரௌடாநா-மஜநி கமநீயஃ கவயிதா || 75 ||

கருத்துரை

மலையரசனின் மகளே! உன் ஸ்தனங்களிலிருந்து பெருகும் பால், இதயத்தில் தோன்றிய பாற்கடல் போலவும், ஸாரஸ்வத ப்ரவாகம் போலவும் எனக்குத் தோன்றுகின்றது. உன் பாலை அருந்தித் திராவிட நாட்டில் பிறந்த (சங்கரர்) என்னும் இந்தச் சிசு பெரிய வித்வான்களுக்கிடையே எல்லோரையும் கவரக்கூடிய கவியாக ஆகிவிட்டானல்லவா!

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு, அல்லது வடக்கு முகமாக அமர்ந்து, 3 நாட்கள், தினந்தோறும் 12,000 தரம் இந்த சுலோகத்தை ஜபம் செய்தால், கவிதைகள் இயற்றும் அபாரசக்தி உண்டாகும்.

நிவேதனம்: வெண்பொங்கல், பழம், தேன்.

76

ஸ்ரீ அசல தநயாயை நம:

ஸர்வ வல்லமை பெற

(ஸர்வ ஶக்தத்வ லாபார்த்தம்)

தேவியின் நாபி

हरक्रोध-ज्वालावलिभि-रवलीढेन वपुषा
गभीरे ते नाभीसरसि कृतसङ्गो मनसिजः ।
समुत्तस्थौ तस्मा-दचलतनये धूमलतिका
जनस्तां जानीते तव जननि रोमावलिरिति ॥ ७६ ॥

ஹரக்ரோத-ஜ்வாலாவலிபி-ரவலீடேந வபுஷா
கபீரே தே நாபீ-ஸரஸி க்ருதஸங்கோ மநஸிஜ: |
ஸமுத்தஸ்த்தௌ தஸ்மா-தசலதநயே தூமலதிகா
ஜநஸ்தாம் ஜாநீதே தவ ஜநநி ரோமாவலிரிதி || 76 ||

கருத்துரை

ஹே பர்வதராஜ புத்ரி, மன்மதன் பரமசிவனுடைய கோபாக்னியால் சூழப்பட்டு, தாபம் தாங்காமல் உன்னுடைய தொப்புளாகிய தடாகத்தில் குதித்து மூழ்கி விட்டான். அவன் நெருப்புடன் நீரில் புகுந்ததால் மெல்லிய புகை மேலே கிளம்புகிறது. கொடி போன்று மெல்லியதான அந்தப் புகைக் கோடு தான் உன் நாபியைச் சுற்றிலுமுள்ள ரோமங்களென மக்கள் நினைக்கிறார்கள்.

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு, அல்லது வடக்குமுகமாக அமர்ந்து, 10 நாட்கள், தினந்தோறும் 1000 தரம் இந்த ஶ்லோகத்தை ஜபம் செய்தால் எடுத்த காரியம் எதுவாக இருந்தாலும் வெற்றி ஏற்படும்.

நிவேதனம்: தேங்காய், பழம், தயிர்சாதம்.

77

ஸ்ரீ பிவாயை நம :

வெற்றி பெற

(ஸர்வத்ர விஜயஸித்யர்த்தம்)

தேவியின் இடுப்பில் மெல்லிய ரேகை போன்ற ரோம வரிசை

यदेतत्कालिन्दी-तनुतर-तरङ्गाकृति शिवे
कृशे मध्ये किञ्चिज्जननि तव यद्भाति सुधियाम् ।
विमर्दा-दन्योन्यं कुचकलशयो-रन्तरगतं
तनूभूतं व्योम प्रविशदिव नाभिं कुहरिणीम् ॥ ७७ ॥

யதேதத் காலிந்தீ-தநுதர-தரங்காக்ருதி பிவே
க்ருபே மத்யே கிஞ்சிஜ்ஜநநி தவ யத்பாதி ஸுதியாம் |
விமர்தா-தந்யோந்யம் குசகலபயோ-ரந்தரகதம்
தநூபூதம் வ்யோம ப்ரவிபதிவ நாபிம் குஹரிணீம் || 77 ||

கருத்துரை

தாயே, மிகவும் குறுகியதான உன் இடுப்பின்மேல், கருப்பு வர்ணமுள்ள, யமுனா நதியின் சிறிய அலை போன்ற ஒரு ரோம வரிசை சாமுத்ரிக லக்ஷண மறிந்த வித்வான்களுக்கு மட்டுமே காணப்படுகிறது. இது ஸ்தனங்களுக்கிடையே உள்ள குறுகிய ஆகாசந்தானோ? அந்தக் குறுகிய ஆகாசம், ஸ்தனங்களின் உரைசலால், தான் அழிந்து விடுவோமென்று பயந்து கீழே நாபி கூபத்தில் ஒளிந்து கொள்ளச் செல்கிறதோ என்று எண்ணத் தோன்றுகிறது.

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு, அல்லது வடக்கு முகமாக அமர்ந்து, 15 நாட்கள், தினந்தோறும் 2000 தரம் இந்த சுலோகத்தை ஜபம் செய்தால் ஸகல காரிய ஜயம் உண்டாகும். (செந்தாமரைப் பூவைச் சுட்டுச் சாம்பலாக்கிப் பசு நெய்யில் குழைத்து, அதில் கீழ்நோக்கிய ஒரு முக்கோணத்தை எழுதி அதன் நடுவே 'க்லீம்' என்று எழுதி ஜபம் செய்தபின் அதை நெற்றியில் தரிக்கவும்.)

நிவேதனம் : பழமும் தேனும்

78

ஸ்ரீ கிரிஸுதாயை நம:

ராஜப்ரீதி ஏற்பட

(ராஜத்வாரே ஸர்வாநுகூலதாஸித்யர்த்தம்)

தேவியின் நாபி

स्थिरो गङ्गावर्तः स्तनमुकुल-रोमावलि-लता-
कलावालं कुण्डं कुसुमशर-तेजो-हुतभुजः ।
रते-र्लीलागारं किमपि तव नाभिर्गिरिसुते
बिलद्वारं सिद्धे-र्गिरिश-नयनानां विजयते ॥ ७८ ॥

ஸ்திரோ-கங்காவர்த்த: ஸ்தந- முகுல- ரோமாவலி-லதா-
கலாவாலம் குண்டம் குஸுமஶர-தேஜோ ஹுதபுஜ: |
ரதேர்-லீலாகாரம் கிமபி தவ நாபிர்-கிரிஸுதே
பிலத்வாரம் ஸித்தேர்-கிரிஶ-நயநாநாம் விஜயதே ||78||

கருத்துரை

ஹே பர்வத ராஜகுமாரி, உன்னுடைய நாபி, அசைவில்லாத கங்கையின் சுழல் போலவும், ஸ்தனங்களாகிய தாமரை மொட்டுக்களைத் தாங்கும் ரோமாவளியாகிய தாமரைத் தண்டுகளுக்குத் தண்ணீர் பாயும் பாத்தியாகவும், மன்மதனின் ஒளியாகிய அக்னிக்கு ஹோம குண்டமாகவும், அவன் பத்தினியான ரதி தேவியின் விளையாட்டு அறையாகவும், பரமசிவனின் கண்களின் தவப்பயனுக்குக் குகையின் த்வாரமாகவும் விளங்குகிறது.

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு, அல்லது வடக்கு முகமாக அமர்ந்து, 45 நாட்கள், தினந்தோறும் 108 தரம், இந்த சுலோகத்தை ஜபம் செய்தால், தடைப்பட்டுள்ள அரசாங்க அலுவல்களில் ஜயமுண்டாகும். (வாசனைச் சந்தனத்தில் முக்கோணம் எழுதி நடுவில் 'ஹ்ரீம்' என்று எழுதி, ஜபம் ஆனபின் நெற்றியில் தரிக்கவும்).

நிவேதனம: வெண்பொங்கலும், உளுந்து வடையும்.

79

ஸ்ரீ ஶைல தநயாயை நம:

இந்திர ஜால சக்தி பெற

(மோஹந ஶக்தி லாபார்த்தம்)

தேவியின் இடுப்பு

निसर्ग-क्षीणस्य स्तनतट-भरेण क्लमजुषो
नमन्मूर्ते-र्नारीतिलक शनकै-स्त्रुटयत इव ।
चिरं ते मध्यस्य त्रुटित-तटिनी-तीर-तरुणा
समावस्था-स्थेम्नो भवतु कुशलं शैलतनये ।। ७९ ।।

நிஸர்க-க்ஷீணஸ்ய ஸ்தந-தட-பரேண க்லமஜுஷோ
நமந்மூர்த்தேர்-நாரீதிலக ஶநகைஸ்-த்ருட்யத இவ |
சிரம் தே மத்யஸ்ய த்ருடித-தடிநீ-தீர-தருணா
ஸமாவஸ்தா-ஸ்தேம்நோ பவது குஶலம் ஶைலதநயே
|| 79 ||

கருத்துரை

பெண்களில் சிறந்த பர்வதராஜபுத்ரி, உன்னுடைய இடை இயற்கையிலேயே குறுகலானது. ஸ்தனங்களின் பாரம் தாங்காமல் ஒடிந்து விடுமோ என்று எண்ணும்படி வளைந்துள்ளது. எனவே, பிரவாகத்தால் இடிந்து போன கரையிலுள்ள மரத்தின் நிலையிலுள்ளது. இத்தகைய உன் இடுப்பு பல்லாண்டு பல்லாண்டாக க்ஷேமமாக இருக்கட்டும்.

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு, அல்லது வடக்கு முகமாக அமர்ந்து, 45 நாட்கள், தினந்தோறும் 1000 தரம் இந்த சுலோகத்தை ஜபம் செய்தால் இந்திர ஜால வித்யையில் வல்லமையும் ஸகல ஜன மோஹனமும் உண்டாகும்.

நிவேதனம் : பால் பாயஸமும், தேனும்.

80

ஸ்ரீ தேவ்யை நம:

மஹேந்த்ர ஜாலத்தில் வல்லமை ஏற்பட

(மஹேந்த்ர ஜால நிஷ்ணாததாவாப்த்யர்த்தம்)

தேவியின் இடுப்பிலுள்ள மும்மடிப்பு

कुचौ सद्यः स्विद्य-त्तटघटित-कूर्पासभिदुरौ
कषन्तौ दोर्मूले कनककलशाभौ कलयता ।
तव त्रातुं भङ्गादलमिति वलग्नं तनुभुवा
त्रिधा नद्धं देवि त्रिवलि लवलीवल्लिभिरिव ॥ ८० ॥

குசௌ ஸத்ய: ஸ்வித்யத்-தடக்டித-கூர்ப்பாஸ-பிதுரௌ
கஷந்தௌ தோர்-மூலே கநக-கலசாபௌ கலயதா |
தவ த்ராதும் பங்காதலமிதி வலக்நம் தநுபுவா
த்ரிதா நத்தம் தேவி த்ரிவலி லவலீ-வல்லிபிரிவ ॥ 80 ॥

கருத்துரை

ஹே தேவி, நீ பரமசிவனின் பெருமையை நினைத்தவுடன், தங்கக் குடங்கள் போன்ற உன் ஸ்தனங்கள் வேர்த்துப் பூரித்து, ரவிக்கையைக் கிழித்துக்கொண்டு வளர்ந்து, அக்குள்களை உறைகின்றதைப் பார்த்த மன்மதன், இந்த ஸ்தன பாரத்தால் இடுப்பு ஒடிந்து விடாமலிருக்க வேண்டுமே என்று பயந்து அதைக் காப்பதற்காக, த்ரிவளி என்னும் மும்மடிப்பாகிய வல்லிக் கொடிகளால் இடுப்பை மூன்று சுற்றாகக் கட்டியிருக்கிறானோ என்று எண்ணத் தோன்றுகிறது.

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு, அல்லது வடக்குமுகமாக அமர்ந்து, 45 நாட்கள், தினந்தோறும் 1000 தரம் இந்த ச்லோகத்தை ஜபம் செய்தால், மஹேந்த்ர ஜாலம் என்னும் ஜால வித்யையில் வல்லவனாவான்.

நிவேதனம்: தேன்.

81

ஸ்ரீ பார்வத்யை நமஃ

அக்நிஸ்தம்பன சக்தி பெற

(அக்நி ஸ்தம்பந வித்யா ஸித்யர்த்தம்)

தேவியின் பின்பாகம்

गुरुत्वं विस्तारं क्षितिधरपतिः पार्वति निजात्
नितम्बा-दाच्छिद्य त्वयि हरणरूपेण निदधे ।
अतस्ते विस्तीर्णो गुरुरयमशेषां वसुमतीं
नितम्ब-प्राग्भारः स्थगयति लघुत्वं नयति च ॥ ८१ ॥

குருத்வம் விஸ்தாரம் க்ஷிதிதரபதிঃ பார்வதி நிஜாத்
நிதம்பா-தாச்சித்ய த்வயி ஹரணரூபேண நிததே |
அதஸ்தே விஸ்தீர்ணோ குருரய-மஶேஷாம் வஸுமதீம்
நிதம்ப-ப்ராக்பாரঃ ஸ்தகயதி லகுத்வம் நயதி ச || 81 ||

கருத்துரை

ஹே பார்வதி தேவி, மலையரசனுன உன் தந்தை கன மாகவும் விசாலமாகவும் உள்ள தன்மையைத் தன் தாழ்வரை யிலிருந்து எடுத்து ஸ்த்ரீதனமாக உனக்குக் கொடுத்துள்ளார். அக்காரணம்பற்றி பெரியதாகவும் விசாலமாகவும் உள்ள உன் பின்புறம் இப்பூவுலகனைத்தையும் மறைக்கிறது. மற்றும் அதை லேசாகச் செய்து விடுகிறது. (இங்கு 'நிதம்பம்' என்னும் சொல் சிலேடையால் தாழ்வரையையும் உடலின் ஆஸனத் தையும் குறிக்கும்.)

ஜப முறையும் பலனும்

காலையில், தென் கிழக்கு முகமாக அமர்ந்து, 16 நாட்கள், தினந்தோறும் 1000 தரம், இந்த சுலோகத்தை ஜபம் செய் தால், அக்னி ஸ்தம்பன சக்தி (நெருப்பு சுடாமலிருக்கும் சக்தி) உண்டாகும்.

நிவேதனம் : *உளுந்து வடையும், வெல்லப் பாயஸமும்.*

82

ஸ்ரீ விதிஜ்ஞாயை நமஃ

ஜலத்தில் நடக்கும் சக்தி பெற

(ஜலோபரி ஸுகஸஞ்சாரார்த்தம்)

தேவியின் தொடையும், முழங்கால்களும்

करीन्द्राणां शुण्डान् कनककदली-काण्डपटलीं
उभाभ्यामूरुभ्या-मुभयमपि निर्जित्य भवती ।
सुवृत्ताभ्यां पत्युः प्रणतिकठिनाभ्यां गिरिसुते
विधिज्ञे जानुभ्यां विबुध-करिकुंभ-द्वयमसि ॥ ८२ ॥

கரீந்த்ராணாம் ஶுண்டாந் கநககதலீ-காண்டபடலீம்
உபாப்யா-முருப்யா-முபயமபி நிர்ஜித்ய பவதீ |
ஸுவ்ருத்தாப்யாம் பத்யுஃ ப்ரணதி-கடிநாப்யாம் கிரிஸுதே
விதிஜ்ஞே ஜாநுப்யாம் விபுத-கரிகும்ப-த்வய-மஸி || 82 ||

கருத்துரை

ஹே விதிமுறைகளை அறிந்த தாயே, நீ உனது தொடைகளால் மதயானையின் துதிக்கைகளையும், தங்கமயமான வாழை மரங்களையும் வெற்றி கொண்டுள்ளாய். மற்றும், நீ பரமசிவனை அடிக்கடிப் பணிவதால், சற்று கடினமாகியுள்ள உன் இரண்டு முழங்கால்களாலே இந்திரனின் யானையாகிய ஐராவதத்தின் தலையிலுள்ள இரண்டு கும்பங்களையும் வெற்றி கொள்கிறாய்.

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு அல்லது வடக்கு முகமாக அமர்ந்து, 45 நாட்கள், தினந்தோறும் இந்த சுலோகத்தை 1000 தரம் ஜபம் செய்தால், ஜலஸ்தம்பனம் (நீர் மேல் சுலபமாக நடத்தல்) செய்வதற்கான சக்தியுண்டாகும்.

நிவேதனம்: திராக்ஷைப்பழமும், தேனும்

83

ஸ்ரீ கிரிஸுதாயை நமঃ

சேனையை அடக்க

(ஸேநா ஸ்தம்பந ஸித்யர்த்தம்)

தேவியின் முழங்காலுக்குக் கீழ்ப்பகுதி

पराजेतुं रुद्रं द्विगुणशरगर्भौ गिरिसुते
निषङ्गौ जङ्घे ते विषमविशिखो बाढ-मकृत ।
यदग्रे दृश्यन्ते दशशरफलाः पादयुगली-
नखाग्रच्छद्मानः सुर-मकुट-शाणैक-निशिताः ॥ ८३ ॥

பராஜேதும் ருத்ரம் த்விகுணஶரகர்ப்பௌ கிரிஸுதே
நிஷங்கௌ ஜங்கே தே விஷமவிஶிகோ பாட-மக்ருத ।
யதக்ரே த்ருஶ்யந்தே தஶஶர-பலாঃ பாதயுகலீ-
நகாக்ரச்சத்மாநঃ ஸுர-மகுட-ஶாணைக-நிஶிதாঃ ॥ 83 ॥

கருத்துரை

ஹே பார்வதிதேவி, மன்மதனுக்குப் பரமேசுவரனை ஜயிப்பதற்காகத் தன்னிடமுள்ள ஐந்து பாணங்கள் போதவில்லை. அதற்காக உன் முழங்காலுக்குக் கீழ்பாகங்களாகிய இரண்டு அம்பராத் தூணிகளில் பத்து பாணங்களை நிரப்பியுள்ளான். அந்த பாணங்கள் உன் காலிலுள்ள பத்து விரல்களே. இந்த விரல்களின் நகங்கள் பாணத்தின் இரும்பு நுனிகள் போலுள்ளன. அவை உன்னை வணங்கும் தேவர்களின் மணிமய கிரீடங்களாகிய சாணைக்கல்லில் தீட்டப்பட்டவை.

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு அல்லது வடக்கு முகமாக அமர்ந்து, 12 நாட்கள், தினந்தோறும் 1000 தரம் இந்த சுலோகத்தை ஜபம் செய்தால், யானைப்படை, குதிரைப்படை முதலியவைகளுடன் கூடிய பெரிய சேனையை அசையாமல் நிறுத்தும் ஸ்தம்பன வித்யை சித்திக்கும்.

நிவேதனம் : தேனும் வெல்லமும் சேர்த்த பாயஸம்.

84

ஸ்ரீ மாத்ரே நம:

பரகாய ப்ரவேச சக்தி பெற

(பரகாய ப்ரவேஶ ஶக்தி ஸித்யர்த்தம்)

தேவியின் பாதங்கள்

श्रुतीनां मूर्धानो दधति तव यौ शेखरतया
ममाप्येतौ मातः शिरसि दयया देहि चरणौ ।
ययोः पाद्यं पाथः पशुपति-जटाजूट-तटिनी
ययो-र्लाक्षा-लक्ष्मी-ररुण-हरिचूडामणि-रुचिः ॥ ८४ ॥

ஶ்ருதீநாம் மூர்த்தாநோ தததி தவ யௌ ஶேகரதயா
மமாப்யேதௌ மாத: ஶிரஸி தயயா தேஹி சரணௌ ।
யயோ: பாத்யம் பாத: பஶுபதி-ஜடாஜூட-தடிநீ
யயோர்-லாக்ஷா-லக்ஷ்மீ-ரருண-ஹரிசூடாமணி-ருசி: ॥ 84 ॥

கருத்துரை

தாயே, எந்த உன் திருவடிகளை வேதங்களின் சிரஸுகளான உபநிஷத்துக்கள் தம் தலைகளில் அணிந்து கொள்கின்றனவோ, அந்த திருவடிகளை ஏழையான என்னுடைய தலையிலும் அமர்த்துவாயாக. இந்த உன் திருவடிகள் பரமசிவனின் ஜடைமுடியில் வசிக்கும் கங்கை நீராலன்றோ கழுவப்படுகின்றன ! மற்றும், உன் திருவடிகளில் பூசிய மருதாணியின் சிவந்த ஒளி, உன் திருவடிகளை வணங்கும் மஹாவிஷ்ணுவின் முடியிலுள்ள கௌஸ்துபமணியின் காந்தியால் ஏற்பட்டதோ எனத்தோன்றுகின்றது !

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு அல்லது வடக்கு முகமாக அமர்ந்து, 1 வருஷம், தினந்தோறும் 1000 தரம் இந்த சுலோகத்தை ஜபம் செய்தால், கூடுவிட்டுக் கூடுபாய்தலென்னும் பரகாயப் பிரவேச வித்யை சித்தியாகும்.

நிவேதனம் : பால்பாயஸம், தேன், சித்ரான்னம்.

85

ஸ்ரீ மதுராயை நமஃ

பூத, ப்ரேத, பிசாசங்களை அகற்ற

(பூத ப்ரேத பிஶாசாதி பாதா நிவ்ருத்யர்த்தம்)

தேவியின் பாதங்கள்

नमोवाकं ब्रूमो नयन-रमणीयाय पदयोः
तवास्मै द्वन्द्वाय स्फुट-रुचि-रसालक्तकवते ।
असूयत्यत्यन्तं यदभिहननाय स्पृहयते
पशूना-मीशानः प्रमदवन-कङ्केलितरवे ॥ ८५ ॥

நமோவாகம்-ப்ரூமோ நயந-ரமணீயாய பதயோஃ
தவாஸ்மை த்வந்த்வாய ஸ்புட-ருசி-ரஸாலக்தகவதே ।
அஸூயத்யத்யந்தம் யதபிஹநநாய ஸ்ப்ருஹயதே
பஶூநா-மீஶாநஃ ப்ரமதவந-கங்கேலி-தரவே ॥ 85 ॥

கருத்துரை

ஹே தேவி, உன்னுடைய திருவடிகள் பார்க்கப் பரவசமூட்டுபவை; மருதாணியால் பளிச்சென மின்னுபவை. இந்த திருவடிகளுக்கு 'நமஸ்காரம்' என்று பணிகின்றேன். இத்தகைய உன் திருவடிகளால் உதைக்கப்பட வேண்டுமென்று ஆசைப்படுகின்ற உத்தியானவனத்திலுள்ள அசோக மரத்தைப் பார்த்து, பசுபதியான பரமசிவன் பொறாமை கொள்கிறார். (அந்த பாக்யம் தனக்குக் கிடைக்கவில்லையே என்று.) உயர்ந்த ஜாதிப் பெண்கள் தம் கால்களால் அசோக மரத்தை உதைத்தால் அது புஷ்பிக்கும் என்பது மரபு.

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு அல்லது வடக்கு முகமாக அமர்ந்து, 12 நாட்கள், தினந்தோறும் 1000 தரம் இந்த சுலோகத்தை ஜபம் செய்தால், பூதம், ப்ரேதம், பிசாசு முதலியவைகளை ஓட்டவும் மாரணம் செய்யவும் சக்தியுண்டாகும்.

நிவேதனம் : பால் பாயஸமும், தேனும்.

86

ஸ்ரீ ஆபோகவதிகாயை நமஃ

பிசாசுகளை ஓட்ட

(பிஶாச பாதா நிவ்ருத்யர்த்தம்)

தேவியின் திருவடிகள் மகிமை

मृषा कृत्वा गोत्रस्खलन-मथ वैलक्ष्यनमितं
ललाटे भर्तारं चरणकमले ताडयति ते ।
चिरादन्तः शल्यं दहनकृत-मुन्मूलितवता
तुलाकोटिक्वाणैः किलिकिलित-मीशान-
रिपुणा ॥ ८६ ॥

ம்ருஷா க்ருத்வா கோத்ரஸ்கலந-மத வைலக்ஷ்யநமிதம்
லலாடே பர்த்தாரம் சரணகமலே தாடயதி தே |
சிராதந்தஃ ஶல்யம் தஹநக்ருத-முந்மூலிதவதா
துலாகோடிக்வாணைஃ கிலிகிலித-மீஶாந-ரிபுணா || 86 ||

கருத்துரை

தாயே, உன் திருவடிகளால் உதைபட வேண்டுமென்ற ஆசையால் பரமசிவன், தான் வேறொரு பெண்ணைக் காதலிப்பது போல் நடித்து, அவள் பெயரால் உன்னை அழைத்து, பிறகு உன்னிடம் பயந்தவர்போல் உன்னை வணங்குகிறார். நீ கோபத்தால் அவர் நெற்றிக்கண்ணில் உதைத்தாய். இதைக் கண்ணுற்ற மன்மதன், நெற்றிக் கண்ணால் தன்னை எரித்த வெகுநாளைய கோபத்தை விட்டு, உன் கால் தண்டையின் " கிலி கிலி " ஒலியால், ' ஜெயித்தேன், ஜெயித்தேன் ' என்று வெற்றியொலி எழுப்புகிறான் போலும் !

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு அல்லது வடக்கு முகமாக அமர்ந்து, 21 நாட்கள், தினந்தோறும் 1000 தரம் இந்த சுலோகத்தை ஜபம் செய்தால், எந்த விதமான பிசாசாக இருந்தாலும் ஓட்டி விடலாம். கும்ப ஜலத்தில் ஜபித்து முழுக்காட்டவும்.

நிவேதனம் : பால் பாயஸம், வாழைப்பழம், தேங்காய்.

87

ஸ்ரீ ஜநந்யை நம:

பாம்பு பயம் நீங்க

(ஸர்ப்ப பய நிவ்ருத்யர்த்தம்)

தேவியின் சரணாரவிந்தங்கள்

हिमानी-हन्तव्यं हिमगिरि-निवासैक-चतुरौ
निशायां निद्राणं निशि चरमभागे च विशदौ ।
वरं लक्ष्मीपात्रं श्रिय-मतिसृजन्तौ समयिनां
सरोजं त्वत्पादौ जननि जयत-श्चित्रमिह किम् ॥ ८७ ॥

***ஹிமாநீ ஹந்தவ்யம் ஹிமகிரி-நிவாஸைக-சதுரௌ
நிஶாயாம் நித்ராணம் நிஶி சரமபாகே ச விஶதௌ |
வரம் லக்ஷ்மீபாத்ரம் ஶ்ரிய-மதிஸ்ருஜந்தௌ ஸமயிநாம்
ஸரோஜம் த்வத்பாதௌ ஜநநி ஜயதஶ்-சித்ரமிஹ கிம் ||***

கருத்துரை

தாயே, உன் திருவடிகளான தாமரை மலர்கள், பனிமலையில் காலையிலும் மாலையிலும் (சற்றும் சுருங்காமல்) மலர்ந்திருப்பவை. ஸமயமென்னும் மதத்தையொட்டித் தன்னிடம் பக்தி செய்பவர்களுக்கு லக்ஷ்மியை (செல்வத்தை) அள்ளித் தருபவை. ஆனால் மஹாலக்ஷ்மியின் இருப்பிடமான மற்ற தாமரை மலர்களோ பனியில் உதிர்ந்து போகும் இதழ்களையுடையவை; இரவில் சுருங்குபவை; எனவே அவைகளை உன் திருவடிகள் வெற்றிகொண்டு விட்டன.

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு அல்லது வடக்கு முகமாக அமர்ந்து, 16 நாட்கள், தினந்தோறும் 1000 தரம் இந்த சுலோகத்தை ஜபம் செய்தால், பாம்புகளால் ஏற்படும் பயம் நீங்கும். ஏவல், சூனியம் செய்யும் சக்தியும் ஏற்படும்.

நிவேதனம் : *பால் பாயஸம், பழம், தேங்காய்.*

88

ஸ்ரீ தேவ்யை நம:

மிருகங்களை ஆகர்ஷிக்க

(ம்ருக ஸ்வாதீநதா ஸித்த்யர்த்தம்)

தேவியின் பாதங்களின் நுனி

पदं ते कीर्तीना प्रपदमपदं देवि विपदां
कथं नीतं सद्भि: कठिन-कमठी-कर्पर-तुलाम् ।
कथं वा बाहुभ्या-मुपयमनकाले पुरभिदा
यदादाय न्यस्तं दृषदि दयमानेन मनसा ॥ ८८ ॥

பதம் தே கீர்த்தீநாம் ப்ரபத மபதம் தேவி விபதாம்
கதம் நீதம் ஸத்பிஃ கடிந-கமட-கர்ப்பர-துலாம் |
கதம் வா பாஹுப்யா-முபயமநகாலே புரபிதா
யதாதாய ந்யஸ்தம் த்ருஷதி தயமாநேந மநஸா || 88 ||

கருத்துரை

ஹே தேவி, உன் திருவடிகளின் நுனி (பக்தர்களைக் காப்பதென்னும்) புகழின் உறைவிடம்; இன்னல்களில்லாத இடம். பரமசிவன் உன்னைத் திருமணம் புரிந்தபோது, மிக்க கருணையோடு உன் திருவடி நுனியைப் பற்றி அம்மி மீது மெதுவாக வைத்தார். இத்தகைய மெத்தென்ற நின் திருவடி நுனியை மிகக் கடினமான ஆமையின் முதுகோட்டிற்குச் சமமென எப்படித்தான் கவிகள் ஒப்பிட்டார்களோ!

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு அல்லது வடக்கு முகமாக அமர்ந்து, 6 மாதங்கள், தினந்தோறும் 1000 தரம் இந்த சுலோகத்தை ஜபம் செய்தால், சிம்மம், புலி போன்ற கொடிய மிருகங்களையும் வசமாக்கி அடக்கியாளலாம்.

நிவேதனம் : பால் பாயஸம், பழம், தேங்காய்.

89

ஸ்ரீ சண்டீயை நமஃ

நோய்கள் நீங்க

(ஸகலவித ரோக நிவாரணார்த்தம்)

தேவியின் பாதங்கள் நுனி

नखै-र्नाकस्त्रीणां करकमल-संकोच-शशिभि:
तरूणां दिव्यानां हसत इव ते चण्डि चरणौ ।
फलानि स्व:स्थेभ्य: किसलय-कराग्रेण ददतां
दरिद्रेभ्यो भद्रां श्रियमनिश-मह्नाय ददतौ ॥ ८९ ॥

நகைர்-நாகஸ்த்ரீணும் கரகமல ஸங்கோச மமிபிஃ
தருணும் திவ்யாநாம் ஹஸத இவ தே சண்டி சரணௌ |
பலாநி ஸ்வஃஸ்த்தேப்யஃ கிஸலய-கராக்ரேண தததாம்
தரித்ரேப்யோ பத்ராம் ம்ரியமநிம-மஹ்நாய ததெளை ||

கருத்துரை

ஹே சண்டிகாதேவி, தேவ லோகத்திலுள்ள கற்பகத் தருக்கள் தமது தளிர்களாகிய கைகளால் தேவர்களுக்கு மட்டுமே கோரும் பலன்களை அளிப்பவை. உன் திருவடிகளோ தேவர்களுக்கும், ஏழைகளுக்கும் நிறைந்த செல்வத்தைக் கோரிய கணத்திலேயே அளிப்பவை. உன்கால் நகங்களாகிய சந்திரர்கள் தேவ கன்னிகைகளின் கைகளாகிய தாமரை மலர் களைச் சுருங்கச் செய்பவை. எனவே கற்பகத் தருக்கள் கைகளால் கொடுப்பவைகளை நீ கால்களாலேயே கொடுத்து, உன் கால் நகங்களின் ஒளியால் அவைகளைப் பரிகசிக்கிருயோ !

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு அல்லது வடக்கு முகமாக அமர்ந்து, 30 நாட்கள், தினந்தோறும் 1000தரம் இந்த சுலோகத்தை ஜபம் செய்தால், தீராத வியாதிகளெல்லாம் நீங்கிச் சுகமுண்டாகும்.

நிவேதனம் : வெல்லப் பாயஸமும், தேனும்.

90

ஸ்ரீ கிரிஸுதாயை நமஃ

பில்லி, சூன்யம், ஏவல் நீங்க

(பரக்ருத தந்த்ர க்ருத்யாதி தோஷ நிவாரணார்த்தம்)

தேவியின் திருவடிகள்

ददाने दीनेभ्यः श्रियमनिश-माशानुसदृशीं
अमन्दं सौन्दर्य-प्रकर-मकरन्दं विकिरति ।
तवास्मिन् मन्दार-स्तबक-सुभगे यातु चरणे
निमज्जन् मज्जीवः करणचरणः षट्चरणताम् ॥ ९० ॥

ததாநே தீநேப்யஃ ஶ்ரியமநிஶ-மாஶாநுஸத்ருஶீம்
அமந்தம் ஸௌந்தர்ய-ப்ரகர-மகரந்தம் விகிரதி |
தவாஸ்மிந் மந்தார-ஸ்தபக-ஸுபகே யாது சரணே
நிமஜ்ஜந்-மஜ்ஜீவஃ கரணசரணஃ ஷட்சரணதாம் || 90 ||

கருத்துரை

ஹே தேவி, உன் பாதக்கமலங்கள், ஏழைகள் விரும்பும் செல்வத்தை எப்பொழுதும் அளிப்பவை; அதிகமான அழகாகிய தேனைப் பெருகியோடச் செய்பவை; கற்பகத் தருவின் பூங்கொத்துப் போலுள்ளவை. இத்தகைய உன் பாதக்கமலங்களில், ஐம்புலன்கள், மனம் இவைகளுடன் நான் நுழைந்து ஆறுகால்களுடன் கூடிய வண்டாக ஆவேனாக!

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு அல்லது வடக்கு முகமாக அமர்ந்து, 30 நாட்கள், தினந்தோறும் 1000 தரம் இந்த ஸ்லோகத்தை ஜபம் செய்தால் பில்லி, சூன்யம், ஏவல் முதலியவைகள் எல்லாம் நீங்கி விடும்.

நிவேதனம் : பாயஸமும், தேனும்.

91

ஸ்ரீ சாரு சரிதாயை நமஃ

ஸ்தாவர சொத்துக்கள் பெற

(க்ஷேத்ர-ஆராம-க்ருஹலாபார்த்தம்)

தேவியின் நடையழகு

पदन्यास-क्रीडा-परिचय-मिवारब्धु-मनसः
स्खलन्तस्ते खेलं भवनकलहंसा न जहति ।
अतस्तेषां शिक्षां सुभगमणि-मञ्जीर-रणित-
च्छला-दाचक्षाणं चरणकमलं चारुचरिते ॥ ९१ ॥

**பதந்யாஸ-க்ரீடா-பரிசய-மிவாரப்து-மநஸஃ
ஸ்கலந்தஸ்-தே கேலம் பவநகலஹம்ஸா ந ஜஹதி |
அதஸ்தேஷாம் ஶிக்ஷாம் ஸுபகமணி-மஞ்ஜீர-ரணித-
ச்சலா-தாசக்ஷாணம் சரணகமலம் சாருசரிதே || 91 ||**

கருத்துரை

புண்ணியமான சரித்திரமுள்ளவளே, நீ காலடி வைக்கும் அழகைப் பயில விரும்பி, உன் அரண்மனையிலுள்ள ஹம்ஸங்கள் தத்தித் தத்தி நடந்து உன் அழகிய நடையை விடாமல் தொடர்ந்து பயில்கின்றன். அந்த சமயத்தில், பத்மராகக்கல் இழைத்த சதங்கையின் ஒலியால் உன் கால்கள் அவைகளுக்குப் பாடம் போதிக்கின்றனவோ என்று எண்ணத் தோன்றுகிறது.

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு அல்லது வடக்கு முகமாக அமர்ந்து, 25 நாட்கள், தினந்தோறும் 2000 தரம் இந்த சுலோகத்தை ஜபம் செய்தால், எதிர்பாராத வகையில் தனலாபமும் பூமிலாபமும் ஏற்படும்.

நிவேதனம் : ஏதாவது சிறந்த நைவேத்யம்.

92

ஸ்ரீ விஜயாயை நம:

ராஜாங்கத் தலைமை பெற
(ராஜ்ய நிர்வாஹகத்வ ஸித்யர்த்தம்)

தேவியின் முழு உருவம்

गतास्ते मञ्चत्वं द्रुहिण-हरि-रुद्रेश्वर-भृतः
शिवः स्वच्छ-च्छाया-घटित-कपट-प्रच्छदपटः ।
त्वदीयानां भासां प्रतिफलन-रागारुणतया
शरीरी शृङ्गारो रस इव दृशां दोग्धि कुतुकम् ॥९२॥

கதாஸ்தே மஞ்சத்வம் த்ருஹிண-ஹரி-ருத்ரேஶ்வர-ப்ருத:
ஶிவ: ஸ்வச்ச-ச்சாயா-கடித-கபட-ப்ரச்சதபட: |
த்வதீயாநாம் பாஸாம் ப்ரதிபலந-ராகாருணதயா
ஶரீரீ ஶ்ருங்காரோ ரஸ இவ த்ருஶாம் தோக்தி குதுகம்||92||

கருத்துரை

தாயே, பிரமன், நாரணன், ருத்ரன், ஈசுவரன் என்னும் நால்வரும் உன் சேவகர்கள். இவர்கள் நீ அமரும் கட்டிலின் கால்களாக நின்று ஸதா உன்னை ஸேவிக்கிறார்கள். உன் கணவனான ஸதாசிவன், தூய வெள்ளை வஸ்திரத்தைப் போர்த்திக் கொண்டு, உன்னுடைய சிவந்த காந்தியானது பிரதிபலிப்பதால் சிருங்கார ரஸமே உருவெடுத்தவர்போல் கண்களுக்கு மகிழ்ச்சி தருகிறார்.

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு அல்லது வடக்கு முகமாக அமர்ந்து, 30 நாட்கள், தினந்தோறும் 4000 தரம் இந்த சுலோகத்தை ஜபம் செய்தால், அலுவலகங்களில் உயர்ந்த பதவி, மந்திரி பதவி போன்ற உயர் பதவிகளெல்லாம் கிடைக்கும்.

நிவேதனம் : சித்ரான்னங்கள்.

93

ஸ்ரீ யோக்யாயை நமஃ

விரும்பியது பெற

(சிந்தித மநோரத லாபார்த்தம்)

காமேசுவரனின் கருணையே பராசக்தி

अराला केशेषु प्रकृतिसरला मन्दहसिते
शिरीषाभा चित्ते दृषदुपलशोभा कुचतटे ।
भृशं तन्वी मध्ये पृथु-रुरसिजारोह-विषये
जगत्त्रातुं शंभो-जयति करुणा काचिदरुणा ॥ ९३ ॥

*அராலா கேஶேஷு ப்ரக்ருதிஸரலா மந்தஹஸிதே
ஶிரீஷாபா சித்தே த்ருஷதுபலஶோபா குசதடே ।
ப்ருஶம் தந்வீ மத்யே ப்ருது-ருரஸிஜாரோஹ-விஷயே
ஜகத் த்ராதும் ஶம்போர்-ஜயதி கருணா காசிதருணா ॥ 93 ॥*

கருத்துரை

தாயே, மனதுக்கும் வாக்கிற்கும் எட்டாததும், சிவப்பு வர்ணமுள்ளதுமான பரமசிவனின் கருணாசக்தியே நீ. அந்த சக்தியே—சுருட்டை மயிரும், இயற்கையான புன்முறுவலும், காட்டு வாகைப் பூப்போல் மெத்தென்ற மனமும், கல்லுக்குள்ளே இருக்கும் மணிக்கல்லின் காந்தியுள்ள ஸ்தனப்ரதேசமும், மிகவும் இளைத்த இடுப்பும், பருமனான ஸ்தனங்களும், பின்தட்டுகளும் தாங்கிய உருவத்துடன் உலகத்தை ரக்ஷிக்கின்றது.

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு அல்லது வடக்கு முகமாக அமர்ந்து, 25 நாட்கள், தினந்தோறும் இந்த சுலோகத்தை 2000 தரம் ஜபம் செய்தால், எண்ணிய எண்ணங்களெல்லாம் நிறைவேறும்.

நிவேதனம் : தேன்.

94

ஸ்ரீ ஸதீதேவ்யை நமঃ

பிறரால் போற்றப்பட

(பரைঃ ஸ்துத்யதாப்த்யர்த்தம்)

தேவியின் ஸ்நானம்

कलङ्कः कस्तूरी-रजनिकर-बिम्बं जलमयं
कलाभिः कर्पूरै-र्मरकतकरण्डं निबिडितम् ।
अतस्त्वद्भोगेन प्रतिदिनमिदं रिक्तकुहरं
विधि-र्भूयो भूयो निबिडयति नूनं तव कृते ॥ ९४ ॥

கலங்கঃ கஸ்தூரீ-ரஜநிகர-பிம்பம் ஜலமயம்
கலாபிঃ கர்ப்பூரைர்-மரகதகரண்டம் நிபிடிதம் ।
அதஸ்-த்வத்போகேந ப்ரதிதிந-மிதம் ரிக்தகுஹரம்
விதிர்-பூயோ பூயோ நிபிடயதி நூநம் தவ க்ருதே ‖ 94 ‖

கருத்துரை

தாயே, மரகத ரத்தினத்தால் செய்யப்பட்ட பாத்திரம் போலுள்ள சந்திர மண்டலத்தில் நீ நீராடுகிறாய். அந்த பாத்திரத்தில் சந்திரனின் மத்தியில் காணப்படும் களங்கமே கஸ்தூரியாகவும், சந்திரனே நிர்மலமான ஜலமாகவும், அவன் கிரணங்களே பச்சைக் கற்பூரப் பொடிகளாகவும் உள்ளன. தினந்தோறும் நீ ஸ்நானம் செய்த பின் காலியாக உள்ள அந்த பாத்திரத்தை மெள்ள மெள்ள பிரம்மதேவன் நிரப்புகிறான்.

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு அல்லது வடக்கு முகமாக அமர்ந்து, 45 நாட்கள், தினந்தோறும் 1000 தரம் இந்த சுலோகத்தை ஜபம் செய்தால், மற்றவர்களால் நன்கு புகழப்பெறுவார்கள்.

நிவேதனம் : வெண்பொங்கலும், பழமும்.

95

ஸ்ரீ கருணையை நம:

ரணங்கள், புண்கள் ஆற

(நிர்வ்ரணதா - ஸித்யர்த்தம்)

தேவியை ஆராதிக்கும் தகுதி

पुरारातेरन्तःपुरमसि तत-स्त्वच्चरणयोः
सपर्या-मर्यादा तरलकरणाना-मसुलभा ।
तथा ह्येते नीताः शतमखमुखाः सिद्धिमतुलां
तव द्वारोपान्त-स्थितिभि-रणिमाद्याभि-रमराः ॥९५॥

புராராதே-ரந்த:புரமஸி ததஸ-த்வச்சரணயோ:
ஸபர்யா-மர்யாதா தரலகரணாநா-மஸுலபா ।
ததா ஹ்யேதே நீதா: ஶதமகமுகா: ஸித்திமதுலாம்
தவ த்வாரோபாந்த-ஸ்திதிபி-ரணிமாத்யாபி-ரமரா: ॥ 95 ॥

கருத்துரை

ஹே பகவதி, நீ திரிபுரங்களை அழித்த பரமசிவனின் அந்தப்புரத்தில் வசிக்கும் பட்டமஹிஷி. ஆகவே, புலன்களை வெல்லாதவர்கள் யாரும் உன் திருவடிகளின் அருகில் வந்து அவைகளுக்குப் பூஜை செய்யும் தகுதி கிடைக்காது. ஏனென்றால், இந்திராதி தேவர்களும் அந்த பாக்யம் கிடைக்காமல், உன் துவாரபாலகிகளாக உள்ள அணிமாதி ஸித்திகளை மட்டுமே அடைந்து திரும்பி விட்டார்கள்.

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு அல்லது வடக்கு முகமாக அமர்ந்து, 45 நாட்கள், தினந்தோறும் 108 தரம் இந்த சுலோகத்தை ஜபம் செய்தால் தீராத ரணங்கள், புண்கள் ஆறிவிடும். இதற்கான யந்த்ரத்தைத் தங்கத்தகட்டில் எழுதி, எண்ணெயில் வைத்து ஜபித்து, அந்த எண்ணெயைப் பூசினல் விரைவில் குணமாகும்.

நிவேதனம் : எள்ளோரையும், சர்க்கரையும்.

96

ஸ்ரீ ஸதீநாம் அசரமாயை நம:

நல்ல அறிவு பெற

(ஸுபுத்தி லாபார்த்தம்)

தேவியின் பதிவிரதைத் தன்மை

कलत्रं वैधात्रं कति कति भजन्ते न कवयः
श्रियो देव्याः को वा न भवति पतिः कैरपि धनैः ।
महादेवं हित्वा तव सति सतीना-मचरमे
कुचाभ्या-मासङ्गः कुरवक-तरो-रप्यसुलभः ॥ ९६ ॥

கலத்ரம் வைதாத்ரம் கதி கதி பஜந்தே ந கவய:
ஶ்ரியோ தேவ்யா: கோ வா ந பவதி பதி: கைரபி தனை: |
மஹாதேவம் ஹித்வா தவ ஸதி ஸதீநா -மசரமே
குசாப்யா-மாஸங்க: குரவக-தரோ-ரப்யஸுலப: ‖ 96 ‖

கருத்துரை

ஹே பதிவிரதா சிரோமணியே, பிரம்மாவின் பத்தினியான ஸரஸ்வதியை எந்த எந்தக் கவிகள்தாம் அடையாமலிருக்கிறார்கள்! அதே போன்று, ஏதாவது ஒரு செல்வத்தைப் பெறுவதன்மூலம் எவன்தான் லக்ஷ்மிக்குக் கணவனாக ஆவதில்லை? உன்னுடைய ஸ்தனங்களின் சேர்க்கை பரமசிவனைத் தவிர்த்து, மருதாணி மரத்துக்குக்கூட கிடைப்பதில்லையே! நீயல்லவோ சிறந்த பதிவிரதை!

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு அல்லது வடக்கு முகமாக அமர்ந்து, 45 நாட்கள், தினந்தோறும் 1000 தரம் இந்த சுலோகத்தை ஜபம் செய்தால், நல்ல அறிவைப் பெறலாம். மற்றும் சித்திரங்கள் தீட்டும் கலைஞர்கள் ஜபித்தால், அக்கலையில் வல்லமையும் புகழும் பெறுவார்கள்.

நிவேதனம் : பால் பாயஸமும், தேனும்.

97

ஸ்ரீ பரப்ரஹ்ம மஹிஷ்யை நமஃ

வாக்கு வன்மையும் உடல் உறுதியும் பெற

(ப்ரவசநஶக்தி-ஶரீரதார்ட்ய ஸித்யர்த்தம்)

தேவியின் சொரூபம்

गिरामाहु-र्देवीं द्रुहिणगृहिणी-मागमविदो
हरेः पत्नीं पद्मां हरसहचरी-मद्रितनयाम् ।
तुरीया कापि त्वं दुरधिगम-निस्सीम-महिमा
महामाया विश्वं भ्रमयसि परब्रह्ममहिषि ॥ ९७ ॥

கிராமாஹு-ர்தேவீம் த்ருஹிணக்ருஹிணீ-மாகமவிதோ
ஹரே: பத்நீம் பத்மாம் ஹரஸஹசரீ-மத்ரிதநயாம் ।
துரீயா காபி த்வம் துரதிகம-நிஸ்ஸீம-மஹிமா
மஹாமாயா விஶ்வம் ப்ரமயஸி பரப்ரஹ்ம-மஹிஷி ॥ 97 ॥

கருத்துரை

ஹே பரப்ரஹ்மத்தின் பட்டமஹிஷியே, வேத ரஹஸ்யத்தை அறிந்தவர்கள், நீயே பிரம்மனின் பத்தினியாகிய ஸரஸ்வதி; நீயே விஷ்ணுவின் பத்தினியாகிய லக்ஷ்மி; நீயே சிவனின் பத்தினியாகிய பார்வதி என்று கூறுகின்றனர். ஆனால் நீயோ மனத்திற்கும் வாக்கிற்கும் எட்டாத மஹிமையுள்ள நான்காவது தத்துவம். அளவில்லாமல் சிரமப்பட்டும் அடைய முடியாத மாஹாத்மியமுள்ள மஹாமாயையாக நீ இருந்து கொண்டு உலகைப் பிரமிக்க வைக்கிறாய்.

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு அல்லது வடக்கு முகமாக அமர்ந்து, 8 நாட்கள், தினந்தோறும் 1000 தரம் இந்த சுலோகத்தை ஜபம் செய்தால், சொன்ன வார்த்தை பலித்தலாகிய வாக்கு ஸித்தியுண்டாகும். உடல் நலம் பெருகும்.

நிவேதனம் : *தேன், க்ஷீரான்னம்.*

98

ஸ்ரீ மாத்ரே நம:

மலடு நீங்க

(கர்ப்போத்பத்யர்த்தம்)

தேவியின் கருணை

कदा काले मातः कथय कलितालक्तकरसं
पिबेयं विद्यार्थी तव चरण-निर्णेजन-जलम् ।
प्रकृत्या मूकानामपि च कविता-कारणतया
कदा धत्ते वाणीमुखकमल-ताम्बूल-रसताम् ॥ ९८ ॥

கதா காலே மாத: கதய கலிதாலக்தகரஸம்
பிபேயம் வித்யார்த்தீ தவ சரண-நிர்ணேஜந-ஜலம் ।
ப்ரக்ருத்யா மூகாநாமபி ச கவிதா-காரணதயா
கதா தத்தே வாணீ-முககமல-தாம்பூல-ரஸதாம் ॥ 98 ॥

கருத்துரை

தாயே, நான் கல்வியறிவை எதிர்பார்ப்பவன். ஆகவே, மருதாணியால் அலங்கரிக்கப்பட்ட உன் திருவடிகளை அலம்பிய தீர்த்தத்தை நான் எப்பொழுது பருகுவேன்? சொல். அந்த தீர்த்தம் ஊமைகளுக்கும் கவிதை இயற்றும் சக்தியை அளிக்க வல்லதாகையால், ஸரஸ்வதிதேவியின் வாயால் மெல்லப்பட்ட தாம்பூல ரஸத்தின் தன்மையை அது எப்பொழுது அடையப் போகிறது?

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு அல்லது வடக்கு முகமாக அமர்ந்து, 30 நாட்கள், தினந்தோறும் 1000 தரம் இந்த சுலோகத்தை ஜபம் செய்தால், கர்ப்பம் தரிக்காத பெண்கள் கர்ப்பம் தரிப்பார்கள். ஸ்த்ரீ சுகம் பெறமுடியாத ஆண்களுக்கு அச்சுகம் கிடைக்கும்.

நிவேதனம் : தேன்.

99

ஸ்ரீ புராராதே-ரந்த:புராயை நம:

ஆரோக்யமும் ஸகல வசதிகளும் பெற

(ஆரோக்யஸித்யர்த்தம், ஸகல ஸௌகர்ய ஸித்யர்த்தம்)

தேவி உபாஸனையின் பலன்

सरस्वत्या लक्ष्म्या विधि-हरि-सपत्नो विहरते
रतेः पातिव्रत्यं शिथिलयति रम्येण वपुषा ।
चिरं जीवन्नेव क्षपित-पशुपाश-व्यतिकरः
परानन्दाभिख्यं रसयति रसं त्वद्भजनवान् ॥ ९९ ॥

ஸரஸ்வத்யா லக்ஷ்ம்யா விதி-ஹரி-ஸபத்நோ விஹரதே
ரதே: பாதிவ்ரத்யம் ஶிதிலயதி ரம்யேண வபுஷா ।
சிரம் ஜீவந்நேவ க்ஷபித-பஶுபாஶ-வ்யதிகர:
பராநந்தாபிக்யம் ரஸயதி ரஸம் த்வத்-பஜநவாந் ॥ 99 ॥

கருத்துரை

ஹே தேவி, உன்னைப் பூஜிப்பவன் பிரம்மா, விஷ்ணு என்பவர்களுக்குப் பகைவனாகி, அவர்களுடைய பத்தினிகளாகிய ஸரஸ்வதி, லக்ஷ்மிதேவிகளுடன் விளையாடுவான். (ஞானமும் செல்வமும் பெறுவான் என்பது கருத்து). தன் அழகிய மேனியால் ரதிதேவியின் பதிவிரதைத் தன்மையை அழிப்பான். ஜீவன், அவித்யை என்பவைகளுக்கிடையே உள்ள பிணைப்பை அறுத்து, வெகுகாலம் ஜீவித்துக் கொண்டே பேரானந்தத்தை அநுபவிப்பான்.

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு அல்லது வடக்கு முகமாக அமர்ந்து, 15 நாட்கள், தினந்தோறும் 1000 தரம் இந்த சுலோகத்தை ஜபம் செய்தால் உடல் வலிவும், ஸகல சுகமும் உண்டாகும்.

நிவேதனம் : வெண்பொங்கல், உளுந்துவடை, தேன்.

100

ஸ்ரீ ஜநந்யை நமஃ

ஸகல காரிய ஸித்தி பெற

(ஸகல கார்ய ஸித்யர்த்தம்)

प्रदीप-ज्वालाभि-र्दिवसकर-नीराजनविधिः
सुधासूते-श्चन्द्रोपल-जललवै-रर्घ्यरचना ।
स्वकीयैरम्भोभिः सलिलनिधि-सौहित्यकरणं
त्वदीयाभि-र्वाग्भि-स्तव जननि वाचां
स्तुतिरियम् ॥ १०० ॥

ப்ரதீப-ஜ்வாலாபிர் -திவஸகர-நீராஜநவிதிஃ
ஸுதாஸூதேஶ்-சந்த்ரோபல-ஜலலவை-ரர்க்யரசநா ।
ஸ்வகீயை-ரம்போபிஃ ஸலிலநிதி-ஸௌஹித்யகரணம்
த்வதீயாபிர்-வாக்பிஸ் தவ ஜநநி வாசாம் ஸ்துதிரியம்||100||

॥ इति श्रीशंकराचार्य-विरचिता सौन्दर्यलहरी समाप्ता ॥

|| இதி ஸ்ரீசங்கராசார்ய-விரசிதா
ஸௌந்தர்யலஹரீ ஸமாப்தா ||

கருத்துரை

ஹே வாக்தேவதையே, தீவட்டியின் ஜ்வாலையைக் கொண்டே சூரியனுக்கு ஹாரதிசெய்வது போலவும், சந்திர காந்தக் கல்லிலிருந்து பெருகும் நீரைக் கொண்டே சந்திரனுக்கு அர்க்யம் தருவது போலவும், ஸமுத்திர ஜலத்தைக் கொண்டே ஸமுத்திரத்தைத் திருப்தி செய்வது போலவும், உன்னுடைய வாக்குகளைக் கொண்டேயல்லவா உன்னுடைய இந்த ஸ்தோத்ரம் அமைந்தது !

ஜப முறையும் பலனும்

காலையில், கிழக்கு, அல்லது வடக்கு முகமாக அமர்ந்து, 16 நாட்கள் தினந்தோறும் 1000 தரம் இந்த சுலோகத்தை ஜபம் செய்தால் ஸகல காரியங்களிலும் ஸித்தியுண்டாகும்.

நிவேதனம் : *நாவல்பழமும், த்ரிமதுரமும்.*

சுபமஸ்து

॥ श्रीः ॥

श्री ललिता पञ्चरत्नम्

ஸ்ரீ லலிதா பஞ்சரத்நம்

1. प्रातः स्मरामि ललिता वदनारविन्दं
बिम्बाधरं पृथुल मौक्तिक शोभि नासम् ।
आकर्णदीर्घ नयनं मणिकुण्डलाढ्यं
मन्द स्मितं मृगमदोज्वल फालदेशम् ॥

ப்ராதః ஸ்மராமி லலிதா வதநாரவிந்தம்
பிம்பாதரம் ப்ருதுல மௌக்திக ஶோபிநாஸம் ।
ஆகர்ண தீர்க்க நயநம் மணிகுண்டலாட்யம்
மந்தஸ்மிதம் ம்ருகமதோஜ்வல பாலதேஶம் ॥

2. प्रातर्भजामि ललिता भुज कल्पवल्लीं
रक्ताङ्गुलीय लसदङ्गुलि पल्लवाढ्याम् ।
माणिक्यहेम वलयाङ्गद शोभमानां
पुण्ड्रेक्षु चाप कुसुमेषु सृणी दधानाम् ॥

ப்ராதர் பஜாமி லலிதா புஜகல்பவல்லீம்
ரக்தாங்குலீய லஸதங்குலி பல்லவாட்யாம் ।
மாணிக்ய ஹேம வலயாங்கத ஶோபமாநாம்
புண்ட்ரேக்ஷு சாப குஸுமேஷு ஸ்ருணீ ததாநாம் ॥

3. प्रातर्नमामि ललिता चरणारविन्दं
भक्तेष्टदान निरतं भवसिन्धुपोतम् ।
पद्मासनादि सुरनायक पूजनीयं
पाशाङ्कुशध्वज सुदर्शन लाञ्छनाढ्यम् ॥

ப்ராதர் நமாமி லலிதா சரணாரவிந்தம்
பக்தேஷ்டதாந நிரதம் பவஸிந்துபோதம் ।
பத்மாஸநாதி ஸுரநாயக பூஜநீயம்
பாஶாங்குஶ த்வஜ ஸுதர்ஶந லாஞ்ச்சநாட்யம் ॥

4. प्रातः स्तुवे परशिवां ललितां भवानीं
त्रय्यन्त वेद्य विभवां करुणानवद्याम् ।
विश्वस्य सृष्टि विलय स्थिति हेतुभूतां
विद्येश्वरीं निगमवाङ् मनसादि दूराम् ॥

ப்ராதஃ ஸ்துவே பரஶிவாம் லலிதாம் பவாநீம்
த்ரய்யந்த வேத்யவிபவாம் கருணாநவத்யாம் ।
விஶ்வஸ்ய ஸ்ருஷ்டி விலயஸ்திதி ஹேதுபூதாம்
வித்யேஶ்வரீம் நிகமவாங் மநஸாதி தூராம் ॥

5. प्रातर्वदामि ललिते तव पुण्यनाम
कामेश्वरीति कमलेति महेश्वरीति ।
श्री शाम्भवीति जगतां जननी परेति
वाग्देवतेति वचसा त्रिपुरेश्वरीति ॥

ப்ராதர் வதாமி லலிதே தவ புண்யநாம
காமேஶ்வரீதி கமலேதி மஹேஶ்வரீதி ।
ஶ்ரீஶாம்பவீதி ஜகதாம் ஜநநீ பரேதி
வாக்தேவதேதி வசஸா த்ரிபுரேஶ்வரீதி ॥

6. यः श्लोक पञ्चकमिदं ललिताम्बिकायाः
सौभाग्यदं सुललितं पठति प्रभाते ।
तस्मै ददाति ललिता झटिति प्रसन्ना
विद्यां श्रियं विमल सौख्य मनन्त कीर्तिम् ॥

யஃ ஶ்லோக பஞ்சகமிதம் லலிதாம்பிகாயாஃ
ஸௌபாக்யதம் ஸுலலிதம் படதி ப்ரபாதே ।
தஸ்மை ததாதி லலிதா ஜடிதி ப்ரஸந்நா
வித்யாம் ஶ்ரியம் விமலஸௌக்ய மநந்தகீர்த்திம் ॥

|| ஸ்ரீ: ||



ஸ்ரீஸரஸ்வதீ-பார்வதீ-லக்ஷ்மீ ஸ்துதிః

ஸ்ரீமச் சந்தந சர்ச்சிதோஜ்வலவபுః ஶுக்லாம்பரா மல்லிகா-
மாலா லாலிதகுந்தலா ப்ரவிலஸந்முக்தாவளீ ஶோபநா |
ஸர்வஜ்ஞாந நிதாந புஸ்தகதரா ருத்ராக்ஷ மாலாங்கிதா
வாக்தேவீ வதநாம்புஜே வஸது மே த்ரைலோக்யமாதா ஶுபா ||

கல்யாணீ கமநீய ஸுந்தரவபுః காத்யாயநீ காளிகா
காலா ஶ்யாமள மேசக த்யுதிமதீ காதி த்ரிபஞ்சாக்ஷரீ |
காமாக்ஷீ கருணாநிதிః கவிமலாரண்யாதி தாவாநலா
மாமம்பா புரவாஸிநீ பகவதீ **ஹேரம்பமாதாऽவது** ||

வந்தே **பத்மகராம்** ப்ரஸந்நவதநாம் ஸௌபாக்யதாம் பாக்யதாம்
ஹஸ்தாப்யாம் அபயப்ரதாம் மணிகணைர் நாநாவிதைர் பூஷிதாம் |
பக்தாபீஷ்ட பலப்ரதாம் ஹரிஹரப்ரஹ்மாதிபிஸ் ஸேவிதாம்
பார்ஶ்வே பங்கஜ ஶங்க பத்ம நிதிபிர் யுக்தாம் ஸதா ஶக்திபிః ||

|| சுபமஸ்து ||

ஸ்ரீ :

படிப்போர் நெஞ்சத்தைப்பற்றி மனத்தைப்
பாகாய் உருகவைக்கும் அருள்நெறி காட்டும்

லிஃப்கோவின் வெளியீடுகள்

1. ஸ்ரீ சனிக்ரஹ சாந்தி பூஜா விதானம்
(ஜபம், ஹோமம், தானம், ஸஹஸ்ரநாமம், கவசம்
அஷ்டகம், வ்ரதம் முதலியன)
2. நவக்ரஹ ஸ்தோத்ரம்
3. ஸகலகார்ய ஸித்தியும் ஸ்ரீ தேவீ பாகவதமும்
4. ஸ்ரீ மஹா பக்த விஜயம்
5. பெரிய புராணம் - சுருக்கம்
6. திருவிளையாடற் புராணம் - சுருக்கம்
7. ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம் (தமிழ்)
8. ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம் (ஸம்ஸ்க்ருதம்)
9. ஸ்ரீ லக்ஷ்மீ ஸஹஸ்ரநாமம்
10. ஸ்ரீ துர்கா ஸஹஸ்ரநாமம்
11 அபிராமி அந்தாதி—மூலமும் உரையும்

Sri Soundarya Lahari

THE LITTLE FLOWER CO.

CHENNAI - 600 017 ★ TRICHY - 620 002.

ISBN 81-87130 51-5